பக்கங்கள்: இருபத்தெட்டு +A,B=30

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 09 ஞாயிற்றுக்கிழமை (25.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 241

## அத்தியாவசியப் பொருள் விலை குறைப்பு, சம்பளம் உயர்வு கோரி

# அரசு சார்பு இடதுசாரிக் கட்சிகள்

# ஒக.12 இல் ஹர்த்தால், ஆர்ப்பாட்டம்

### தொழிற்சங்கங்கள், வெகுசன அமைப்புகள், கட்சிக் கிளைகள் பங்கேற்கும்

கொழும்பு, ஜூலை 25

**அரசாங்கத்துக்கு ஆதரவளித்து அதனுடன் சேர்ந்து இயங்கும் ஐந்து இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பான சோஷலிஸ மக்கள் முன்னணி, இரண்டு பிரதான கோரிக்கைகளை முன் வைத்து, எதிர்வரும் ஒகஸ்ட் 12 ஆம் திகதியன்று ஹர்த்தால் அனுஷ்டிப்பதுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் நடத்தவுள்ளது.**

*அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைக்கவேண்டும், 2500 ரூபா சம்பள உயர்வு விரைவில் வழங்கப் படவேண்டும், என்ற இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்நிறுத்தியே ஹர்த்தாலும், ஆர்ப்பாட்டமும் நடத்தப்படவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

(28ஆம் பக்கம் பார்க்க)

## "கறுப்பு ஜூலை" சுவரொட்டியால் கொழும்பில் ஏற்பட்ட குழப்ப நிலை

கொழும்பு, ஜூலை 25

ஜே.வி.பி. சார்பு மாணவர் அமைப்பினால் கொழும்பில் ஒட்டப்பட்ட 'கறுப்பு ஜூலையை' நினைவுபடுத்தும் சுவரொட்டிகளால் குழப்பநிலை ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

ஜே.வி.பி. சார்பு மாணவர் அமைப்பான சோசலிஸ இளைஞர் அமைப்பினால் கறுப்பு ஜூலையை நினைவுகூருமுகமாக ''துவாரகாவின் அம்மா'' என்று தலைப்பிடப்பட்ட சுவரொட்டிகள் கொழும்பின் பல

(28ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் யுத்த இறுதிச் சம்பவங்கள்; அமெரிக்க காங்கிரஸுக்கு விசேட அறிக்கை

வாஷிங்ரன், ஜூலை 25

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதி நாள்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை எதிர்வரும் ஒகஸ்ட் மாதத் தின் முதல் வாரத்தில் அமெரிக்க காங்கிரஸில் முன்வைக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் இடம் பெற்றுள்ளதாக பிரசாரப்படுத்தப் பட்டுள்ள அநேகமான சம்பவங்கள் பற்றி இவ்வறிக்கையில் நடுவு நிலை கொண்டதொரு ஆய்வு மேற்கொள்ளப்படக் கூடும் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அரசின் போர்க் குற்றங்கள் தொடர்பான

(28ஆம் பக்கம் பார்க்க)

## தலைவெட்டப்பட்ட சடலம் நெடுந்தீவில் கரை ஒதுங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 25

நெடுந்தீவு கடற்கரைப் பகுதியில் தலைவெட்டப்பட நிலையில் இனந்தெரியாத சடலம் ஒன்று கிடந்ததை கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கண்டு தகவல் தெரிவித்தனர்.

மீனவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் நெடுந்தீவுப் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

சடலத்தை பார்வையிட்ட ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.வசந்தசேனன் அதனை அடையாளம் காணவும் பிரேத பரிசோதனை நடத்தவும் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். 40 வயது மதிக்கத்தக்க ஒருவரின் இந்தச் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-1)

## மீள்குடியமர்வுக்கான இந்தியாவின் நிதி இந்தியன் வங்கியின் யாழ். கிளை ஊடாக

சென்னை, ஜூலை 25

இலங்கையில், வன்னியில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்த்தப் பணிக்காக இந்தியா வழங்கவுள்ள ஆயிரம் கோடி ரூபா உதவியைக் கையாள்வதற்காக இந்தியன் வங்கி யாழ்ப்பாணத்தில் தனது கிளையைத் திறக்கவிருக்கிறது.

அந்த வங்கியின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான ரி.எம்.பஹசின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் - தெரிவித்தவையாவது :-

இலங்கையில் யாழ்ப்பாணத்திலும் கண்டி

(28ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள்; சுதந்திர விசாரணை கோரி லண்டனில் 'நள்ளிரவுக் கண்காணிப்பு'

லண்டன், ஜூலை 25

பிரிட்டனில் வாழும் தமிழர்கள், லண்டனில் பிரதமரின் அலுவலகம் அமைந்துள்ள டவுணிங் வீதியில் நேற்றுமுன்தினம் ''நள்ளிரவுக் கண்காணிப்பு'' நிகழ்வு ஒன்றை நடத்தினர்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபை அலுவலகங்கள் உடனடியாக கிளிநொச்சிக்கு இடம்மாறா

### ஜனவரிக்கு பின்னரே பெரும்பாலும் சாத்தியம்

திருகோணமலை, ஜூலை 25

திருகோணமலையில் இயங்கும் வடக்கு மாகாண சபை அலுவலகங்களை கிளிநொச்சிக்கு மாற்றும் செயற்பாடு ஜனவரி மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

(28ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புச் சிறைக் கூடத்தில் முறுகல்; தமிழ்க் கைதிகள் மூன்று பேர் காயமுற்றனர்!

கொழும்பு, ஜூலை 25

கொழும்பு விளக்கமறியல் கைதிகள் சிறைச்சாலையில் சக சிறைக் கைதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மூன்று தமிழ்க் கைதிகள் காயமடைந்தனர் என அறிய வந்தது.

இக் கைதிகளின் றொக்சான் குஞ்சன் (வயது -36) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலை

(28ஆம் பக்கம் பார்க்க)



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் அடகுச்சேவை

- 365 நாள் வங்கிச் சேவை
- நீடித்த வங்கி நேரங்கள்
- அதிகபட்ச பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்
- முன்னறிவித்தல் இன்றி மீட்கலாம்
- பகுதி பகுதியான மீட்பு வசதி

யாழ்ப்பாணக் கிளை: 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 4 920 283 - 5

அடகுச்சேவை வவுனியா மற்றும் மட்டக்களப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி எல் சி - PQ 118

Nations Trust Bank
Nations
Gold Advances

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ் மக்களின் நலன் கருதி......

சிங்கர் வழங்கும் இலவச சமையல், தையல் பயிற்சியும் விளக்கமும்.

அனுமதி முற்றிலும் இலவசம்

சமையல், தையல் கலையின் நுட்பங்களை அறிந்துகொள்ள ஓர் அரியசந்தர்ப்பம்!

இடம்:- சிங்கர் பிளஸ் காட்சியறை
#136,கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். 021 2240555
நேரம்:- காலை 9.00 - 12.00 மணி

திகதி 27.07.2010

இடம்:- சிங்கர் பிளஸ் காட்சியறை
#01;ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2225408
நேரம்:- பிற்பகல் 1.00 - 4.00 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பத்தாம் ஆண்டு நினைவலைகள்

"மறுபிறவி மானுட
உண்மையெனில்
மறுபடியும்
பிறந்திடுங்கள்
எங்கள்
உறவாய்..."



அமரர்

## திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000

சின்னையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

-குடும்பத்தினர்-

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி பொன்னம்மா



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பொன்னம்மா நேற்று (2010.07.24) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து கந்தசாமியின் (பசறை முன்னாள் வர்த்தகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவகாமியின் மகளும் காலஞ்சென்ற தங்கமுத்து (கோமளம்) மற்றும் உலகநாதன், நாகேஸ்வரி, பத்மநாதன், தில்லைநாதன், சண்முகநாதன், சிவநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிரவேலு, இராசேஸ்வரி, புவனேஸ்வரி, தவமலர், உமாதேவி, நாகரஞ்சினி, காலஞ்சென்ற அருளம்பலம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (2010.07.25) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்கோடை,
காரைநகர். (100876)

தகவல்:
குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் நவீன குளிரூட்டப்பட்ட 4 அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நாளாந்தம் or மாதாந்தம் அடிப்படையிலும் கொடுக்கப்படும். வாகனத் தரிப்பிட வசதிகளும் உண்டு. N.GO'S நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0777062349, 021 222 2734

## தேவை

கல் உடைக்கும் ஆலைக்கு (கிறேசர்) பிளைக்ஸ்ரோன், JK (4சிலிண்டர்) அல்லது இதற்கு நிகரான இஞ்சின், சல்லடை மற்றும் உபகரணங்கள் தேவை. அத்துடன் இன்ரநெற் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு கணனி அறிவுள்ளவர்களும் தேவை.
தொடர்பு:0777215005

## அறைகள் வாடகைக்குத் தேவை

யாழ்.மருத்துவ பீடத்தில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் நால்வருக்கு பல்கலைக்கழகச் சூழலில் அல்லது சமீபத்தில் அறைகள் வாடகைக்குத் தேவை. விவரங்களுக்கு பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

**Dr.பிரான்ஸிஸ் ரஜீவன்.**
108, அல்லிஸ் நகர்,
ஹெந்தலை, வத்தளை.
தொ.பே. இல: 0776912851

## விற்பனைக்கு

நாளொன்றிற்கு 15Kgx30 கட்டி ஐஸ் தயாரிக்கக்கூடிய இயந்திரம் விற்பனைக்கு குண்டு. தொடர்பு: 0712962798

## தேவை

மில் வேலை, மோட்டார் சைக்கிள் சுத்தி கரிப்பு, ரயர் வேக்ஸ் என்பவற்றில் அனுபவம் உள்ளவரும் பயிலுநரும் தேவை.
தொடர்பு: பிருந்தா மில்ஸ்
இல. 18, றக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே: 0772231096

உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

THE ART OF LIVING

அவர்களின்

### வாழும் கலைப் பயிற்சி

இணுவிலில் மீண்டும் ஆரம்பமாகிறது, உடல், உள ஆரோக்கியத்துக்கான

★ சுதர்சனக்கிரியா ★ தியானம்
★ மூச்சுப்பயிற்சி ★ எளிய யோகா உள்ளடக்கியது

அறிமுக உரை

இடம் : இணுவில் கந்தசாமி கோயில். இளம் தொண்டர் சபை மண்டபம்
காலம் : நாளை (26.07.2010) திங்கட்கிழமை
நேரம் : மாலை 5.15 மணி
குறிப்பு : 25.07.2010 இன்று சுதர்சனக் கிரியா உட்பட குருபூர்ணிமா சிறப்பு நிகழ்வுகள் கந்தர்மடம் இந்துசமய பேரவை மண்டபத்தில் பி.ப. 3 மணிக்கு நடைபெறும். (100949) தொ.பே : 0777740593

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் பிரபல லங்கா ரைல்ஸ், லங்கா வோல் ரைல்ஸ் (Lanka Tiles, Lanka Wall Tiles) காட்சி அறைக்கு விற்பனையாளர்களுக்கான விண்ணப்பங்கள் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமைகள்: க.பொ.த. சாதாரண தரம் O/L

மேலதிக தகைமைகள்: ஆங்கிலம், சிங்களம் பேசத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

உங்கள் சுயவிபரக் கோவையை உங்கள் கையால் எழுதி 31.07.2010இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**நாராயணா ஹாட்வெயார்,**
இல. 87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212225390

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சூரியகுமாரி குலேந்திரம்

(முன்னைநாள் பாலர் பாடசாலை ஆசிரியை, முன்னாள் தலைவர், ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சூரியகுமாரி குலேந்திரம் நேற்று (24.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - அம்புசரத்தினம் தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் குலேந்திரத்தின் அன்பு மனைவியும், ஸ்கந்தபாபு (முகாமையாளர், H.N.B., சுன்னாகம்), ஸ்கந்தவேணு (Second officer, Ship, டுபாய்), ஸ்கந்தவாணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாசுகி (ஆசிரியை, நெல்லியடி ம.ம.வித்தியாலயம்), குமுதினி, ஸ்ரீதர் (கணக்காளர், SEED நிறுவனம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயகுமாரியின் சகோதரியும், ரமணிதன், கார்த்தீபன், வைஷினிகா, ஐஸ்வர்யா, ஹரினி, பவானி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2010) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பருத்தித்துறை கடற்கரை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமன்றம் வீதி,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (c/569158)

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி நடராஜா சிவபாக்கியம்



சங்குவேலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா சிவபாக்கியம் நேற்று (24.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் நடராஜாவின் அன்பு மனைவியும் அமரர்களான மயில்வாகனம் - நாகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் சிவனடியான் (I.C.R.C.), சிவேந்திரன் (ஜேர்மனி), சித்திரலதா (ஆசிரியை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராணி (ஆசிரியை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), டிலானி (ஜேர்மனி), கந்தசாமி (கோட்டக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்) ஆகியோரின் மாமியாரும், சிவசுப்பிரமணியம், சிவமலர் ஆகியோரின் சகோதரியும், கருணேஸ்வரி, அமரர் வரதராஜா ஆகியோரின் மைத்துனியும், அன்ரன், அருணியா, நர்த்தகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்..

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (100878)

தகவல்:
ந.சிவனடியான். (மகன்)

DHL WORLDWIDE EXPRESS

யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

லண்டன், சுவிஸ், பிரான்ஸ்; நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

திருமுருகன் கொம் நெற்

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ... சங்கம் முன்பாக)
... வீதி, நெல்லியடி ... வங்கிக்கு அருகாமையில்)

குடாநாட்டில் முகவர்கள் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிக இடங்களில் பதிவுகளை மேற்கொள்வதால் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் பறிபோகுமா?

## நமது இருப்பையும், உரிமையையும் உறுதிப்படுத்த வாக்காளர் எண்ணிக்கை வீழ்ச்சியை தடுக்கவேண்டும்

இறந்துவிட்ட பலரும் தேர்தல் காலங்களில் மீண்டெழுகின்ற அதிசயங்கள் யாழ்ப்பாணத்தில் நிகழ்வது சர்வ சாதாரணமான விடயம். பல வருடங்களுக்கு முன்னரே இறந்து விட்ட பலருக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்கும் வாக்காளர் அட்டைகள் தவறாது அனுப்பப்படுகின்றன. அதேவேளை உயிருடன் இருப்பவர்கள் பலருக்கு வாக்காளர் அட்டைகள் வருவதேயில்லை.

இதைவிட போர் ஓய்ந்த பின்னர் குடாநாட்டில் நிகழ்ந்த மாநகரசபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றின் போது " மக்கள் எவரும் வாக்களிக்க வருகிறார்கள் இல்லை. இதனால் வாக்கு வீதம் குறைவாகவே இருக்கிறது. இதனால் ஜனநாயகத்தின் உரிமையை மக்கள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறது." என்று தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட நிறுவனங்களும், வேட்பாளர்களும் வயிற்றில் அடித்து அழாத குறையாக ஒப்பாரி வைத்தார்கள். ஆனாலும் அவர்களில் பலர் இன்னொரு விடயத்தைக் கவனிக்க மறந்துவிட்டார்கள். அதுதான் வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களில் அரைவாசிக்கும் குறைவானோரே தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வருகின்றனர் என்பதே அவர்கள் கவனிக்கத் தவறிய விடயம்.

எல்லாவற்றையும் உருக்குலைத்து, குதறியெறிந்த யுத்தம் தமிழ் மக்களின் சொந்த மண் மீதான இருப்பை பலமாகவே பாதித்தது. யுத்தத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் யாழ்ப்பாணத்து இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கினர். ஆரம்பத்தில் தம்முடைய உயிர் வாழ்தலை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக மட்டுமே இளைஞர்கள் மேற்கொண்டு வந்த இந்த புலம்பெயர்தல் காலப்போக்கில் பணத்தைச் சம்பாதிப்பதற்கான ஒளிமயமான வழியாக மாறிப் போனது. காசு உழைப்பதற்கு ஒரு வழி கிடைத்து விட்டால் நம்மவர்கள் சும்மா இருப்பார்களா? பக்கத்து வீட்டுப் பிள்ளை ' கொலர்ஷிப்' பரீட்சையில் பாஸ் பண்ணினாலே பொறுத்துக் கொள்ளமுடியாமல், தங்கள் வீட்டுப் பிள்ளையையும் எப்படியாவது 'கொலர்ஷிப்' பில் பாஸ் பண்ணச் செய்வதற்காக படாதபாடு படுகின்றவர்கள் அல்லவா நாம். அப்படி இருக்கையில் மற்றவர்கள் எல்லோரும் வெளிநாட்டுக்குச் சென்று, வசதியாக இருக்கையில் நாம் மட்டும் இங்கேயே இருந்து சாவதா? என்ற மனோநிலை நம்முடைய இளையோரிடத்தே ஊறத் தொடங்கிவிட்டது. இத்தகைய அக்கரைப் பச்சைக் கனவுகளில் மிதந்த இளையோர் வெளிநாட்டுக்குச் செல்வதென்பதையே தம்முடைய இலட்சியமாகவும், கட்டாயக் கடமையாகவும் வரித்துக் கொண்டனர். தாம் வெளிநாடு சென்றது மட்டுமல்லாமல் தம்முடைய சகோதரர்களையும், பெற்றோரையும் மெல்ல மெல்ல தாமிருக்கும் நாடுகளுக்கே அழைத்துக் கொண்டனர். இதனால் குடாநாட்டில் மக்கள் தொகை கணிசமான வீழ்ச்சியை சந்திக்க நேரிட்டது.

" யாழ்ப்பாணத்தில் இப்ப இருக்கிற தமிழ் ஆக்களை விட கனடாவில - ரொறன்ரோவில - தமிழ் ஆக்கள் கூட இருக்கினம்.ரொறன்ரோவில எங்க பார்த்தாலும் தமிழ் ஆக்களும், தமிழ்க் கடையளும் தான். வெள்ளக்காரரைக் காண்பதே அருமையான விஷயம்தான்." என்று புலம்பெயர்ந்து சென்று விடுமுறையைக் கழிப்பதற்காக இப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள ஒருவர் சொன்னார். அந்தளவுக்கு அயல் நாடுகளில் நமது மக்கள் குடியேறிய அதே அளவுக்கு இங்கு குடித்தொகை வீழ்ச்சி அடைய நேரிட்டது.

புலம்பெயர்தலால் ஒருபுறம் குடித்தொகைச் சரிவு நிகழ்ந்து கொண்டிருக்கையில், மறுபுறம் யுத்தமும் தன்பங்குக்கு மக்களின் உயிர்களைக் குடித்து அவர்களின் எண்ணிக்கையை நாளுக்கு நாள் குறைத்துக் கொண்டே வந்தது. ஆயினும் இவ்வாறெல்லாம்- புலம்பெயர்தல், யுத்த நடவடிக்கைகளால் ஏற்பட்ட உயிரிழப்புகள் என்பன போன்றன - நிகழ்ந்தும் கூட குடாநாட்டு வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை குறையாமலேயே இருந்து வந்தது. வழமை போலவே அரச அதிகாரிகளின் ஆமை வேகச் செயற்பாடுகளும் இத்தகைய நிலைக்கு ஒரு காரணமாக இருந்தாலும் கூட, எந்நேரமும் யுத்த நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் தேசத்தில் வாக்காளர் பட்டியல் மீளாய்வுகளை செய்ய முடியாத புறச்சூழல் இருந்ததே இதற்கு மிக முக்கியமான காரணியாகும்.

"வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யப்படாததால் தீமைகளை விடவும் நன்மைகளையே எமது மக்கள் அதிகம் அனுபவித்திருக்கிறார்கள் " என்று நண்பர் ஒருவர் கூறியதை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். ஏனெனில் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே - குடித்தொகைப் பரம்பலை மையமாகக் கொண்டே - ஒவ்வொரு மாவட்டத்துக்குமான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். அது தவிர பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படும் மாணவர் எண்ணிக்கையையும் தீர்மானிக்கும் சக்தியாக வாக்காளர் தொகையே விளங்குகின்றது. இது மட்டுமல்லாது மாவட்டத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதி (கோட்டா), அரச ஊழியர் எண்ணிக்கை, நிவாரணம், இழப்பீடு என்பன போன்ற பல்வேறு அத்தியாவசியமான ஒதுக்கீடுகள் வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றன. ஆகவே வாக்காளர் பட்டியல் என்பது தான் சார்ந்த பிரதேசத்தின் சகல அசைவுகளையும் தீர்மானிக்கும் சர்வ வல்லமை பொருந்திய ஒன்று என்ற உண்மை எம்மில் பலருக்கும் தெரியாதிருப்பதுதான் வேதனையான விடயம். திருவிளையாடல் படத்தில் இடம்பெறுகின்ற "நான் அசைந்தால் அசையும் அகிலமெல்லாமே" என்ற வரிகள் வாக்காளர் பட்டியலுக்கும் பொருந்தும்.





மிக நீண்ட காலமாகவே வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யப்படாமையால் நம்முடைய குடித்தொகை வீழ்ச்சி அரச பதிவேடுகளில் இடம்பெறவில்லை. ஆகவே முன்னர் இருந்த அதே அளவு வாக்காளர் பட்டியலுக்கு ஏற்ப வழங்கப்பட்ட அத்தனை சலுகைகளையும் நாங்கள் அனுபவிக்க முடிந்தது. ஆனாலும் எத்தனை காலம் தான் இப்படியே ஓட்டி விட முடியும்?

இப்போது போருக்கு முற்றுப்புள்ளி வீழ்ந்துள்ள நிலையில் வாக்காளர் பட்டியல் மீளாய்வு - மூன்று தேர்தல்கள் அடுத்தடுத்து நடந்து முடிந்த பின்னர் - யாழ்ப்பாணத்தில் இப்போது நடைபெற்று வருகின்றது. ஆயினும் தேர்தல்கள் நடந்த போது ' இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன' என்ற அணுகுமுறையையே தேருநர் பட்டியலை மீளாய்வு செய்யும் நடவடிக்கையிலும் யாழ். மக்கள் பிரயோகிப்பதாகவே தகவல்கள் வெளிவந்துள்ளன. உண்மையில் இது பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஒன்று. ஏனெனில் வடபகுதி மக்களில் ஒரு தொகுதியினர் புலம்பெயர்ந்து சென்று விட்ட நிலையிலும், மிக அதிகளவானோரை யுத்தத்திற்கு பலிகொடுத்து விட்ட நிலையிலும் வடபகுதிச் சனத்தொகை இறங்குவரிசையிலேயே சென்று கொண்டிருக்கின்றது. இந்நிலையில் இருக்கின்றவர்களும் வாக்காளர் பட்டியலில் தம்மைப் பதிவு செய்யாதுவிட்டால் இன்னமும் வீழ்ச்சி நிலையே ஏற்படும். தனியே வாக்காளர் எண்ணிக்கையில் என்றில்லாது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை, பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர் எண்ணிக்கை, ஏனைய ஒதுக்கீடுகள் எல்லாமே குறிப்பிடத்தக்க வீதத்திற்கு குறைவடையும் நிலையினை நாமே ஏற்படுத்தும் நிலையினை - யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடுவதைப் போல - வாக்காளர் பட்டியல் மீளாய்வு நடவடிக்கையில் பங்கெடுப்பதிலிருந்து ஒதுங்குவதன் மூலம் உண்டாக்கி விடுவோம். எனவே குடாநாட்டில் வசிக்கின்ற சகலரும் வாக்காளர் பட்டியல் மீளாய்வு தொடர்பில் அதீத அக்கறை எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

இது தவிர பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல, தற்போது புலம்பெயர் நாடுகள் பலவற்றிலும் விடுமுறை 'சீசன்' என்பதால் இங்கிருந்து சென்றவர்கள் பலரும் தமது குடும்பம், குட்டிகளோடு மீளவும் தாயகத்துக்கு வந்துள்ளனர். இவர்களும் இந்த மீளாய்வில் கலந்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே தம்முடைய பதிவுகளை அவர்கள் உறுதி செய்வதன் மூலம் யாழ்ப்பாணத்தின் வாக்காளர் எண்ணிக்கைச் சரிவை இந்த மீளாய்வில் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

முப்பது வருடங்களுக்கும் மேலாக நமது மண்ணில் நடந்த ஆயுதப் போராட்டத்தில் தமிழினம் தோற்றுப் போய்விட்ட நிலையில் இன்று அரசியல் ரீதியான வழியிலேயே தம்முடைய இருப்பை,உரிமையை அவர்கள் அடைய வேண்டிய நிலை இப்போது உருவாகியுள்ளது. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக வாக்காளர்களே விளங்குகிறார்கள். ஆகவே நம்முடைய அரசியல் ரீதியான உரிமைகளை வென்றெடுக்க தம்மிடையே உள்ள சகல பேதங்களையும் மறந்து சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தம்முடைய ஆதரவாளர்கள், தமக்கு வாக்களிப்பவர்கள், வாக்களிக்காமல் ஒதுங்கியிருப்பவர்கள் அனைவரையும் இந்த மீளாய்விற்கு உட்படுத்தி பதிவுகளை மேற்கொள்ள ஊக்கிகளாகத் தொழிற்பட வேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்.வாக்காளர்கள் இல்லாதவிடத்து இந்தக் கட்சிகள் நாளை ஒரு தேர்தல் வரும்போது யாரிடம் சென்று வாக்குக் கேட்க முடியும்? எனவே தம்முடைய வாக்கு வங்கியினைப் பலப்படுத்தவேனும் மக்களை வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள இக்கட்சிகள் பாடுபடவேண்டியது அவசியமாகின்றது.

இது தவிர உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த மக்கள் தாங்கள் தற்காலிகமாக வசிக்கும் இடங்களிலேயே வாக்காளர் மீளாய்வினைச் செய்து தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வதால் சில எதிர்மறை விளைவுகள் ஏற்படலாம் என அவர்கள் - மக்கள் - அஞ்சுகின்றனர். தற்போது வதியும் இடத்தில் அவர்களின் வாக்குரிமைப் பதிவு இடம்பெற்றால் உயர்பாதுகாப்பு வலயத்தில் ஏற்கனவே இருந்த வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர் நீக்கப்பட்டுவிடும். இதனால் மனிதர்கள் வாழாத பகுதியாக உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் ஆவணங்கள் ரீதியாக அடையாளப்படுத்தப்படும் அபாயம் ஒன்று ஏற்பட்டு விடும்.

இதன் மூலம் காலாகாலத்துக்கும் படையினரின் பிடியிலேயே உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை வைத்திருக்கும் வாய்ப்பு அரசுக்கு ஏற்பட்டுவிடும். ஏற்கனவே கிளிநொச்சியில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட தீர்மானம் பற்றிய அறிவிப்பில் " பாதுகாப்பு வலயக் காணிகள் நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மக்களுக்கு ஒரு போதும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது" என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தமையும் இங்கு ஞாபகத்துக்கு வருகின்றது. எனவே இது குறித்த தெளிவினை அரச அதிகாரிகள் மக்களுக்கு வழங்க வேண்டியுள்ளது.

எது நிகழ்ந்த போதும் தம்முடைய அரசியல் ஆயுதத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக தமிழர் தரப்பு தம்முடைய வாக்காளர் எண்ணிக்கையின் வீழ்ச்சியை ஏற்படுத்த இடமளிக்காத வகையில் தம்முடைய பதிவினை மீளாய்வின் போது செய்ய வேண்டியதே அவர்களது சந்ததிக்கு விட்டுச் செல்லும் மகத்தான பேறாக அமையும். *

ஔண்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sale மாபெரும் ஆடித் தள்ளுபடி

Mangala Show Room

Phoenix The name for plastic
DAMRO
Nilkamal
EVERO
ARPICO
Mangala
Piyestra

ஆடித் தள்ளுபடியில்
சோபாசெற் கொள்வனவிற்கு
8000/- பெறுமதியான
Glass Tepo Free

போன்ற நிறுவனங்களின் அனைத்து
பொருள்களுக்கும் ஆடித் தள்ளுபடி
அதிரடி விலைக்கழிவுடன்....

அத்துடன், சகல மூங்கில் தளபாடங்களும், வெளிநாட்டு தளபாடங்கள், சிறுவர்களுக்கான பொருள்கள், சோபா செட் வகைகள் தனியாக 2 மாடியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தரம்! மலிவு!! அமோக தெரிவிற்கு!!! என்றும்....

**Mangala Show Room**

536, K.K.S. Road, Manokara Junction, Jaffna. 021 222 8367, 0777286069.


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
எரிக்கணேஷ் பல், மூக்குக் கண்ணாடி அகம்
உரிமையாளருமாகிய

**வல்லிபுரம் கணேசலிங்கம்**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயறுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி/569137)

யாழ்ப்பாணம்
வணிகர் கழகம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
1941 * 10 * 12



உதிர்வு
2010 * 06 * 27

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்

**வைரவப்பிள்ளை செல்லத்துரை**

கடந்த 27.06.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (25.07.2010) ஞாயிற்றுக் கிழமை அன்று மு.ப. 8 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 27.07.2010 செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
'நிதிபவனம்'
10.ஆம் கட்டை, மாவிட்டபுரம்.
தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:
முதலி கோயிலடி, சேர்ச் லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

உங்கள் பிரிவால் துயருறும்,
நிர்மலரூபி - துசிகரன் (பிரான்ஸ்)
நிர்மலராஜினி - கெளரிகாந்தன் (லண்டன்)
மக்கள், மருமக்கள்.

(100947)

## மரண அறிவித்தல்

**கிருஷ்ணர் சண்முகரத்தினம் (கிளி அண்ணை)**

(யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா)



தெல்லிப்பழை, அம்பனையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டு தற்போது ரொரன்றோ, கனடாவில் வசித்து வந்தவருமான கிருஷ்ணர் சண்முகரத்தினம் 22.07.2010ஆம் திகதி வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் (கீரிமலை) - எள்ளுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், குலமணி தேவியின் பாசமிகு கணவரும், அமரர் மோகனதாஸ், சுரேந்திர தாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகதீஸ்வரன் (ஈசன்- U.K. ), சண்முகவல்லி (மங்களம்), சறோஜினி தேவி (சறோ) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆறுமுகசாமி, குந்தாதேவி, திருநாவுக்கரசு, சுந்தரேஸ்வரன் (பிரான்ஸ்), தர்மலிங்கம், பத்மாவதி, புவனேஸ்வரன், இராசலிங்கம், வத்சலா தேவி, கந்தசாமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (கனடா) இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணப்புலம் வீதி,
மல்லாகம். (100871)

தகவல்:
க.சி.நடராசா குடும்பம்


## Deutsch வகுப்புகள்

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகின்றன. ( Germany இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.)
தொடர்பு: 10, Palaly Road, Jaffna. 0771604823

## தேவை

முகாமைத்துவ பயிற்றுவிப்பாளர்கள், கணக்கியல்/ மனித வளங்கள்/ தகவல் தொழிநுட்ப அறிவு/ நிர்வாகம், இளநிலைப் பட்டதாரி, ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக மற்றும் கம்பியூட்டர் அறிவு மற்றும் நல்ல சோதித்தறியும் திறமைகளோடு விண்ணப்பிக்கவும். தங்குமிட வசதி உண்டு.

பென்பெல் பிளேஸ்மெண்ட்ஸ்
545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை. கொழும்பு 10
E-MAIL : penpal@eureka.lk. Fax: 011 2448211

## திருமண சேவை

நிதானமான - கவனமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுயதேர்வு முறையோ! சுயதேர்வு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட நீங்கள், நீங்கள், வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு காலையிலோ மூத்த - புதுமுக - சுயதேர்வு முறை முன்னோடி - தனிமனித நிறுவன - சங்கேத சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் த.நர்மதி ரூபி, மாபோல, வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க. தொ.பே.: 2360488, 2360694, 4873929

## வீடு விற்பனைக்கு

மல்லாகம், சாளம்பை முருகன் கோயில் அருகாமை, ரேனு மஹால் எனும் பெயருடைய சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: கங்காதரன் ரேனுகா
021 4905957, 0774702278

## வீடு, காணி விற்பனைக்கு

Chundukulli மகளிர் பாடசாலை St Jhon's Collage அருகில் 7 அறைகளுடன் மாடி வீடு, காணியுடன் உடனடி விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு
திரு பரராஜசிங்கம்
021-2225623

## கல்வி (லண்டனில்)

லண்டனில் கல்வியை தொடர விரும்பும் மாணவர்களுக்கு சகல தேவைகளையும் பூர்த்தி செய்து தரப்படும். உங்கள் தகமை கா.பொ.த.உயர்தரத்தில் பூரண சித்தியோ அல்லது இருபாட சித்தியோ இருப்பின் எங்களை தொடர்பு கொள்ளுங்கள் குறைந்த கட்டணத்தில்தான் எமது சேவை.

T.P : 0777491163

இலங்கை முழுவதும் பல நூற்றுக்கணக்கான Phone திருத்துனர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியர் M. R. M. Rizvi யின்



Diploma in **Mobile Phone Repairing**
Software & Hardware

> Introduction Software & Hardware
> All kinds of Repairing & Trouble shooting
> By Pass & Jumpering (Forum Support)
> Unlocking, Flashing, Downloading
> Jef, P-Key, MX Key, SE-Tools, Infinity, Spidermen

நாளை ஆரம்பம் 26/07/2010
நேரம் : காலை 10:00
Fees : Rs. 8750/-

No: 102-2/2, Navalar road,
(Lukmani Plaza Building)
மேலதிக விபரங்களுக்கு 021-2241873/072-3402243


## கண்ணீர் அஞ்சலி



எரிக்கணேஸ் பல், மூக்கு
கண்ணாடியக உரிமையாளர்
அமரர்

**வல்லிபுரம் கணேசலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் மறைவுக்காக எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

நியூ ராம் கொன்ஸ்ரக்ஸ்சன்
இல.263, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(100856)


## GREAT OPPORTUNITY TO STUDY IN ABROAD

CYPRUS
SWITZERLAND
SINGAPORE
CANADA
AUSTRALIA

*Affordable course fee
*Airport Pick Up
*Accommodation
*Part time jobs (within permitted hours)
*After completion of study, can be transferred to the affiliated colleges or universities in other countries.

Course fee can be paid after the visa for selected countries.
Conditions Apply

RICHEST INSTITUTE FOR HIGHER STUDIES
NO.15, Jampettah Street,
Kotahena, Colombo - 13
Opposite St.Anthony's Church
Contact } 077 2300510


## கண்ணீர்க் காணிக்கை



எரிக்கணேஸ் பல், மூக்குக்
கண்ணாடியக
உரிமையாளர்
அமரர்

**வல்லிபுரம் கணேசலிங்கம்**

அவர்கள் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும், துயரும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாணி ரெக்ஸ்,
யாழ்ப்பாணம். (சி/569139)

உரிமையாளரும்,
ஊழியர்களும்.


## MANGOS Restaurant & Café

சைவ உணவு விடுதி
359/2 கோவில் வீதி நல்லூர் வடக்கு
(கம்பன் கழகத்துக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
Tel:-021 222 8294

யாழ் நல்லூரில் மீண்டும் நம்பிக்கையான புதுப்பொலிவுடன்
மாங்கோஸ் உணவு விடுதி பகல்,இரவு உணவுகளுடன்
கவர்ச்சிகரமான கூடாரங்களையும் இருக்கை வசதிகளையும் கொண்டு
சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது
வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்

- இந்திய,இலங்கை சைவ சிற்றுண்டிகள்
- இந்திய,இலங்கை சைவ இரவு உணவுகள்
- இந்திய மதிய உணவுவகைகள்
- அனைத்து தோசை வகைகள்

* பூரி
* பரோட்டா
* சப்பாத்தி
* கொத்து
* பாலப்பம்
* இட்லி



* மசாலா தோசை
* வெங்காய தோசை
* நெய்த் தோசை
* பிளேன் தோசை
* வெங்காய ஊத்தப்பம்
* நெய் றோஸ்ட்

வேண்டிய உணவுகளை பொதிகளாக்கி எடுத்துச்செல்லலாம்.

## கலைமகள் அழகு நிலா
### பயிற்சி நிலையம்



ஏழு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சி கற்றுக்கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக்கூடிய தொழிலுமாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன் முறையாகும்.

★ சனி, ஞாயிறுதினங்களிலும் பயிற்சிகள் இடம் பெறும்

பயிற்சிகள்

★ Facial (எட்டு வகை)
★ Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Stretening (2 வகை)
★ Hair Perming
★ Hot Oil massage
★ Hair Cutting
★ Hair dye
★ Hair Colouring
★ Pedeicure manicure
★ கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
★ Bleaching
★ Bridal make up (6வகை)

பயிற்சிக் கட்டணம்: 4000/-, பயிற்சி ஆரம்பம்: 01.08.2010,
பயிற்சி நேரம்: மு.ப 9.30மணி-பி.ப. 4 மணிவரை.

கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773719071, 0214908151


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா நகர்: காயங்களாலும் வலிகளாலும் சிதைந்திருக்கும் ஒரு கிராமம்

ஊனமடைந்தவர்களின் குடியிருப்பு என்று அந்தக் குடியிருப்பைச் சுட்டும் பொழுது மிகவும் வருத்தமாகவே இருக்கிறது. ஆனால் அப்படித்தான் அந்த மக்களை - அந்தக் குடியிருப்பை - எல்லோருமே அழைக்கிறார்கள். போராலும் இயற்கையாலும் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் ஒரு குடியிருப்பாக ஓரிடத்தில் இணைந்து வாழ்கிறார்கள். அவர்களைப் போர் மீண்டும் மீண்டும் தாக்கியிருக்கிறது. யுத்தம் தீவிரமாகவே நடைபெற்றது என்பதைச் சொல்லும் மண்மேடுகள் இன்னும் சனங்களின் காணிகளை ஊடறுத்துச் செல்கின்றன. செல்வாநகர் கிராமத்தைப் பற்றி சுமார் பத்தாண்டுகளுக்கு மேலாக அறிந்திருக்கிறேன். குறிப்பாக, சிறிய வயதில் அந்தக் கிராமங்களின் ஊடாக குறுக்கு வழியாக பாவிக்கும் வீதிகளால் பயணங்களைப் பல தடவை மேற் கொண்டிருக்கிறேன்.

பற்றைகளும், கிடுகுக் கொட்டில்களும்தான் என்றுமே செல்வா நகரில் என் கண்ணுக்குத் தெரிந்திருக்கின்றன. ஒருமுறை யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது அந்த கிராமத்தின் ஊடாக ஒரு குறுக்கு வழியாக ஓடிய ஞாபகமும் அந்தத் தெருக்களைப் பார்க்கும் போது எனக்கு மீள வந்து கொண்டிருந்தது. இப்பொழுது இடுகாடுகளைப்போல யாருமற்ற காணிகளும், யுத்த காலத்தின் மண்மேடுகளும், பதுங்குகுழிகளும், மிதிவெடி அபாயங்களும்தான் பரவிக்கிடக்கின்றன. யுத்தக்குற்றம் சுமத்தப்பட்டதன் காரணமாகப் பெற்றோர்களுடன் தடுப்பில் இருந்த குழந்தைகளும் அந்தக் கிராமத்தில் வசிக்கிறார்கள்.

செல்வா நகர்க் கிராமத்தில் முதல் முதலில் நான் வனசுதன் அன்னலட்சுமி என்பவரைச் சந்தித்தேன். மட்டக்களப்பைச் சேர்ந்த அன்னலட்சுமி முன்னாள் போராளியாக இருந்தவர். ஆனால் படுகாயமடைந்து ஊனமுற்றதால் போராட்டத்தில் இருந்து 90களில் விலகி, குடும்ப வாழ்க்கையை அமைத்த அவரும், அவரது கணவரும், நான்கு வயதான மகள் வேழினியும் தடுப்பு முகாமினுள் இருந்திருக்கிறார்கள். தடுப்பில் இருந்த பொழுது, வனசுதன் இறந்து போய்விட்டார். அன்னலட்சுமியின் கண்களில் எறிகணைத்துண்டு கிடப்பதனால் வீங்கியிருக்கும் அந்தப் பகுதியைக் காட்டியதுடன் தனக்கு உடலில் மேலும் பல இடங்களில் எறிகணைத்துண்டுகள் உட்புகுந்து இன்னமும் இருப்பதாகக் குறிப்பிட்டார். தற்பொழுது ஒரு காலும், கையும் இயங்குவதில் சிரமங்களை தருவதாகவும் தலை எப்பொழுதும் வலித்துக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். அவர்தான் மாற்றுவலுவுள்ள அந்தக்



குடியிருப்புக்கான தலைவியாகச் செயற்படுகிறார். வீடமைப்பதற்காகக் கொடுக்கப்பட்ட 5ஆயிரம்ரூபாவில் சில கோழிக்குஞ்சுகளை வாங்கி, வளர்த்துக் கொண்டிருக்கும் அன்னலட்சுமியின் குழந்தை வேழினி, தான் பம்பமடு போராளித் தடுப்பு முகாமில் தாயாருடன் தடுக்கப்பட்டிருந்தாகத் தன் மழலை மொழியில் தெளிவாக குறிப்பிடுகிறாள்.

607 குடும்பங்கள் வசிக்கும் அந்த கிராமத்தில் இதுவரையில் நான்கு தடவைகளாக மக்கள் மீளக்குடியிருத்தப்பட்டிருக்கிறார்கள். சில மக்களுக்கு இன்னமும் தகரங்களும், தறப்பாளும் கிடைக்கவில்லை என்று அந்தக் கிராமத்தின் தலைவர் சுதாகரன் என்னிடம் குறிப்பிட்டார். செல்வாநகர் அ.த.க பாடசாலை என்ற அந்தக் கிராமத்துக்குரிய பாடசாலையில் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்கள் நடக்கின்றன. அந்தப் பாடசாலையில் இருந்த இரண்டு தற்காலிக வகுப்பறைகள் அழிந்து விட்டன. அழிந்த வகுப்பறைக்கு மேலால் தறப்பாளை இழுத்துக் கட்டிக் கொண்டு, மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். இருக்கும் ஒரே ஒரு நிரந்தர கட்டடத்தில் 270 மாணவர்களுக்குரிய வகுப்புக்களை நடத்துவதில் பெரும் சிரமங்களை ஆசிரியர்கள் எதிர்கொள்கிறார்கள்.

2000ஆம் ஆண்டு வெளிநாட்டுக்குப் புறப்பட்ட கணவன் ஜேர்மனியில் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக உதயகுமார் தபோநிதி என்ற பெண் குறிப்பிட்டார். 43 வயதான இந்தத் தாயார் இரண்டு கண்களும் பிறப்பிலேயே பார்க்கும் திறனை இழந்துவிட்டன. இவரது தங்கையும் ஊனமடைந்தவர். தனது ஒரே பிள்ளையைக் கல்வி கற்க வைப்பதற்காகத் தான் மிகுந்த கஷ்டப்படுவதாக அவர் சொன்னார். கால்கள் ஊனமடைந்த மகனின் சைக்கிள்கடையை நம்பி, வாழும் பராசக்தியின்



குடும்பத்தில் பல துயரங்கள் இன்னமும் இருக்கவே செய்கின்றன.


ஓமந்தையில் படைகளின் சோதனை நடவடிக்கையின் பொழுது தனது மகன் ஒருவர் காணாமற்போனதாகக் குறிப்பிடும் பராசக்தி, அவனை எங்கு கொண்டு போனார்கள்? என்ன செய்தார்கள்? என்பது குறித்து இன்னமும் தெரியவில்லை என்று கண்ணீர் விடுகிறார். தடுப்புமுகாமில் நேரிட்ட கொடுமைகள் தனது கணவரையும் கொன்று விட்டதாக அவர் சொன்னார். தனது மகளின் கணவரும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், அவர் இயக்கச்சியிலிருந்து சூரியக் கதிர் நடவடிக்கையால் இடம்பெயர்ந்தது முதல் பல இழப்புக்களைச் சந்தித்ததாகவும் குறிப்பிடுகிறார். கால் ஊனமடைந்த அவரது மகன் சிறியளவிலான சைக்கிள் கடை ஒன்றைப் போட்டுக் கொண்டு இருந்தார்.

பொக்கணையில் நடந்த எறிகணை வீச்சில் கணவரை இழந்த முருகன் புவனேஸ்வரி, 1980 இல் இனக்கலவரம் காரணமாக மலையகத்திலிருந்து தனது தாய் தந்தையர்களுடன் இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்ததாகக் குறிப்பிட்டார். 30 வயதை உடைய அந்த இளந்தாய்க்கு எட்டு வயதான குழந்தை ஒன்று இருக்கிறது. இந்த வயதில் என்ன செய்வது? தனது குழந்தையை எப்படி வளர்ப்பது? என்றும், இந்தச் சிறுவயதிலேயே தான் அநாதரவாக்கப்பட்டுள்ளதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றும் அந்தப் பெண் குறிப்பிட்டார். பிறப்பிலேயே கால் இவருக்குப் பாதிக்கப்பட்டுவிட்டது.

போராட்டத்தில் பங்கெடுத்த காலத்தில் தவறுதலாக காயப்பட்டபொழுது, கால் இயங்காமல் இழுத்து விட்டதாகக் குறிப்பிடும் நான்கு பிள்ளைகளின் தந்தையான சிவகுமார், அதற்காகத் தடுப்பில் வைக்கப்பட்டிருந்தாகக் கூறுகிறார். கிளிநொச்சி நகரத்தின் கூரையில்லாத சிதைந்த கட்டடம் ஒன்றுக்குள் இருந்து வாகன இருக்கைகளுக்கான உறைகளைத் தைத்துக் கொண்டிருந்தார் இராசேந்திரன் புவனேஸ்வரன். வீட்டின் நிலைமைகளைப் பார்க்கப் பொறுக்காமல், நண்பர்கள் கொடுத்த பழைய தையல் இயந்திரத்தை வைத்து மீண்டும் தனது கணவர் இந்த வேலையைத் தொடங்கியிருப்பதாக அவரின் மனைவி லலிதாதேவி குறிப்பிட்டார். அந்தப் பழைய இயந்திரம் சிலவேளை பழுதுபடும் பொழுது தானே அதைத் திருத்தி, திருத்தி தைத்துக் கொண்டிருப்பதாகவும், யுத்தம் காரணமாக தனது வலது காலை இழந்த நிலையிலேயே தைத்துக் கொண்டிருப்பதாகவும் புவனேஸ்வரன் தன்னுடைய வார்த்தைகளை வலிகளோடு வெளிப்படுத்தினார். மிகப்பெரியளவில் தான் உழைத்து அமைத்த பழைய தையற்கடை குறித்து ஞாபகப்படுத்திய பொழுது, அந்தக் கடை உட்பட எல்லாவற்றையும் தான் இழந்துவிட்டதாக அவர் குறிப்பட்டார். அவரது காலாக இயங்கிக் கொண்டிருக்கும் செயற்கைக் காலால் வாழ்க்கையை நகர்த்துவதற்காகத் தைத்துக் கொண்டிருக்கும் அவரது துயர நிலையை மீறி, நம்பிக்கை தரும் விதமாக புன்னகை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

இப்படி வலிகளுடன் வாழும் அந்த மக்களின் குடியிருப்பில் 'சோபா' என்ற தொண்டு நிறுவனத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எவற்றுக்குமே கூரை என்பதேயில்லை. ஒரு கூரையில்லாத கிராமத்தைப் போல வெயிலில் மக்கள் நனைந்து கொண்டிருக்க எங்கள் வீடுகளுக்கு யாராவது கூரை போட்டுத் தருவார்களா? என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள் அவர்கள். 1995இல் சூரியக்கதிர் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட அந்த மக்களிடம் இருந்த எல்லாவற்றையும் வன்னி இறுதி யுத்தம் பறித்து விட்டது.

மாடசாமி - அம்சவள்ளி தம்பதியினர் தங்கள் இருபது வயதான மகளை காயமடைந்த காரணத்தால், மாத்தளனில் வைத்து இராணுவத்தினரிடம் காப்பாற்றித் தரும்படி கையளித்ததாகவும் பின்னர் அவளுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அவளை



எப்படியாவது மீட்டுவிட வேண்டும் என்று தாங்கள் அலையாத இடமில்லை என்றும், அதனால் பைத்தியமான நிலையிலேயே இன்னமும் தாங்கள் இருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள். மகள் காயமடைந்த இடத்திலேயே தங்கள் மகன் ஒருவர் இறந்து போனதாகவும், ஏற்கனவே ஒரு மகன் போராட்டத்தில் உயிரிழந்து விட்டதாகவும் அவர்கள் சொன்னார்கள். எங்கள் மகள் எங்களுக்கு வேண்டும் என்று கண்ணீரோடு கோரும் அந்தப் பெற்றோர், இன்னமும் தங்கள் காணியைத் திருத்தவில்லை என்றும், தங்கள் கூடாரத்துக்கு பாம்புகள் நுழைந்து தம்மை கடித்துக் கொல்லட்டும் என்றபடிதான் வாழுகிறோம் என மனதைத் தகர்க்கும் விதமாகச் சொல்லி அழுதார்கள்.

மண்மேடுகளுக்குள்ளாலும், சனங்களற்ற காணிகளுக்குள்ளாலும் செல்லும் பொழுது கூடார முற்றத்தின் முன்பாக உடல் முழுவதும் காயமடைந்த இளம் தாய் ஒருவர் கிடந்து கத்திக் கொண்டிருந்தார். பக்கத்தில் அவரது குழந்தை ஏங்கியபடி நின்றது. முப்பது வயதான அந்தப் பெண் பதுங்கு குழிக்குள் குடும்பத்துடன் இருந்த பொழுது எறிகணை வந்து விழுந்ததில், தங்கம்மா என்ற அந்தப் பெண்ணின் கணவர் சதானந்தனுடன் தங்கம்மாவின் சகோதரர் மற்றும் இரண்டு குழந்தைகளும் பலியாகி விட்டார்கள். தலை கொதிக்கிறது என்றும், வாந்தி வருகிறது என்றும் முற்றத்தில் கிடந்து அவர் கத்திக் கொண்டிருந்தார்.

**தீபச்செல்வன்**

தங்கம்மாவை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றதுடன் அந்த கிராமத்திலிருந்து அன்று விடைபெற்றேன்.

தங்கம்மாவைப் பார்த்துக் கொண்டு இருந்த அவரது தாய்,எனது பிள்ளையை எப்படியாவது திருத்த வேண்டும். இந்த பிள்ளை சுமக்கும் எறிகணைத்துண்டுகளை எப்படியாவது வெளியில் எடுக்க வேண்டும் என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தார். தங்கம்மாவைப்போல நிறைய மக்கள் உடலாலும், மனதாலும் காயங்களுடன் பாகங்களாகவும் முழுமையாகவும் கழற்றித் திருத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இப்படித்தான் செல்வாநகர் கிராமம் காயங்களாலும், நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய வறுமையாலும் மெலிந்து போயிருக்கிறது. யுத்தத்தினால் அதிகம் சிதைந்து போயிருக்கிறது. இந்தக் கிராமத்தின்மீது சம்பந்தப்பட்டவர்கள் அதிககவனம் செலுத்த வேண்டும். போரால் இழப்புக்களுக்கு முகம் கொடுத்த இந்த மக்கள் மீள் வாழ்க்கைக்குச் செல்ல வழிகளை ஏற்படுத்த வேண்டிய பெரும் அவசியம் நமக்கு இருக்கிறது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

இல.76, அரசடிவீதி, நிராவியடி, யாழ்ப்பாணத்தில் (மத்திய வங்கி-க்கு முன்பாக) 40 பேர்ச் காணி-யுடன் கூடிய விசாலமான வீடு வாடகைக்குண்டு. பல வாகனங்-கள் தரிப்பிட வசதியுமுண்டு.

இல.76, அரசடி வீதி, நீராவியடி
யாழ்ப்பாணம்

071 - 4275724

## காணி விற்பனை

பலாலி வீதியில் 2½பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்.
தொடர்பு:- 0777111400

## சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு

ஒரு மாதம் வளர்க்கப்பட்ட சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ரூபா 60/= மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்கு விசேட கழிவுகள். தொ.பே:- 0217200616, 0773530996

## வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகத்தர் குடும்பமொன்றுக்கு யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:- 0776916176, 0772832967

## கர்நாடக இசை வகுப்புகள்

நடத்துபவர்
A.K.கருணாகரன்.
தொடர்புகளுக்கு:-
077 4239303

## தேவை


யாழ் நகருக்கு அருகில் 5 கார்கள் தரிக்கக் கூடிய வசதி கொண்ட பெரிய காணியுடன் கூடிய வீடு வாடகைக்கு or குத்தகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு : 0758264655,0771354314

## தேவை

சாரதி அனுமதிப் பத்திரத்துடன் கூடிய அனுபவம் வாய்ந்த பஸ் ஓட்டுனர்கள் தேவை.
தொடர்புக்கு : 0758264655 0771354314

# நீங்கள் ஏமாற வேண்டாம்.!!

நீங்கள் வாங்கும் நீர் குழாய்களிலும் பொருத்துக்களிலும் எஸ் லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ் லோன் அல்ல.




எஸ் லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்த்து வாங்குங்கள்




என்றும் முன்னணியில்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
148, வொக்சோல் வீதி, கொழும்பு 02.

# HONDA

ஜெனரேட்டர்கள்



வகைகள்
EBK 650
EBK 2000
EBK 2800

ஜெனரல் இக்கிப்மன்ட்ஸ் லிமிடெட்

400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி: 2345046, 2327264, 2343823,2430799.
பக்ஸ்: 2434637.

## தேவை

மோட்டார் வாகன திருத்துனர்கள் தேவை. தங்குமிட வசதியுண்டு. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு
0758264655, 0771354314

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழி சில்லறையாகவும் உடனுக்குடன் சுத்திகரித்தும் பெற்றுக் கொள்ளலாம்.
24 மணிநேர சேவை.
தொடர்பு:-
எஸ்.வீ.நாதன்,
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு,நல்லூர்.
தொலைபேசி:- 0779946770

## தொலைத்தொடர்பு உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு

பெரிய அரசடி, சாவகச்சேரியில் பிற்றிங்ஸ், பிரதி எடுக்கும் இயந்திரம், சிட்டை போடும் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், உறையிடும் இயந்திரம் உட்பட தொலைத்தொடர்பு நிலைய சகல பொருள்களும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-0779356066, 0773553003

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Sisil R.70 பிறிச்சும் 21" Sony Wega TV யும் Free Channel றீசீவரும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- T. கிருஸ்ணா
27/11, புங்கன்குளம் வீதி, பாண்டியந்தாழ்வு/யாழ். தொ.பே:- 0213211636

# த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ★ சாறி | 700/- | 500/- | 1200/- | 800/- | | | | |
| ★ கொட்டன்கவுன் | 1400/- | 700/- | 1200/- | 600/- | 800/- | 400/- | 400/- | 200/- |
| ★ சில்க் கவுன் | 600/- | 300/- | 900/- | 600/- | 750/- | 500/- | 400/- | 200/- |
| ★ தனிஸ்கேட் | 750/- | 500/- | 900/- | 600/- | 1000/- | 600/- | 500/- | 375/- |
| ★ பிளவுஸ் | 550/- | 375/- | | | | | | |
| ★ லேடிஸ் T. சேட் | 500/- | 300/- | 300/- | 200/- | | | | |
| ★ சின்ன ஸ்கேட் | 300/- | 200/- | | | | | | |
| ★ பஞ்சாபி செற் | 900/- | 600/- | 700/- | 350/- | 800/- | 400/- | 600/- | 300/- |
| ★ பஞ்சாபி துணி | 1000/- | 700/- | 1200/- | 800/- | 900/- | 600/- | | |
| ★ சேட் செக் L/S, S/S . | 750/- | 400/- | | | | | | |
| ★ சேட் பிளேன் L/S, S/S | 600/- | 400/- | | | | | | |
| ★ சேட் சின்னது | 450/- | 300/- | | | | | | |
| ★ சேட் சின்னது சோக்கோ | 900/- | 600/- | | | | | | |
| ★ ரீசேட் | 1400/- | 700/- | 1000/- | 600/- | 900/- | 450/- | | |
| ★ ரவுசர் பெரிது | 1000/- | 500/- | | | | | | |

ஸ்தாபனத்தார் 2 ஆம் வருடமாக வழங்கும் ஆடிச் சிறப்புத் தள்ளுபடி

ஆரம்பம்: நாளை
26.07.10 திங்கள் முதல்



மற்றும் அனைத்துப் புடைவை வகைகளுக்கும் சிறப்புத் தள்ளுபடி விலையில் பெற்றுக்கொள்வதற்கு நாடவேண்டிய இடம்

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-569127)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தால் பல பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியம் உண்டு

## உதவித் தேர்தல் ஆணையாளர் விசேட செவ்வி

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக 1986 ஆம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் பதிவு இடம்பெறுகின்றது. தற்போது இடம்பெறும் இந்த வாக்காளர் பதிவை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவரின் பெயர் வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

ஒருவர் தம்மை வாக்காளராகப் பதிவு செய்யத் தவறும் பட்சத்தில் பல பாதகமான விடயங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.

இது தவிர நீண்ட காலத்தின் பின்னர் இடம்பெறும் இந்த வாக்காளர் பதிவை மக்கள் இலகுவாக செய்வதற்காக யாழ்.தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் 'உதயனு'க்கு வழங்கிய செவ்வி இது.



**கேள்வி-** இடம்பெயர்ந்த மக்கள் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதானால் என்ன நடைமுறையைப் பின்பற்றவேண்டும்?

**பதில்-** இடம்பெயர்ந்த மக்கள் தாம் தற்போது எந்தக் கிராம சேவகர் பிரிவில் வசிக்கின்றனரோ அந்தக் கிராம அலுவலரிடம் கணக்கெடுப்புப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்த வேண்டும். அவர் தம்மை எங்கு வாக்காளராகப் பதிவு செய்ய விரும்புகிறாரோ அதாவது தமது சொந்த இடத்தில் வாக்காளராகப் பதிவு செய்ய விரும்பினால் அந்தப் பகுதியின் கிராம சேவகரிடம் வழங்குதல் வேண்டும்.

அவர் தான் வசிக்கும் பிரதேசத்திலேயே வாக்காளராகப் பதிவு செய்ய விரும்பினால் அந்தக் கிராம அலுவலரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி வழங்குதல் வேண்டும். அதன் போது கிராம அலுவலரால் வழங்கப்படும் 3ஆம் படிவத்தைப் பூரணப்படுத்தி வழங்கினால் மட்டுமே போதுமானது.

**கேள்வி-** இடம்பெயர்ந்தவர்கள் தாம் வசிக்கும் பிரதேசத்தில் வாக்காளராகப் பதிவு செய்ய விரும்பின் தமது சொந்தப் பிரதேச கிராம சேவகரிடம் கடிதம் எதையும் பெறவேண்டுமா?

**பதில்-** இல்லை. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தை நிரந்தர இடமாகக் கொண்டவர்கள் யாழ்ப்பாணத்தின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் தாம் வசிக்கும் கிராம சேவகரிடம் 3ஆம் படிவத்தைப் பூரணப்படுத்திக் கொடுத்தால் மட்டுமே போதுமானது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டம் ஒன்றில் வாக்காளராகப் பதிவு செய்வதானால் மட்டுமே சொந்த இடத்தின் கிராம சேவகரிடம் கடிதம் பெறுதல் வேண்டும்.

**கேள்வி-** உயர்பாதுகாப்பு வலயத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தமது 'பி.சி விண்ணப்பப் படிவத்தை யாரிடம் வழங்க வேண்டும்?

**பதில்-** காங்கேசன்துறையில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள 34 கிராம சேவகர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர். மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் 13 கிராம சேவகர்களுக்குப் பதிலாக ஒரு கிராம அலுவலர் கடமையாற்றுகிறார். ஏனைய பிரதேசங்களில் சிறு சிறு உயர் பாதுகாப்பு வலயங்களே உள்ளன. அப்பகுதிகளில் கிராம உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர்.

**கேள்வி-** உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தற்போது வசிக்கும் பிரதேசங்களில் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதால் அவர்களுக்குப் பாதிப்புக்கள் ஏதேனும் ஏற்படுமா?

**பதில்-** இல்லை. இதனால் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாது. இடப்பெயர்வுக் காலத்தில் அவர்கள் எந்தப் பிரதேசத்தில் வாக்காளராக இருந்தனரோ அதனை அடிப்படையாகக் கொண்டே சலுகைகள் வழங்கப்படும். எனவே எந்தப் பகுதியில் வசிக்கின்றனரோ விரும்பினால் அந்தந்தப் பகுதிகளில் அவர்கள் வாக்காளராகப் பதிவு செய்ய முடியும்.

**கேள்வி-** வெளிமாவட்டங்கள், வெளிநாடுகளில் வசிப்பவர்களும் வாக்காளராகப் பதிவு செய்ய முடியுமா?

**பதில்-** வெளி மாவட்டங்கள், வெளிநாடுகளில் வசிப்பவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இங்கு வசித்தால் அவர்களின் பெயரை அவர்கள் குறிப்பிட முடியும். வெளி மாவட்டங்களில் வெளிநாடுகளில் கல்வி, தொழில் வாய்ப்புக்காக சென்றவர்களாக இருந்தால் மட்டுமே இவ்வாறு பதிவு செய்ய முடியும்.

**கேள்வி-** வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றவர்களும் வாக்காளராகப் பதிவு செய்ய முடியுமா?

**பதில்-** இல்லை. வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்ய முடியாது அவ்வாறான நடைமுறை இன்னமும் எமது நாட்டில் அமுலுக்கு வரவில்லை.

**கேள்வி-** தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களும் வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள முடியுமா?

**பதில்-** ஆம் அவர்களைப் பதிய முடியும். ஆனால் தேர்தலின் போது தேர்தல் ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்ட 8 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றேனும் இல்லாதவர்கள் வாக்களிக்க முடியாது.

**கேள்வி-** வாக்காளராகப் பதிவு செய்வதில் அரசியல் கட்சிகளின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?

**பதில்-** நாடு முழுவதிலும் 66 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இரு கட்சிகள் மாத்திரமே தங்கள் முகவர்களின் விவரப் பட்டியலைச் சமர்ப்பித்துள்ளன. ஏனைய கட்சிகள் எவையும் தங்கள் முகவர்களின் விவரப் பட்டியலைச் சமர்ப்பிக்கவில்லை.

**கேள்வி-** மக்கள் வாக்காளராகப் பதிவு செய்வதில் பாதிப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் என்ன செய்யலாம்?

**பதில்-** அப்படிப் பாதிப்பு ஏதும் ஏற்பட்டால் உதவித் தேர்தல் ஆணையாளர், தேர்தல் திணைக்களம், மாவட்ட செயலகம் எனும் முகவரிக்கு தமது சுய விலாசமிடப்பட்ட முகவரியுடன் அனுப்பி வைக்கலாம். அவர்கள் தொடர்பு கொள்வதற்கு இலகுவாக தொலைபேசி எண்ணையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும் அல்லது எனது நேரடித் தொலைபேசி இலக்கமான 021 222 2655 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும்.

விசாரணைகளை நானே நேரடியாக மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

**கேள்வி-** யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களாக இருப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளனவா?

**பதில்-** நிச்சயமாக 1985 ஆம் ஆண்டுகளின் பின்னர் வாக்காளர் இடாப்பில் புதிதாக பெயர்கள் பதிவு செய்யப்பட்டனவே தவிர நீக்கப்படவில்லை. இறந்தவர்களின் பெயர்கள் மட்டுமே நீக்கப்பட்டன. இறந்தவர்களின் பெயர்களிலும் பலரின் பதிவுகள் நீக்கப்படவில்லை. தவிர பலர் வெளிநாடுகளில் சென்று வாழ்வதால் அவர்களின் பதிவுகளும் நீக்கப்படவில்லை.


**சந்திப்பு:**
**தமிழரசன், டிலீப்**

தற்போது 8 இலட்சத்து 16 ஆயிரம் பேராக இருக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 4 இலட்சமாக குறைவடையும் நிலை ஏற்படலாம்.

**கேள்வி-** வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைவதால் பாதிப்புக்கள் ஏற்படுமா?

**பதில்-** பல வழிகளில் பாதிப்புக்கள் ஏற்டும் அதனால் யாழ். தேர்தல் மாவட்டத்தில் இருக்கும் 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் ஏற்கனவே வாக்காளர்களாக இருப்பவர்களும் கூட தம்மைப் பதிவு செய்ய வேண்டும்.

வாக்காளராகப் பதிவு செய்வது ஒவ்வொரு பிரஜையினது அரசியல் உரிமை என்பதுடன், அவர்களும் நாட்டின் ஆட்சியில் பங்கெடுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. எனவே அனைவரும் எதிர்வரும் 31 ஆம் திகதியின் முன் தம்மை வாக்காளராகப் பதிவு செய்தல் வேண்டும்.




### 3 ஆம் படிவம்

இந்தப் படிவம் இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடத்தில் விண்ணப்பிக்காது தாம் வசிக்கும் பிரதேசத்திலேயே வாக்காளராகப் பதிவு செய்ய விரும்பினால் மட்டும் பூரணப்படுத்த முடியும்.

* இதில் பிரதான குடியிருப்பாளரின் முழுப்பெயர் கேட்கப்பட்டுள்ள இடத்தில் குடும்பத் தலைவரின் பெயர் அவரின் தந்தையின் பெயருடன் குறிப்பிடப்படல் வேண்டும்.
* தேசிய அடையாள அட்டை இல்லையெனில் குறிப்பிடத் தேவையில்லை.
* தற்போது வதியும் இடத்தின் விவரங்களும் முன்னர் வசித்த (சொந்த இடத்தின்) விவரங்களும் படிவத்தில் கேட்கப்பட்டவாறு உண்மையான தகவல்களை வழங்குதல் வேண்டும்.

தகவல்கள் பிழையானவையாக அமையும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.



### கணக்கெடுப்புப் படிவம் (BC)

வாக்காளராகப் பதிவு செய்யும் அனைவரும் இந்தப் படிவத்தை பூரணப்படுத்துதல் வேண்டும். குடும்ப அங்கத்தவர்களில் 18 வயதைப் பூர்த்தி செய்திருந்தால் அவர்கள் அனைவரும் பதிவு செய்தல் வேண்டும்.

இதனை கிராம சேவகர் வீடு வீடாகச் சென்று விநியோகிப்பார். நீங்கள் பூரணப்படுத்தி கிராமசேவகரிடம் கையளித்தபின் தவறாது பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

* விண்ணப்பப் படிவத்தில் பெயர்களைக் குறிப்பிடும்போது எவரது பெயருக்கு முன்னாலும் திரு/திருமதி/செல்வி மற்றும் வேறு எந்த சொற்களும் பயன்படுத்தக் கூடாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குண்டு

மானிப்பாய்-உடுவில் வீதியில் நவீன வசதிகளுடன் கூடியவீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது).
தொடர்பு:- சோமசுந்தரம் 0779702940

## வீடு வளவு விற்பனைக்கு

வேரவல்,இளவாலை வடக்கு, இளவாலை என்ற இடத்தில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும் அதனுடன் 10 பரப்புக் காணியும் சிறுவிளான் என்ற இடத்தில் தனியான கிணற்றுடன் 42 பரப்புத் தோட்டக்காணியும் விற்பனைக்குண்டு.
குறிப்பு:- தரகர் தேவை இல்லை. தொடர்புகளுக்கு:- தொ.பே.0213210902

## செயல்பாட்டை அதிகரிப்பதுடன் உங்கள் சரீரத்தை கச்சிதமாக வைத்திருக்க உதவுகிறது

Betty Lou's®
சீனி அற்ற புரோட்டீன் சத்து பானம்



குளுக்கோஸ் கட்டுப்பாட்டு உணவுகள் நிறை கட்டுப்பாடு என்பனவற்றுக்கு Betty Lou's கச்சிதமானது, சுறுசுறுப்பான பூரணமான வாழ்க்கைக்கும் உடம்மை ஊட்டத்துடன் பேணவும் உதவுவதுடன் மேலதிக சுவையை அளிக்கின்றது
Betty Lou's உணவுக்கு பதிலாக பாவிக்க கூடிய ஆரோக்கியம் வழங்கும் பகல் போசணமாக விளங்குகிறது. இதில் அடங்கியுள்ள தாதுப்பொருட்கள் மற்றும் மினரல்கள் உடன் சமிபாடடைவதற்கும் ஏற்றதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

உங்களுக்கு ஊட்டமளிக்கும் சக்தி அளிக்கும்!



லக்ரோஸ், குளுரென், சீனி, சோயா, ஹார்மோன் இல்லாதது.

தண்ணீரில் உடனடியாக கலக்கின்றது.
உயர் தர பால் மற்றும் அரிசி புரோட்டீன் அடங்கியுள்ளது. கடல் மினரல் உட்பட அதிக உயர்சத்துகளும் கனிபொருட்களும் உள்ளடங்கியுள்ளன.

சந்தைப்படுத்துவோர்
வரையறுக்கப்பட்ட சூரி ட்ரேடிங் (தனியார்) கம்பனி
தொலைபேசி: + 94 11 4810251, ஈமெயில்: info@suritrading.com
ஹொட்லைன்: விகி 077 22 61899 / விக்டர் 077 4188698 / வதி 071 2830611
விநியோகஸ்த்தர்: City Medicals- Jaffna TP: 021-2222198
சுப்பர்மார்க்கட் மற்றும் பார்மசிகளில் கிடைக்கும்

Gracewinds Advertising

## Water proofing solutions



SEALKOTE
Bitumen emulsion for waterproofing Concrete, Bricks, tanks, walls, floors
iac Bitumen
industrial asphalts (ceylon) limited
28/1, New Nuge Road, Peliyagoda.
Tel: 2933659

## 60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.Iயின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)
60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
இலவச T.Shirt ஒன்றும் Tigo Sim English Book என்பன இலவசம்
இலவச Phone Sim
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
The ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

## பயிற்சி உறுதிச் சீட்டுத் திட்டம் மேலதிக தேர்ந்தெடுத்தல்களுடன் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது

ICBP
ICT CAPACITY BUILDING PROGRAM



இத்திட்டம் இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கைத்தொழிலின் வலுவூட்டலுக்காக இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் ஒரு மேலெடுப்பாகிய தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப வலுவூட்டல் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.

### தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பக் கைத்தொழிலில் உள்ள வாய்ப்புகள் எண்ணற்றவை...

உங்களுடைய எதிர்காலத்தை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பக் கைத்தொழிலில் நிலைநாட்டுங்கள். உங்களுடைய தகமைகளுக்கு ஒரு சர்வதேச அனுமதிபெற்ற சான்றிதழைச் சேர்த்துக்கொள்ளுவதற்குள்ள இச் சந்தர்ப்பத்தைப் பாவியுங்கள்.

இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் பிரதான தொழில்நுட்பத் தகமை வழங்குநர்களின் பரீட்சைச் செலவைத் திரும்ப வழங்கும்.

www.futureisit.lk என்னும் எங்களுடைய இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சியை பூர்த்தி செய்யுங்கள். 60 அமெரிக்க டொலர்கள் வரையில் உங்கள் பரீட்சைச் செலவைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விபரங்களும் நிபந்தனைகளும்

- ஒருவருக்குக் கிடைப்பது ஒரு மானியம் மட்டுமாகும்.
- சரியான தகவல்களை உட்படுத்துவது விண்ணப்பிப்பவருடைய தனிப் பொறுப்பாகும்.
- பரீட்சை நடாத்தப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் பரீட்சை விபரங்களை இற்றைப்படுத்தாதவர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் தகுதியை இழக்க நேரிடும்.
- இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் தனிப் பொறுப்புரிமையின் படியும் உள்ள நிதியத்தின் படியும் வழங்கப்படும்.

இவ் வாய்ப்பு எல்லா இலங்கையர்களுக்கும் திறக்கப்பட்டுள்ளது.

CISCO Microsoft Sun ORACLE Java redhat

ஜனாதிபதி அலுவலகம் Presidential Secretariat eSri Lanka smart people smart island ICTA ideas actioned

விண்ணப்பிப்பது எவ்வாறு?

1-ம் படி
www.futureisit.lk – யில் பதிவாகுங்கள்
- பயிற்சி உறுதிச் சீட்டுக் குறி
- 'Log in here' இணைப்பு
- விபரங்களை உள்படுத்துங்கள

2-ம் படி
பரீட்சை விபரங்களை இற்றைப்படுத்துங்கள் (பரீட்சை நடாத்தப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள்)
- பயிற்சி உறுதிச் சீட்டுக் குறி
- 'Log in here' இணைப்பு
- இணைந்து விபரங்களை இற்றைப்படுத்துங்கள்

3-ம் படி
- பரீட்சையின் புள்ளி அறிக்கையின் விபரத்தின் கடும் பிரதியைக் கீழ் காணும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பவும்.

இது 2010 நவம்பர் 30 ஆம்திகதி வரை செல்லுபடியாகும்.

பயிற்சி உறுதிச் சீட்டுத் திட்டம்
தனியார் துறை அபிவிருத்திச் செயல்திட்டம்
இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்
160/24, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 05.
தொலை பேசி: 94-11-2369099 தொலை நகல்: 94-11-2369091
மின்னஞ்சல்: info@icta.lk இணையத்தளம்: www.icta.lk

மேலதிக விபரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளரை 2369099 ext. 277 இல் தொடர்பு கொள்ளவும்


# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகராசா யோகாம்பிகை



யாழ்ப்பாணம், வடமராட்சி, அல்வாய் வடக்கு, துவாரகையைப் பிறப்பிடமாகவும் லங்கெந்தால், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராசா யோகாம்பிகை 18.07.2010 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கா.கிருஷ்ண பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்)-பவளம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தெகனை காசிநாதர்-மணிமேகலை (பவுண்) தம்பதியரின் பாசமிகு மருமகளும் கா.யோகராசாவின் (சைவம்) அன்பு மனைவியும் மேகலா, காசினி, கிருஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கபில் சங்கரின் மாமியாரும் சப்தகிரிநாதன், திருமதி ப.கிருஷ்ண வேணி (லண்டன்), திருமதி சு.கலைவாணி (சுவிஸ்), செந்தில்நாதன் (செந்தி- சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாஸ்கரதாஸ் (லண்டன்), சுகுமார் (சுவிஸ்), திருமதி செ.நிர்மலாதேவி (சுவிஸ்), கா.முருகதாஸ் (இந்தியா), கா.ஞானதாஸ், அமரர் கா.ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சுவிஸிலுள்ள லங்கெந்தால் மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை(26.07.2010) திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 4.30 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெறும். குறிப்பிட்ட நேரத்தில் இங்கு அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். தாங்களும் கலந்து துக்கம் பகிர்ந்துகொள்ளலாம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாரகை,
அல்வாய் வடக்கு.
(சி/569131)
தகவல்:
கி.சப்தகிரிநாதன்.

## திருமதி கந்தசாமி பத்மாவதி (தேவி)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பத்மாவதி (தேவி) நேற்று (24.07.2010) சனிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி கந்தசாமியின் (தனங்கிளப்பு) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான மானார்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திரிபுரியம்மா மற்றும் செல்லம்மா, பத்மநாதன், துரைசிங்கம், கோபாலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினம், விவேகானந்தன், சரஸ்வதி (சுவிஸ்), சரஸ்வதி, சிவபாக்கியம், குமாரசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ராஜினி (சுவிஸ்), யசோதினி, காலஞ்சென்ற ஜெயன் மற்றும் ரஜனி, தயாபரன் ஆகியோரின் சிறிய தாயாரும் நகுலேஸ்வரன் (சுவிஸ்), மனோகரன், புவிகரன், ஜெயந்திரி (சுவிஸ்), ஜெனனி (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் வாரணன் (சுவிஸ்), மதுரா (சுவிஸ்), இளவதனன், கஜவதனன், தக்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (24.07.2010) சனிக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.
(100940)
தகவல்:
சி.கந்தசாமி (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழர்களின் வீரத்தின் தனித்துவத்தை கண்முன் நிறுத்திய இனியவை நாற்பது கண்காட்சி ஊர்வலம்

உலகில் ஏறத்தாழ 6000 மொழிகள் இருக்கின்றன. இவற்றுள் கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு (Hebrew), சீனம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய ஆறு மொழிகளையே செம்மொழிகள் (Classical Languages) என அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அரபு, பாரசீகம் ஆகிய இருமொழிகளையும்



பேராசிரியர் ஜோர்ஜ். எல் ஹார்ட்

சேர்த்துச் செம்மொழிகளின் எண்ணிக்கை எட்டு எனக் கொள்வோரும் உள்ளனர்.

Classical Language என்பதில் Classical என்பது மேலை நாட்டில் உருப்பெற்ற ஒரு பண்பாட்டுச் சொல். இதற்குரிய தமிழாக்கமாகவே செம்மொழி, செவ்வியல்மொழி என்ற பதங்களைக் கையாள்கின்றனர். உலகச் செம்மொழிகள் என கி.பி. 18 ஆம் நூற்றாண்டு வரை கிரேக்கமும் இலத்தீனும் மட்டுமே கருதப்பட்டு வந்தன. காலப்போக்கில் ஏனைய மொழிகள் 'செம்மொழி' என்ற தகுதிப்பாட்டைப் பெற்றன. இந்திய மத்திய அரசு 12.10.2004 இல் தமிழ் மொழியைச் செம்மொழியாக அங்கீகரித் தது. ஆயினும் பன்னாட்டு நிறுவனமான ஐ.நா. வின் யுனெஸ்கோ தமிழையும் சமஸ்கிருதத்தை யும் செம்மொழி என்ற தகுதிப்பாடு உடையதாக இன்றுவரை அறிவிக்கவில்லை.

ஒரு மொழிக்குச் செம்மொழி என்ற தகைமையை வழங்க வேண்டுமாயின் அது பல்வேறு அடிப்படை விதிகளுக்குப் பொருந்துவதாக இருக்க வேண்டும் எனப் பேராசிரியர் ஜோர்ஜ் எல். ஹார்ட் குறிப்பிடுகின்றார். "அது தொன்மை மிக்கதாக, பழைமைச் சிறப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டும். அது இன்னொரு மொழி மரபில் இருந்து கிளைத்து வந்ததாக இல்லாமல் தனக்கேயுரிய தனித்துவமான மொழி மரபினைப் பெற்றதாகவும் அம்மொழி மரபு பெரிதும் தானே படைத்த இலக்கியச் செழுமையில் வளர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். இதற்கெல்லாம் மேலாக அம்மொழி விரிந்து பரந்த வளம் செறிந்த தொன்மை யான பேரிலக்கியச் செல்வத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும்." தமிழ் இந்த அடிப்படைகள் யாவற்றையும் பூர்த்தி செய்கின்றது.

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - 2010 03

## யாழகனின் இரு பார்வை

தமிழ் ஒரு செம்மொழி என 1856 ஆம் ஆண்டில் மேனாட்டுத் தமிழறிஞரான கால்டுவெல் தான் எழுதிய "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இது இடம்பெற்று 30 ஆண்டுகள் கழித்து 1887 இல் பரிதிமாற்கலைஞர் தமிழ் ஒரு செம்மொழி என உறுதிபடக் கூறினார். தமிழ் மொழியின் வரலாறு என்ற தமது நூலின் முடிவுரையில் அவரது கருத்து இடம்பெற்றுள்ளது. தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பல்வேறு அமைப்புக்களும் அறிஞர்களும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து முன்வைக்கத் தொடங்கினர். ஆயினும் இந்திய மத்திய அரசு இதனைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் ஜோர்ஜ் எல். ஹார்ட் 'தமிழ் ஒரு செம்மொழி' என 2000 ஆம் ஆண்டில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். இந்த அறிக்கையும் கலைஞர் மு.கருணாநிதி. கொடுத்த அரசியல் அழுத்தங்களும் சேர்ந்துதான் தமிழைச் செம்மொழியாக 2004 இல் அரியாசனம் ஏற்றின.



சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்



பேராசிரியர் ஜோர்ஜ் எல். ஹார்ட், அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியாப் பல்கலைக்கழகத்திலே தமிழ், சமஸ்கிருதத் துறைகளுக்குப் பொறுப்பானவர். சமஸ்கிருதம், தமிழ், கிரேக்கம், இலத்தின் மொழிகளில் புலமை பெற்றவர். அந்த மொழிசார் இலக்கியங்களை அவற்றின் மூல மொழியிலேயே ஆழக் கற்றறிந்தவர். இவரது துணைவியான கௌசல்யா ஓர் இந்தியத் தமிழ்ப் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் ஒரு செம்மொழி என்ற உணர்வு உந்துகை தமிழர் மத்தியில் ஏற்பட வேண்டும் என்ற வேட்கையே இநத மாநாடாக மலர்ச்சி பெற்றது. "பிறநாட்டுப் பண்பாட்டுத் தாக்கத்தால் தத்தம் இலக்கியப் பண்பாட்டுப் பாரம்பரியங்களின் தனித்தன்மைக்கு ஊறு ஏற்பட்டு விடும் என்ற அச்சவுணர்வு தோன்றும் போதும், இத்தாக்கங்களின் விளைவாகத் தத்தம் இன அடையாளங்கள் அழிந்து விடுமோ என்று அஞ்சும் போதும், தத்தம் இன அடையாளத்தை நிலைநாட்ட வேண்டிய சமுதாய – அரசியல் தேவைகள் ஏற்படும் போதும், ஒவ்வொரு மொழிக் குழுவினரும் தனித்தன்மை



தஞ்சைப் பெரிய கோவில்

யினை இழக்காத தம் பழங்காலப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைச் செவ்வியல் பண்பாடுகளாக நினைவு கூர்ந்து அவற்றிற்குப் புத்துயிர் நல்க முயலும் பொதுப் போக்கினை உலகெங் கிலும் காணலாம்" எனக் கலாநிதி ஜி. ஜோன் சாமுவெல் குறிப்பிடுவ தும் இங்கு நோக்கத்தக்கது. இந்த அடிப்படைகளிலேயே செம்மொழி மாநாட்டு நிகழ்வுகளைப் பொருத்திப் பார்க்க முடிகின்றது. அதிலும் குறிப்பாக மாநாட்டில் இடம்பெற்ற 'இனியவை நாற்பது' என்ற கண்காட்சி ஊர்வலம் தமிழரது பழம் பெருமைகளைப் பறை சாற்றுவதாகவும் புத்துலகின் போக்குக்குத் தமிழர் வாழ்வியலைத் தயார் செய்வதாகவும் அமைந்திருந்தது.

மாநாட்டின் தொடக்க நாள் மாலை வேளை, அவிநாசிச் சாலையில் மிக நீண்ட நேரம் ஊர்வல நிகழ்வுகள் இடம்பெற்றன. ஊர்வலத்தைப் பார்வையிட மக்கள் வெள்ளம் அலை மோதியது. எங்கெங்கெல்லாம் கட்டடங்கள் இருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் மனிதத் தலைகளே தெரிந்தன. வீதியின் ஓரத்தில் கிலோமீற்றர்க் கணக்கான தூரத்திற்குப் (அகலம் குறைந்த) பந்தல், மேடை என்பன அமைக்கப்பட்டு பேராளர்கள் அமர்த்தப்பட்டனர். மூன்று வரிசைகளில் கதிரைகள் போடப்பட்டிருந்தன. பேராளர்களுக்கு இரண்டாவது மூன்றாவது வரிசைகளே வழங்கப்பட்டன. முதலாவது வரிசை கலைஞர் குடும்பம் சார்ந்தவர்களுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. மூன்றாவது வரிசையில் உட்கார்ந்திருந்து வீதியில் இடம்பெறும் நிகழ்வுகளை அவதானிப்பது சற்றுக் கடினமாகவே அமைந்தது.

தமிழரின் வீர உணர்வை வெளிப்படுத்தும் வகையிலான ஊர்திகள் அதிகளவில் அமைக்கப்பட்டிருந்தன. தமிழ்ப் பெண்களின் வீர உணர்வை வெளிப்படுத்தும் வகையிலும் காட்சிகள் அமைந்திருந்தன. [illegible] போர்க்களத்தில் தாதியாகப் பணிசெய்த தமிழ்ப் பெண்களைச் சுட்டிநின்றது., வெள்ளையரை எதிர்த்த வேலு நாச்சியாரின் ஊர்தி பெண்ணின் மேன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.



பரிதிமாற்கலைஞர்

காட்சி அமைப்புக்கள் கலைத் துறையில் நிபுணத்துவம் பெற்ற வல்லுநர்களின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்டதாக அறிவித்தனர். ஒவ்வொரு காட்சி அமைப்பையும் நிர்மாணிப்பதற்கு மிகப்பெரிய பாரவூர்திகளைப் (body இல்லாத கொன்ரெயினர் லொறிகளை)ப் பயன்படுத்தியிருந்தனர்.

தற்கால அறிவியல் உலகைத் தமிழோடு பொருத்துவதாகவும் காட்சிகளை அமைத்திருந்தனர். 'புதியதோர் உலகம் செய்வோம்', நவீன விஞ்ஞான வளர்ச்சிகள் காட்டும் தமிழ் அறிவியல் என்ற தலைப்புக்களிலும் காட்சிகளை அமைத்திருந்தனர். தஞ்சைப் பெரிய கோவில் முதலிய கலைப் பொக்கிஷங்களையும் ஊர்திகளாக அமைத்திருந்தனர். காட்சி வாகனத்திற்கு இடையே கலைக் குழுவினர் வெவ்வேறாக இணைந்து கலை நிகழ்வுகளை ஆற்றுகை செய்தனர். குரவைக் கூத்து முதலிய பாரம்பரியக் கலைகள் முதல் நவீன இசைக் கோலங்களுக்கேற்ற நடனங்கள் வரை ஆற்றுகை செய்தபடி ஊர்வலத்தில் ஈடுபட்டனர். பொழுது சாய்ந்தவுடன் வாண வேடிக்கைகள் இடம்பெற்றன.

இனியவை நாற்பது கண்காட்சி ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்த நாற்பது ஊர்திகளும் மாநாடு நிறைவெய்தும் வரை மக்கள் பார்வைக்கு விடப்பட்டிருந்தன. ஊர்திகள் ஒவ்வொன்றும் ஒன்றைவிட ஒன்று தரமென நினைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. தமிழர்தம் தனித்துவ வீர அடையாளம் ஊர்திப் பவனியூடாக வெளிக்காட்டப்பட்டது.

மாநாட்டின் இரண்டாம் நாளிலிருந்து பிரதான பந்தலுக்குத் தெற்கே, பிரமாண்டமான நூற்கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. புத்தகக் கடல் எனக் குறிப்பிடத்தக்க வகையில் நூற்றுக்கு மேற்பட்ட வெளியீட்டகத்தார் புத்தகங்களைக் குவித்திருந்தனர். பத்து வீதம் முதல் முப்பது வீதம் வரையான விலைக் கழிவில் புத்தகங்களை விற்பனை செய்தனர்.



கால்டுவெல்

அங்கும் எந்நாளும் மக்கள் வெள்ளம் அலை மோதியது. பல வெளியீட்டகங்கள் 'செம்மொழி மாநாட்டுச் சிறப்பு மலர்' என்ற பெயர்களில் நூல்களை வெளியிட்டிருந்தன. பத்திரிகை நிறுவனங்களும் சிறப்பு மலர்களை வெளியிட்டிருந்தன. இவை பெரும்பாலும் இருநூறு இந்திய ரூபா விலையுடையதாக அமைந்திருந்தன. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தினர் 'செம்மொழித் தமிழ்' என்ற பெயரில் 1562 பக்கங்களில் முந்நூறு இந்திய ரூபா விலையில் அழகிய புத்தகம் ஒன்றை வெளியீடு செய்திருந்தனர். பதினெண்கீழ்க்கணக்கு, மேற்கணக்கு, தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் யாவும் ஓரே புத்தகமாக 'செம்மொழித் தமிழ்' என்ற பெயரில் வெளிவந்திருந்தது. பேராளர்கள் பலரும் இந்நூலின் பல பிரதிகளை ஆவலுடன் வாங்கியதை அவதானித்தேன். இலங்கைக்கான விமானப் பயணத்திற்கான நிறையின் வரையறையை நினைக்கப் புத்தகங்கள் வாங்க வேண்டும் என்ற ஆசையும் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. புத்தகக்கடைகளுக்குத் திரண்டு வந்த வெள்ளை வேட்டி, வெள்ளை சேட் அணிந்த தொண்டர்கள் கலைஞர் எழுதிய நூல்களின் பெயர்களைச் சொல்லி வாங்கிச் சென்றனர். அத்தகைய புத்தகங்களைக் கைகளில் வெளித்தெரியும்படி வைத்திருப்பதைக் கௌரவமாகவும் கருதினர்.

*(பார்வை தொடரும்)*



**ச.லலீசன்,** விரிவுரையாளர்,கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நிறுவனத்தின் மாணவனாகிய
**கணேசலிங்கம் பவன்**
2009ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் தனிநடனம் பிரிவு IVஇல் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காகவும் வட இலங்கை சங்கீதசபை தரம் 05 முதலாம் பிரிவில் சித்தி அடைந்தமைக்காகவும் இவரை மனமுவந்து பாராட்டுகின்றோம்.

இணுவையூர்,
குமரநர்த்தனாலயம்.

நடன ஆசிரியர்
ந.குமரவேளும்,
மாணவர்களும்.

(100933)

## தேவை

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கணனி நிறுவனம் நடத்தக் கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்ட கட்டடங்கள் தேவைப்படுகின்றன.

மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்கள் விரும்பத்தக்கவை. 2000 சதுரஅடி பரப்புடைய கட்டடங்கள் தேவைப்படுகின்றன. உரிய விவரங்களுடன், கீழ் வரும் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 011 - 4734529
மின்னஞ்சல்: Training centre 2010@gmail.com

(சி/569126)

## இளங்கலைஞர் மன்றம் அளிக்கும் சிறப்பு இசைக் கச்சேரி

இன்று (25.07.2010) ஞாயிறு பி.ப. 4 மணி

| | |
|---|---|
| இடம் | : மன்றக் கலாமண்டபம் |
| பாட்டு | : ஏ.கே.கருணாகரன் |
| வயலின் | : கே.குகாபரன் |
| மிருதங்கம் | : எம்.மாதவன் |
| முகர்சிங் | : எஸ்.செந்தூரன் |

இசைநுகர எல்லோரும் வருக!

(சி/569124)

## சேவை

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் உயர்ந்த தரத்தில் நினைவு மலர் மற்றும் நினைவு மலர்களுக்கான படங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

பிள்ளையார் அச்சகம்
நல்லூர்.

## புறொயிலர் விற்பனைக்கு

நிறைகூடிய புறொயிலர் உடன் சுத்தம் செய்யப்பட்டது 1 kg 480/= திங்கள், புதன், சனி, ஞாயிறுகளில் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

குமரன் பாம்
227, பிறவுண் வீதி (கலட்டிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.

## மணமகன் தேவை

1976இல் பிறந்த மகநட்சத்திரம், 8இல் செவ்வாய், சூரியன் ராகுவும் கிரகபாவம் 32 உடைய பட்டதாரி பயிற்சி பெற்ற ஆசிரியைக்கு சைவபோசன மணமகன் தேவை.
தொ.பே- 0777243430, 0779236931

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் விற்பனை மேம்படுத்தலுக்கான பெண் ஊழியர்கள் தேவை. (Promotion Girls)
கல்வித்தகைமை- O/L, A/L
விற்பனை அனுபவத்திற்கு முன்னுரிமை.
05.08.2010க்கு முன்னர் தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு விள.இல -4047
மே/பா.உதயன்.

## காணிகள் விற்பனைக்கு

I. கொய்யாத்தோட்டம்.
கடற்கரை வீதியில் உள்ள வீடு.
(Bar, Restaurant, Tourist Resident)
ஆகியவற்றுக்குப் பொருத்தமானது - 2பரப்பு.
II. கஸ்தூரியார் வீதி.
பண்ணையூர் அந்தோனியார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0772492268

## தாவடி சமிதியில் இன்று குருபூர்ணிமா

யாழ்ப்பாணம்,ஜூலை24

ஸ்ரீ இராமகிருஷ்ண குரு பூர்ணிமா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு மானிப்பாய் வீதி, தாவடியிலுள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பஜனை, குருகீதை வாசிப்பு மற்றும் 'சற்குரு சரணம்' என்ற தலைப்பில் சிறப்பு ஆன்மீக உரையும் இடம்பெறும்.

(ஓ-323)

## நல்லூரில் இன்று இசைக்கச்சேரி

யாழ்ப்பாணம்,ஜூலை25

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சங்கீத வித்துவான் ஏ.கே. கருணாகரனின் சிறப்பு இசைக்கச்சேரி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மன்றக் கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கச்சேரியில் முதுகலைமாணி கே.குகபரன் (வயலின்), முதுகலைமாணி எம்.மாதவன் (மிருதங்கம்), கலாவித்தகர் எஸ். செந்தூரன் (முகர்சிங்) ஆகியோர் அணி செய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

(ஓ-1)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நல்லூர் மூத்த விநாயகர் வீதி, கடுக்காயடி லேன் சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணியில் அமைந்த மூன்று அறை, குசினி மற்றும் தண்ணீர் வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0777200083, 0213007562

(101183)

## வீடு வளவு விற்பனைக்கு

கண்டுக்குளி, கோயில் வீதி ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொ.பே.: 0771356304

## G.C.E (A/L) 2010 பரீட்சை

பரீட்சைக்கு உதவும் விசாகா, றோயல், கண்டி Chemistry Biology வினாத்தாள்கள் முழு விடைகளுடன் வீடு வந்து கற்பித்தல். அழையுங்கள் வித்யா, சுழற்றுங்கள் 0777730838

(100777)

## கண்ணீர் அஞ்சலி

எமது உறவினராகிய
பரமேஸ்வரன் சறோஜினிதேவி (கனடா), பரமேஸ்வரன் சுகந்தி (கனடா), பரமேஸ்வரன் ராதிகா (கனடா), திருமதி மனோரஞ்சன் பிரதீபா (லண்டன்)
ஆகியோரின் அன்புத் தந்தையும்
திருமதி குமாரி சின்னத்துரையின் (கனடா) மகனுமான

**அமரர் சின்னத்துரை பரமேஸ்வரன் (கனடா)**
(முன்னாள் உத்தியோகத்தர், மக்கள் வங்கி )

அவர்களின் மறைவுச்செய்தியை 22.07.2010 அன்று கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறவினர்கள் - வே.இ.திருநாவுக்கரசு (குடும்பம்)
பாலாவோடை, களபூமி, காரைநகர்,
தி.ராதாகிருஷ்ணன் (கனடா).

(100767)

THE HALO TRUST

The HALO Trust is a British Mineclearance NGO and has been working in Sri Lanka since 2002 clearing mines and other explosive remnants of war.

We are currently looking to recruit a workshop manager for our Kilinochchi location.

This role will involve management of all workshop staff and distribution of workload, liaising with Fleet Manager and Office Manager in Jaffna headquarters, management and control of vehicle spare parts, administration of documents for all vehicles and machinery.

You will be working with national and international staff and will be required to report to our Kilinochchi expatriate manager.

Good spoken English required. Experience in management and administration.

Computer literate in MS Word, Excel and Outlook.
Salary is dependent on experience and ability.
Interested candidates should submit their bio-data, contact details and a brief summary of relevant experience to:

**The HALO Trust**
**12, Nallur Cross Road**
**Nallur, Jaffna**
**Email: mail@halosrilanka.org,**

**All applications must be submitted no later than Saturday 31st July 2010**

THE HALO Trust believes in equal opportunities, both sexes and all backgrounds are encouraged to apply. Please note that only short listed candidates will be contacted and invited for the interview.

OPPORTUNITIES

## Walk - in Interview

TOKYO SUPER MIX
READY MIXED CONCRETE

### READY MIXED CONCRETE PLANT - JAFFNA

Tokyo Cement Company (Lanka) PLC., a prestigious public quoted company with foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufacturers and importers need suitably qualified individuals for the following positions.

### Accounts Assistant

The applicant should Have:-

- Minimum Three (03) passes in G C E (A / L) in Commerce stream.
- Completion of stage II examination of AATSL or equivalent.
- Exposure and competency in MS WORD and MS EXCEL.
- Minimum two (02) - three (03) years experience in the similar capacity.
- Age below 35 years.

### Technical / Sales Officer

We seek for immediate employment male officers with Quantity Surveying qualifications or its equivalent with at least 2 - 3 years experience in construction field.

They should be prepared to visit sites on motorcycle provided by the company and visit construction sites / contractors to secure sales of Ready Mixed Concrete. Also he should be able to determine concrete quantity required to the construction of various structure.

Age below 35 years.

Walk - In interviews will be held on 27th July (Tuesday) 2010 from 11.30 am. to 04.00 pm. at the following address.

**St. Anthony's Hardware (Pvt) Ltd**
No. 489, Navalar Road, Jaffna.
For more details:- 0777789130

## Your Future STUDY in UK



UKRAINE, NEWZELAND, INDIA, CYPRUS

INTAKES @ August, September, October

- MBBS, MS, MD [Ukraine, India]
- COMPUTING & IT
- BUSINESS & MANAGEMENT
- ACCOUNTING & FINANCE
- TRAVEL & TOURISAM
- DESIGNING & ARCHITECTURE
- ENGINEERING
- HOTEL MANAGEMENT
- LANGUAGE & EDUCATION

**Also Handling :**
- Tourist Visa
- Visit Visa
- Dependent Visa
- Administrative Review
- Re-Apply

**Our Services for Students :**
- Visa Consulting
- Career Advice
- Scholarship
- Accommodation
- Air Ticket
- Airport Pick-Up
- Part Time Jobs

**Note**
Conditional Offer and CAS Statement Within 5 Days

Minimum Entry Qualification : O/L or Equivalent

SPONSOR களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும்


SIEG
SRIRAM INTERNATIONAL EDUCATION GROUP

111 / 2, Brown Road, Kokuvil East, Jaffna.
Tel - 021- 2221875
Head Office : 169, George R De Silva Mawatha, Kotahena, Colombo-13.
Tel: 011-2434989 Fax: 011-2434767


After Office Hours & Sundays Please Contact - 077 3502612

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாணவத் தூரிகை



தி.சதுர்ஜன், தரம் -6 C, யாழ்.இந்துக் கல்லூரி.



பொ.கஜனானி, தரம் -5 B, யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி.



ஜெ.டிலைக்சன், தரம் -7B, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.



தி. மாதங்கி, தரம் -2A, யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை



சூ.ஆதவன், யா/பண்ணாகம் மெ.ம.வி.



இ.கிசாந், தரம் -6, யாழ்.இந்துக் கல்லூரி.



சு.நிக்ஷன், தரம் -6 B, யா/வைத்தீஸ்வரா கல்லூரி.



அ.யோபல் விக்ரோரியன், தரம் -8 B, யா/பு.நீயேக் கல்லூரி.

## நம்பினோரை ஏமாற்றக்கூடாது

ஒரு பெரிய ஏரியில் நிறைய முதலைகள் இருந்தன. அந்த ஏரிக்கரையில் ஒரு பெரிய மரத்தில் குரங்கு ஒன்று வசித்து வந்தது. ஒரு ஆண் முதலையும் குரங்கும் மிகுந்த நண்பர்களாயின. அம் முதலை தினமும் அம் மரத்தடிக்கு வந்து குரங்குடன் உரையாடி விட்டுச் செல்வது வழக்கம். இவ்வாறு பல நாள்கள் நடந்து வந்தது. அம் முதலை தன் மனைவியிடம் அவ்வேரியின் நடுவில் ஒரு சிறு தீவில் வசித்து வந்தது. ஒரு நாள் ஆண் முதலையும் பெண் முதலையும் மரத்தடிக்கு வந்தன. அங்கு குரங்குடன் ஆண் முதலை பேசுவதையும் அவர்களது சிநேகிதத் தன்மையையும் கண்டது. அப்பெண் முதலை குரங்கின் ஈரலை உண்ண வெகு நாள்களாக ஆவலோடு இருந்தது. முதலை இரண்டும் தமது இருப்பிடம் சென்றன. அங்கு சென்றதும் பெண் முதலை ஆண் முதலையிடம் '' எனக்கு வெகு நாள்களாக குரங்கின் ஈரலை உண்ண ஆவல். அதனால் எப்படியாவது உனது நண்பன் குரங்கை அழைத்துவந்தால் குரங்கின் ஈரலை நாம் இருவரும் சேர்ந்து உண்ணலாம் என்றது பெண் முதலை. இதனைக் கேட்ட ஆண் முதலை தனது நண்பனுக்குத் தீங்கு விளைவிக்க உடன்படவில்லை. அதனால் அது முடியாது என்றது. உடனே பெண் முதலை தனக்கு குரங்கின் ஈரல் கிடைக்கவில்லை என்றால் உயிரை நீத்து விடுவதாகப் பயமுறுத்தியது. வேறு வழியின்றி ஆண் முதலை குரங்கைக் கூட்டிவரச் சம்மதித்தது. மறு நாள் காலை மரத்தடிக்கு வழக்கம் போல சென்றது. இன்று என் மனைவி உனக்கு விருந்து வைக்க நினைத்திருக்கிறாள். அதனால் தாங்கள் என் முதுகில் ஏறிக் கொண்டு என்னுடன் எமது இருப்பிடம் வந்தால் நாம் விருந்து உண்டு திரும்பலாம் என்றது. முதலில் குரங்கிற்கு முதலையுடன் செல்ல விருப்பம் இல்லை. ஆனால் முதலை குரங்கை வற்புறுத்தி அழைத்துச் சென்றது. குரங்கு முதலையின் முதுகில் உட்கார்ந்து கொண்டது. முதலை தண்ணீரில் நீந்திச் சென்றது. இரண்டும் போய்க் கொண்டிருக்கும் போது முதலை குரங்கிடம் ''தங்களை எதற்குக் கூட்டிச் செல்கிறேன் தெரியுமா? எனது மனைவி தங்களது ஈரலை உண்ண வெகு ஆவலாக உள்ளாள். அதற்காகத் தான் எனது இருப்பிடம் அழைத்துறச் செல்கிறேன் என்றது. இது கேட்ட குரங்கு இதைத் தாங்கள் மரத்தடியிலேயே கூறியிருக்கக் கூடாதா? ஈரல் அம் மரத்தில் உலர்த்தியிருக்கிறேன் என்றது. குரங்கின் வார்த்தைகளை நம்பிய முதலை மீண்டும் மரத்தடிக்கு வந்தது. அங்கு வந்து சேர்ந்ததும் குரங்கு தாவி மரத்தில் ஏறிக்கொண்டது. உடனே முதலையிடம் இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தங்களுடன் வந்து உயிர் துறக்க விரும்பவில்லை என்றது. இது கேட்ட முதலை தனது முட்டாள் தனத்தை நினைத்து வருந்தியது.



**நிலவன்.**

## பொது அறிவு

01. உலகிலேயே மிகச்சிறிய நாடு எது?
வத்திக்கான்

02. உலகிலேயே பெரிய நகரம் எது?
லண்டன்

03.உலகிலேயே மிக உயரமான மலை எது?
இமயமலை

04.உலகிலேயே மிகப் பெரிய நாடு எது?
கனடா

05.உலகிலேயே ஆழமான ஆழி எது?
மரியானா ஆழி

06.உலகின் மிகப் பிரபலமான விஞ்ஞான சஞ்சிகை எது?
நேச்சர்

07.உலகில் பெரிய ஏரி எது?
கஸ்பியன்

08.கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு எது?
நெதர்லாந்

09.உலகில் மிக உயரத்தில் உள்ள ஏரி எது?
திதிக்கா

10.உலகில் மிகப் பெரிய நன்னீர் ஏரி எது?
சுப்பீரியர் ஏரி

மதுஷா, தரம் - 7
யாழ்.நல்லூர் ஸ்தான சாதனா பாடசாலை.

## விடுகதைகளும் விடைகளும்

1. பூமியில் விளையும் ரோசாப்பூ அது என்ன ?
2. காட்டிலும் மேட்டிலும் முளைக்காத பனை என்ன பனை?
3. நீரில் கரையும் பூ என்ன பூ?
4. அடர்ந்த காட்டில் இருண்ட மனிதன் அது என்ன?
5. பார்க்க அழகான பூ, கையில் எடுக்க முடியாத பூ அது என்ன?

1.மாணிக்கக்கல்
2. கற்பனை
3. உப்பு
4. பேன்
5. நெருப்பு

க.ஐஸ்வர்யா, தரம் - 9,
கிளி/புனித அந்தோனியார் றோ.க. பாடசாலை.

# சிறுவர் கதிர்

### உங்களுக்கும் பரிசில்கள்

**விடை தெரியுமா? 66**

1.உலக வங்கியின் தெற்காசியாவிற்கான உப தலைவரின் பெயர் என்ன?

2.பத்திரிகைச் சுதந்திரத்தை நிலை நிறுத்தப் போராடியமைக்காக 2010 ற்கான விருது யாருக்குக் கிடைத்துள்ளது?

3.அண்மையில் ஓய்வுபெற்ற இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர் யார்?

4.சர்வதேச தினமாக பிறந்த தினம் கொண்டாடப்பட்ட கறுப்பினத் தலைவர் யார்? எத்தனையாவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது?

5.சூரிய மண்டலத்துக்கு அப்பால் சூரியனை விட பெரிய நட்சத்திரம் எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 01.08.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா?**

**64 இற்கான சரியான விடைகள்**

1. காளான்
2. திபெத்
3. சுறாமீன்
4. வட்டம்
5. வாத்து

### பரிசுபெறுவோர் விவரம்

1. அ.அருள்நாயகன், தரம் 8C, இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி
2. ந.பவதுர்ஷன், தரம் 12, யாழ். இந்துக் கல்லூரி
3. சி.லதாங்கி, ஆண்டு 01, யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஜூலை 25 முதல் ஜூலை 31 வரை

தருபவர் - வித்யா

### மேடம்



இந்த வாரம் சோர்வின்றி ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். நீண்ட நாட்களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி உண்டு. எதிலும் பொறுமை, நிதானமாகவும், கவனமாகவும் செயற்பட வேண்டும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். சுக்கிரனும், புதனும் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், விருந்து, விசேடங்கள், வெளிவட்டாரத் தொடர்புகளில் சந்தோஷமான அனுபவங்கள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். நிலம், பூமி விவகாரங்கள் சாதகமாக அமையும். எதிர்ப்புகள், போட்டிகள் விலகி ஏற்றம் பெறுவீர்கள். நீண்ட நாள் கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். பொலிஸ் தொடர்பான அனுகூலம் உண்டு. சூரியன் சாதகமற்ற நிலையில் இருப்பதால் அலைச்சல்கள் அதிகரிக்கும். தந்தை, அதிகாரிகள், அரசியல்வாதிகளால் சிரமங்கள் உண்டு. கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம்.

### இடபம்




இந்த வாரம் எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவுக்கு வரும். தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம். சந்தோஷ அனுபவம் பெறலாம். இதுவரை இரண்டாம் இடத்தில் இருந்து பல்வேறு சிரமங்களை, கொடுத்துக் கொண்டிருந்த சூரியன் தற்போது மூன்றாம் இடத்தில் இருப்பது அனுகூலமே. தந்தை வழியில் உருவான மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். அவர் மூலம் சில நன்மை அடையலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் ஆதரவாலும், செல்வாக்கு அதிகரிப்பதாலும் மகிழ்ச்சி அடைவர். பணிபுரிவோர் நிர்வாகத்தினிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். அவசரமாக்செயற்பட்ட நிலைமை மாறி, சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், உறவுப் பெண்கள், சகோதரிகள், மனைவி வழி உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். விருந்து, உபசரிப்புகளால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள், ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். ஐந்தாம் இடத்தில் இப்போது சனியும், அவசரப்பட்டும், கோபத்திலும் சில காரியங்களை செய்து விட்டு பின்னர் வருத்தம் அடைவீர்கள். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் தொல்லைகள் உண்டு. சந்திராஷ்டமம் என்பதால் கவனம், எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். தண்டச் செலவுகள் நேரும்.

### மிதுனம்



இந்த வாரம் சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களுக்கு ஆள்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலை, பயம் கொள்வீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். தொழில் ரீதியான சில வேலைகளை மற்றவர்கள் மூலம் சுலபமாக முடிப்பீர்கள். நோய் உபாதைகள் விலகி தெம்பு உற்சாகம் பெறுவீர்கள். இரண்டாம் இடத்தில், சூரியன் இருப்பதால் யாரிடமும் சூடான பேச்சுவார்த்தைகளை, வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். மற்றவர்களை நம்பி உத்தரவாதம் தருவதும் நல்லதல்ல. அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை, மருத்துவம் தொடர்பான விடயங்களில் ஆதாயங்களை விட, சிரமங்களும், இடர்பாடுகளுமே அதிகம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான விஷயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. அவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். நான்காம் இடத்தில் இருக்கும் சனியுடன், தேக ஆரோக்கியத்தில் சில குறைபாடுகள் ஏற்படலாம். பொறுப்பான சில வேலைகளை முடிக்க அங்கும், இங்கும் அலைய நேரிடலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். தாயாருடன் கருத்து வேறுபாடுகள் வரலாம். இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். நல்ல செய்தி கேட்கலாம்.

### கடகம்



இந்த வாரம் சில வேலைகள் காரணமாக நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். உறவினர் ஒருவர் உங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆதாயம் பெறலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளை எதிர்கொள்ளலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். உடல் நலக்குறைவால் அவதிப்படலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கனிவாகவும், அன்பாகவும் பேசி சிக்கலான சில காரியங்களை முடிப்பீர்கள். விவசாயிகள் விளைபொருள்கள் விற்பனையால் ஆதாயம் பெறலாம். நிலம், பூமி வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பீர்கள். ராகு சாதகமான நிலையில் உள்ளதால், மாற்று மதத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளைச் சந்திக்கலாம். அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை ஆதாயமில்லை. பணவரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்



இந்த வாரம் தன்னம்பிக்கை, புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். ஏதோ ஒரு வகையில் பண ஆதாயம் அல்லது பொருள் ஆதாயம் பெறலாம். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். உறவினர்கள் வகையில் அன்புத்தொல்லைகள் உருவாகலாம். புதியவர்கள் சிலரின் நட்பு கிடைக்கும். விருப்பம் இல்லாமல் மற்றவர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் சில காரியங்களைச் செய்வீர்கள். விரய ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், தந்தை வழியிலோ அல்லது உங்களுக்கோ மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். அரசியல்வாதிகளை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். அரசு தொடர்பான காரியங்கள் முடியாமல் இழுத்தடிக்கலாம். பெரிய மனிதர்களைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகளிலும் தடை ஏற்படலாம். சுக்கிரன் சாதகமான நிலையில் உள்ளதால், பகட்டான ஆடை, ஆபரணங்கள் வாங்குவதிலும், அணிவதிலும் நாட்டம் செல்லும். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உறவுப் பெண்கள் வழியில் சில உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்பாராத செலவுகளால் பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். பிறரிடம் கைமாத்து வாங்கும் சூழ்நிலை உருவாகும். கடுமையான, குதர்க்கமான பேச்சுவார்த்தைகளால் குடும்பத்தில் குழப்பம், சச்சரவுகள் உண்டாகலாம். பணிபுரிவோர் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். மேலதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். பக்தி நாட்டம் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகள் நேரும்.

### கன்னி



இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். திட்டமிட்ட சில வேலைகளை செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். வாக்குவாதங்களில் ஈடுபடலாம். பணவரவுகளைப் பெறலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். லாப ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். பெரிய மனிதர்களின் சகாயம் கிடைக்கும். தந்தை வழியில் நல்ல ஆலோசனைகள் பெறலாம். இழுபறியாக இருந்த சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். பெண்கள், வெளியூர் பயணங்கள், வாகன பராமரிப்பு, ஆடம்பரப் பொருள்கள் வாங்குதல், மாமன், மைத்துனர்கள் கேட்ட உதவிகளைச் செய்தல் போன்ற வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். அடிக்கடி வெறுப்பு, விரக்தி, நம்பிக்கை இழப்பினால் கோபம், பதற்றம் உண்டாகலாம். மன அமைதியைப் பாதிக்கும் சம்பவங்கள் அடிக்கடி நிகழலாம். சகோதரர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் ஏற்படுத்துவர். பொலிஸ் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். கடன் பிரச்சினைகளால் கவலை உண்டாகும். அலைச்சல், [illegible] உண்டு.

### துலாம்



இந்த வாரம் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். புதிய அனுபவங்களைப் பெறலாம். திட்டமிட்ட வேலைகளை சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். மலைபோல வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். பிள்ளைகள், மனைவியின் தேவையை நிறைவேற்ற கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். மறதியால் அவதிப்படலாம். சூரியன் சாதகமாக இருப்பதால், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். ஓய்வாக உட்காராமல் ஏதாவது வேலைகளை செய்ய நினைப்பீர்கள். மருத்துவ சிகிச்சைகள் பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். அவர்கள் உங்களுக்காகவும், அவர்களுக்காக நீங்களும் செலவுகள் செய்யலாம். பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். வெளிவட்டாரத் தொடர்புகளில் அனுகூலம் உண்டு. நிலம், பூமி விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். அவற்றால் மனக் குழப்பங்கள், கோபம், பதற்றம் அதிகரிக்கும். சகோதரர்கள் வழியில் தொல்லையுண்டு. பணவரவுகளைப் பெறலாம்.

### விருச்சிகம்



இந்த வாரம் செலவு, அலைச்சல்களைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ சிலருக்கு உதவி செய்யும் சூழ்நிலை உருவாகும். குடும்ப உறுப்பினர்கள் இடையே சிறு சச்சரவுகள் ஏற்படும். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். எதிர்பார்த்த ஒன்று நடக்காமல் போனாலும், எதிர்பாராத ஒன்று நடக்கும். வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். தொழில் ரீதியான தொந்தரவு விலகி, நிம்மதி பெறுவீர்கள். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்விற்கு வரும். நிலம், பூமி வாங்கி விற்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் கூடுதல் ஆதாயம் பெறலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். சுக்கிரன், சூரியன் சாதகமற்ற நிலையில் உள்ளதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையில் சிரமங்கள், இடர்பாடுகள், நெருக்கடிகளைச் சந்திக்கலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தை அனுசரித்துச் செல்ல வேண்டும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். வீண் செலவுகளால் கையிருப்பு கரையலாம். பணிபுரியும் கூடுதல் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். செவி குளிரும் செய்திகளைக் கேட்கலாம். எதிர்பாராத செலவுகள் நேரும். உடல் உபாதைகளுக்கு ஆள்படலாம்.

### தனுசு



இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். தேவையற்ற செலவுகள், சிரமங்களுக்கு ஆள்படலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். ஜென்மத்தில் ராகுவும், ஏழில் கேதுவும் இருப்பதால் உங்களின் உடல் நலனிலும், வாழ்க்கைத் துணை நலனிலும் கவனம் அவசியம். அதேநேரத்தில், பயணங்களால் அலைச்சல்கள் உண்டாகலாம். உங்களைப் பயன்டுத்தி மற்றவர்கள் காரியம் சாதித்துக் கொள்வர். எட்டாம் இடத்தில் சூரியன் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவேண்டும். சில வேலைகள் எதிர்பார்த்தபடி நடக்காமல் இழுத்தடிக்கலாம். மாமன், மைத்துனர்களாலும் உபகாரமில்லை. சுக்கிரன் சாதகமாக இருப்பதால், ஆசைப்பட்ட விலை உயர்ந்த பொருள்களை வாங்குவீர்கள். சகோதரிகள், உறவுப் பெண்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பொறுப்பான வேலைகளால் போராட்டமான நிலைமைக்கு ஆளாகலாம். பல வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். சந்தோஷமான அனுபவம் உண்டு.

### மகரம்



இந்த வாராமல் இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லலாம் அல்லது சில உறவினர்கள் உங்களின் வீட்டிற்கு வரலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர்கள் தயவில் உங்களின் சில தேவைகள் நிறைவேறலாம். பெண்கள் வகையில் சந்தோஷமான அனுபவம் உண்டு. மூன்றாம் இடத்தில் இருக்கும் குரு வக்கிர கதியில் இருப்பதால், முட்டுக்கட்டைகள் விலகி நினைத்த காரியங்களை நடத்திக் கொள்வீர்கள். மனதை போட்டுக் குடைந்து கொண்டிருந்த பிரச்சினைகள் விலகி நிம்மதி பெறும் சூழ்நிலை உருவாகும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். நண்பர்கள், உறவினர்கள், மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். சிலர் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். ஏழில் சூரியன் இருப்பதால், கணவன் மனைவி உறவில், கூட்டுத் தொழிலில் பிரச்சினைகள் வராமல் இருக்க எச்சரிக்கை, நிதானம் அவசியம். தந்தையுடன் மனஸ்தாபம் வரவும் வாய்ப்பு உண்டு. ஒன்பதில் சனியுடன், சொத்து விவகாரங்களில் கவனமாக செயற்பட வேண்டும். பொலிஸ் தொடர்பான வகையில் பிரச்சினைகள் ஏற்படலாம். பணிபுரிவோர் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் அவதிப்படலாம். செலவு, அலைச்சல் உண்டு.

### கும்பம்



இந்த வாரம் எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். தொழில் ரீதியானபயணங்கள் செல்லலாம். உடல் உபாதைகளால் உற்சாக குறைவை எதிர்கொள்ளலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். உற்சாகம், மகிழ்ச்சியை அதிகரிக்கும் செய்திகளைக் கேட்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சூரியன் ஆறாம் இடத்தில் சாதகமான நிலையில் உள்ளதால், அரசு காரியங்கள் தடையின்றி நடக்கும். அரசியல்வாதிகளை நம்பி ஒப்படைத்த வேலைகள் சுலபமாக முடியும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். மருத்துவச் சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சாதகமற்ற நிலைக்கு செல்வதால், பிள்ளைகள் நலனுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றவும் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். மாமன், மைத்துனர்கள், உறவுப் பெண்கள், நண்பர்கள் தொடர்பான தொல்லைகளே அன்றி ஆதாயம் இல்லை. வாகனங்கள் திடீரென செலவு உண்டாக்கலாம். தொழில் உத்தியோக ரீதியான நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். வீடு மாற்றம் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும். விவசாயிகள் விளைபொருட்கள் மூலம் லாபம் பெறுவது தள்ளிப் போகலாம். ஆபத்தான பொருள்களை கையாளும் போது கவனம் அவசியம். வழக்கு விவகாரங்களிலும் திருப்தி இருக்காது. மாற்று மதத்தினரால் ஆதாயம் உண்டு. குறுக்கு வழியில் லாபம் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும்.

### மீனம்



இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு போன்றவற்றை சந்திக்கலாம். சிலரிடம் வாக்குவாதங்களில் ஈடுபட்டு மன அமைதி பாதிக்கப்படலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையும். ஆலய வழிபாடுகள் மூலம் அமைதி பெறுவீர்கள். உங்களுக்கு வேண்டியவர்களுக்காக மற்றவர்களிடம் உதவி கேட்பீர்கள். ஐந்தாம் இடத்தில்சூரியன் இருப்பதால், குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு அடிக்கடி ஆட்படலாம். பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையிலும் அல்லல்களே அன்றி ஆதாயம் இல்லை. கணவன் மனைவி உறவில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் செயற்படுவதால் சச்சரவுகள் உருவாகலாம். கூட்டுத் தொழில் விடயங்களிலும் கவனம் அவசியம். மற்றவர்களுடன் சேர்ந்து எந்த காரியத்தையும் செய்ய வேண்டாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பொறுப்பாக செயற்பட்டாலும், குறை சொல்பவர்களே அதிகம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். மாமன், மைத்துனர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். கடிதங்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வரலாம். காரிய வெற்றி உண்டு. கணிசமான பணவரவுகளைப் பெறலாம். குடும்ப குதூகலம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IDM Affiliated University College

## Reopens the Newly Refurbished Jaffna Campus



Students after O/L, A/L can Join & Start their Higher Studies at our College in the fields of ICT, Management, Education, Engineering & Language, "Delivering Internationally Recognized Qualifications Locally".

**Special Intake Open for July/ August 2010 Register Now!**

IDM Affiliated University College – Jaffna
#214, Navalar Road, Jaffna
Tel 021 222 99 01

City Campus #3
North & East Regional Office
#16, 42nd Lane, Wellawatte, Colombo 06
Tel : +94 11 2 361 801 Fax : +94 11 2 361 807

www.idmcc3.lk | info@idmcc3.lk

## Annual IDM HND Get-Together 2010 City Campus #3 Network

A Grand Success

IDM City Campus # 3




*The Annual HND get-together was organized for the 3rd consecutive year by City Campus #3, marking the biggest student Event of the year in Sri Lanka. What's more, the event was organized at the Sri Lanka's premier ocean Entertainment venue, at the Jet liner Cruise (Sri Lanka's Only Cruise Ship). Indeed a day filled with fun & excitement, it was a memorable day for all of those who participated. The Management of IDM along with IDM HND students & many corporate guests participated. This day will be a golden day in the lives of all those students whom participated.*

10 Coveted Titles > 400+ Students > 84 Nominees > 39 Selected Candidates > Island wide Online Voting >10 Grand Winners

## Presenting IDM HND Colors Awards



Most Disciplined | Most Dedicated | Most Innovative | #1 Entertainer | Best Sportsman | Best Sportswoman | Best Leadership | Most Spoken | Technocrat 2010 | #1 All-rounder



Welcome Dance | Lighting of Oil lamp | CC3 B'Day Cake | Chief Guest Address | Yes, They really enjoyed the cruise | Presenting Memento

**Event was held at the Jet Liner Cruise On the 15th of June 2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எலுமிச்சம் பழத்தின் நன்மைகள்...

கடந்த நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை மனிதர்களுக்கு நோய் வராமலும், வந்தால் பேணிப் பாதுகாக்கவும் பயன்படும் ஓர் ஒப்புயர்வற்ற சக்திதான் எலுமிச்சம்பழம். இதன் மருத்துவக் குணமும், உணவின் உபயோகமும் உலகம் முழுதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விடயமாகும். காலப்போக்கில் விஞ்ஞானிகளால் ஆய்வு செய்யப்பட்டு பல உண்மைகள் விஞ்ஞானிகளை வியப்பிலாழ்த்தி வருகிறது. 1875 ஆம் ஆண்டில் டாக்டர் ப்ளென் தனது ஆய்வின் முடிவில் எலுமிச்சம் பழம் இரத்தத்தைத் தூய்மை செய்துள்ளதை உலகுக்கு உணர்த்தினார். சேர் ராபர்ட் மைக்கேரியன் என்ற மருத்துவ அறிஞர் காய்ச்சலைப் போக்கும், தடுமன் வராமல் தடுக்கும் என்று வெளியிட்டார். இரண்டாவது உலக யுத்தம் நடந்தபோது போர் வீரர்களுக்கு ஏற்பட்ட இரத்தத்தை உறைய வைக்க வேண்டிய மினாசத்தை எலுமிச்சம் பழத்தில் இருந்து எடுத்து காயங்களை எளிதில் ஆற்றினார்கள். இதன் பின் எலுமிச்சையின் சத்தினை அறுவை சிகிச்சையின் போது பயன்படுத்த ஆரம்பித்தார்கள். இரண்டாவது உலக யுத்தம் நடந்தபோது தெளரான் என்றும் இடத்தில் காகிதத் தயாரிப்புக்குப் பயன்படுத்தினார்கள். எவரெஸ்ட் சிகரத்தைக் கண்டுபிடித்த டென்சிங், ஹிலாரி ஆகிய இருவரும் தங்களுக்குக் களைப்பு வரும் போதும் போதுமான ஒட்சிசன் கிடைக்காத போதும் எலுமிச்சம் பழத்தை உபயோகித்தார்களாம். சிட்ரிக் அசிட்டின் மருத்துவ குணம் எல்லோருக்கும் தெரியும். முக்கியமாக கிருமிகளைக் கொல்லக் கூடியது. லெமன் பெக்டேட் என்ற எலுமிச்சை உப்பு ஆழ்துளை மூலம் எண்ணெய் எடுக்க பயன்படுத்தப்படுகிறது. இந்த உப்பு பூமிக்கு அடியில் உள்ள கால்ஷியத்துடன் வினை புரிந்து எண்ணெய் வெளிவர உதவி செய்கிறது. இரும்பு கடின மானது. மேலும் கடினமாக்குவதற்கு எலுமிச்சையிலிருந்து எடுக்கப்படும் சத்துப்பொருள் பயன்படுத்தப்படுகிறது. நமது அன்றாட வாழ்வில் எலுமிச்சம் பழத்தை எப்படி பயன்படுத்தலாம்? புளிப்புச்சுவையான எலுமிச்சம் பழச்சாறு நாம் சாப்பிட்ட சிறிது நேரத்தில் காரத்தன் மையாக மாறிவிடும். பல நல்மைகள் ஏற்பட உதவும்.


எலுமிச்சம் பழத்தில் பொட்டாசியம், பொஸ்பரஸ், சிட்ரிக் அசிட், விற்றமின் சி ஆகியவையும் எலுமிச்சம் பழத் தோலில் மாப் பொருள், புரதம், கொழுப்புப் பொருள் ஆகியவையும் இருக்கின்றன. பெரிய மனிதர்களைச் சந்திக்க மகிழ்விக்க ஒரு எலுமிச்சம் பழம் போதுமானது. சுபகாரியங்களுக்கும், கோயில் அர்ச்சனைக்கும் மந்திரவாதிகளுக்கும் எலுமிச்சை தேவை. உணவுப்பொருளில் சேரும்போது இதன் சத்துப் பொருள் உணவில் சேர்வதோடு நல்ல மணமும் ருசியும் கிடைக்கிறது. லைம் ஜூஸ் கிளிசரின் தைலத்தை தேய்த்துக் குளித்தால் கண்களுக்கு குளிர்ச்சி தரும். இதற்கு வெறும் எலுமிச்சம் பழச்சாறைக்கூட உபயோகிக்கலாம். கல்லீரலைப் பாதுகாப்பதில் இதற்கு ஈடான பழங்களே இல்லை. எலுமிச்சம் பழச்சாறு அரை பாகம், தக்காளிப் பழச்சாறு ஒரு பாகம். சுத்தமான தேன் கால் பாகம் கலந்து காலை மாலை உண்டு வந்தால் கல்லீரல் பாதுகாக்கப்பட்டு, ரத்த ஓட்டம் சீராகவும், பலம் பெறவும் உதவும். ★★


இலவசம்!
மேலதிக பால்




அதே விலையில்
சகல மில்குறோ 1 கிலோ பெட்டிகளிலும்
100 கிராம் மேலதிகம்
சகல மில்குறோ 400 கிராம் பக்கற்றுகளிலும்
50 கிராம் மேலதிகம்
கையிருப்பு உள்ள வரை மட்டுமே
சலுகைவிலை கிலோ பைக்கெட்டுகளில் இது உள்ளடக்கப்படவில்லை

உழைப்பின் உருவமான
MRF
மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி டயர்கள்
இப்பொழுது
யாழ்ப்பாணத்தில்!




சாதாரண டயரை விட
3 மடங்கு தூரம்!
பலமான கட்டமைப்பு
உயர் தரம் கொண்ட மூலப்பொருள்
சிறந்த பதிப்பு
உயர்ந்த பட்ச பாதுகாப்பு
முச்சக்கர வண்டிக்கு மற்றும் மோட்டார் சைக்கிளுக்கு சிறந்த வெளித்தோற்றம்
யாழ்ப்பாணம் மற்றும் நாடு பூராகவும் உள்ள அங்கீகாரம் பெற்ற அசல் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் முகவர்கள் மற்றும் MRF முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் டயர் விற்பனை முகவர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.
tradlanka



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
த.பெ. 1909,75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600

ரன்one பாதுகாப்பு
அடகுக்கு வெற்றி வாய்ப்பு
இலங்கையில் முதன்முறையாக யூனியன் வங்கியின் மூலம் உங்களுக்கு அறிமுகப்படுத்தும் பெறுமதியான வெற்றி வாய்ப்பு
ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் அடகு நகைகளை இலவசமாக மீட்டெடுக்க ஒரு சிறந்த வரம்...



ரன்one
ரன் வன்
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 100,000/- விலக்கழிப்பு
இரண்டாம் பரிசு:
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 75,000/- விலக்கழிப்பு
மூன்றாம் பரிசு:
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 50,000/- விலக்கழிப்பு
24 கரட் தங்கப் பவுணுக்கு ரூ. 29,000/-
22 கரட் தங்கப் பவுணுக்கு ரூ. 26,500/-
உயர் பாதுகாப்புடன் மிகக் குறைந்த வட்டி
உடனடி சேவைகளுக்காக நாடு பூராகவும் பரந்துள்ள யூனியன் வங்கியின் 19 கிளைகளும் உங்களுக்காக திறந்திருக்கும்.
www.n4artbs.com
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
யூனியன் வங்கி
தொலைபேசி: 011 2370870


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புகைப்படக்கலைஞர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி."

# பிரியங்கா

PRIYANKA Digital Colour Lab

## டிஜிற்றல் கலர் லாப்

பருத்தித்துறை வீதி. நெல்லியடி. 021 5 670 210

வடக்கு கிழக்கில் முதன் முறையாக
NORITSU QSS-37HD (High Difinition) 640 DPI, எனும் இயந்திரத்தை
அறிமுகப்படுத்தியவர்கள் பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்பினரே!



எம்மிடம் 3R-தொடக்கம் 12X36 வரையான அளவில்
புகைப்படங்களை பிரதியாக்கம் செய்துகொள்ளவும், பாஸ்போட்,
NIC, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அனைத்து அளவிலான
புகைப்படங்களையும் உடன் பெற்று கொள்ளவும்
உட்புற வெளிப்புற படப்பிடிப்பு, வீடியோ எடிற்றிங்,
போட்டோ டிசைனிங் & ஸ்கானிங்
Cool&Hot லெமனேற்றிங், அல்பம்மேக்கிங்,
டியூறோபிறேம் ஆகிய சேவைகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்...

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.



செலிங்கோ லைஃப்

## சௌபாக்யம்

பெண்களுக்கான ஆயுட் காப்புறுதி

**பெண்ணானவள் பல கதாபாத்திரங்களை வகிப்பதாலே அவளுக்கு மேலதிக பாதுகாப்பு அவசியமாகின்றது**

- இது முதலீட்டுடன் கூடிய ஆயுட் காப்புறுதி ஒப்பந்தமாகும். அத்துடன் பாரதூரமான நோய்களுக்கும் பாதுகாப்பை வழங்குகின்றது.
- ஐந்து வருட பூர்த்தியின் பின்னர் அடிப்படை காப்புறுதித் தொகையின் 10% வழங்கப்படும்.
- மார்புப் புற்றுநோய், சூலகப் புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் கண்டறியப்பட்டிருப்பின், பாரதூரமான நோய்களுக்கான நலன்கள் இருமடங்காக வழங்கப்படும்.
- கணக்கு மீதிக்கு சமனான கவர்ச்சிகரமான முதிர்ச்சிப் பெறுமதி.

செலிங்கோ லைஃப்
சௌபாக்யம்
பெண்களுக்கான ஆயுட் காப்புறுதி

மேலதிக விபரங்களுக்கு 011 2 461 461



PHOENIX O&M

செலிங்கோ லைஃப்

www.ceylincolife.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் நோயைத் தடுக்கும் கருப்பைத் திரவம் விஞ்ஞானிகள் தகவல்.!!

எயிட்ஸ் நோய் உலகின் பேரழிவு நோயாகக் கருதப்படுகிறது. இந்த நோயை உண்டாக்கும் வைரஸ் கிருமியை அழிக்க மருந்து கண்டுபிடிக்கும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக பல்வேறு ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பெண்களின் கருப்பை குழாயில் இருந்து வெளிவரும் திரவம் எயிட்ஸ் நோயைத் தடுக்கும் சக்தி உள்ளது என தென் ஆபிரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர்.

இது எயிட்ஸ் பேரழிவின் சோகத்தில் இருந்து மக்களைக் காக்கும் என உலக சுகாதார நிறுவனத்தின் ஐ.நா. எயிட்ஸ் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் அந்தோனி கூறும்போது, எயிட்ஸ் கிருமிகளை அழிக்கும் சக்தி வாய்ந்த இது போன்ற மருந்து இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

எனவே, இது எய்ட்ஸ் நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்பு உள்ளது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம் வாழும் நாட்டில் தமது மொழியையும் பண்பாட்டையும் கட்டிக் காத்து வரும் புலம் பெயர் தமிழர்கள்

கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதிவரை தமிழ் நாடு, கோவையில் நடந்த உலக. செம்மொழி மாநாட்டில் இடம்பெற்ற சிறப்புக் கலந்துரை அரங்கத்தில் "உலக நாடுகளில் தமிழும் தமிழரும்" என்ற தலைப்பில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றிய உரையின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது. 2

**மகா சமுத்திர நாடுகளில் (OCEANIA) தமிழர் பரம்பல்.**

i. அவுஸ்திரேலியா

18 மில்லியன் குடித்தொகையைக் கொண்ட அவுஸ்திரேலியாவில் ஏறக்குறைய 30,000 தமிழர் குடியேறியிருப்பதாகக் கூறப்படுகிறது. எல்லாப் பிரதேசங்களிலும் தமிழர் குடியேறினாலும் நியூசவுத் வேல்ஸ், விக்ரோறியாப் பகுதியில் பலர் குடியேறியுள் ளனர். பத்துக்கும் மேற்பட்ட இந்துக் கோயில்கள் தமிழர் பண்பாட்டு நிலைக்களன்களாக உள்ளன. தமிழ்மொழி HSC தேர்வுக்கு ஒரு பாடமாக்கப்பட்டுள் ளது. 5-16 வயது வரை தமிழர் குழந்தைகள் தாய் மொழி யைப் படிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

ii. நியூசிலாந்து

இங்கு 3000 தமிழர் வாழ்கின்றனர். கல்வியாளர் களே பெரிதும் இடம் பெயர்ந்துள்ளனர். தம்முடைய சுயமுயற்சியினால் ஒரு கோயிலைக்கட்டி பண்பாட்டைப் பரப்பவுள்ளனர்.

iii. பிஜி

இங்கு 1880களில் 110,000 தமிழர் தோட்டத்தொழிலாளராகக் கூட்டிச் சென்று குடியேற்றப் பட்டுள்ளனர். இப்போது தமிழ்பேசத் தெரிந்தவர்கள் 5000 பேர் எனலாம். ஏறக் குறைய 1000 பேருக்கே தமிழ் எழுதத் தெரியும். தற்போது 6000 பேரே தம்மைத் தமிழர் என இனங்காட்டுகின்றனர். சுதேசிகளுடன் பலர் இணைந்துள்ளனர். பலர் பெயரளவில் மட்டுமே தமிழராக உள்ளனர். தென்னிந்திய சன்மார்க்க சங்கம் என்னும் அமைப்பே தொடக்க காலத்தில் தமிழ்ப் பண்பாட்டைப் பேணி வந்தது. நீண்ட காலம் தமிழ் கற்பித்தலும் வழிபாட்டு நடைமுறைப்பேணலும் இருந்துள்ளது. இன்றும் முருக வழிபாடு பிரபல்யம் பெற்றுள்ளது. பல தமிழ்ப்பெயர்கள் இன்றும் வழக்கிலுள்ளன. பிள்ளை, முதலியார், படையாச்சி, சாமி, நாயுடு, கௌண்டர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

iv. ஐக்கிய அரபு இராச்சியம்

(NEW CALEDONIA, TAHITI)

இப்பிரதேசங்களில் 20 தமிழ்க் குடும்பங்கள் தொடக்க காலத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் தொழில் செய்வதற்காகச் சென்றுள்ளனர். தமது தமிழ் அடையாளத்தைப் பவளக்கொடி, ராயப்பு, வீரசாமி, சாமிநாதன், மரிய சூசை போன்ற பெயர்களிலே இன்று தக்க வைத்துக் கொண் டிருக்கிறார்களெனலாம்.

**வளைகுடா நாடுகளில் தமிழர் பரம்பல்**

i. பகிரன் (BAHARIN)

## தமது சந்ததியினரும் தமிழர்களாக வாழவேண்டுமென்ற ஆசையும் அவாவும் அவர்களுக்கு

இங்கு ஏறக்குறைய 7000 தமிழர் உள்ளனர். எல்லோருமே தொழில் புரிபவர்களாக உள்ளனர்.

ii. கட்டார் (QATAR)

இங்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த ஏறக்குறைய 4000 தமிழர் வாழ்கின்றனர். 2000 ஆண்டு QATAR தமிழ்ச் சங்கம் தொடக்கப் பெற்று தமிழ்ப்பண்பாடு தொடர்பான நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. திருக்குறள் பயிற்றப்படுகின்றது. சிறுவர்களிடையே தமிழ்மொழிப் பேச்சுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

iii. ஐக்கிய அரபு இராச்சியம்

UAE (UNITED ARAB EMIRATES) இங்கு ஏறக்குறைய 10,000 தமிழர் பரவி வாழ்கின் றனர். தமிழ் நாட்டிலிருந்தும் இலங்கையிலிருந் தும் தொழில் வல்லுநராக வந்து வாழ்கின்றனர். 3 இந்துக் கோயில்கள் ஓமானில் உள் ளன. டுபாயில் சிவ வழிபாடு செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. தைப்பொங்கலும், புத்தாண்டும் பெருவிழாவாக டுபாயில் கொண்டாடப்படுகின்றன. அண்மையில் டுபாயிலிருந்து 'தமிழன் குரல்' என்னும் தமிழ்ச் செய்தித்தாளும் வெளிவருகின்றது.

iv. சவுதிஅரேபியா (Saudi Arabia)

இங்கு அண்மையில் குடியேறிய சில தமிழர்கள் வாழ்கின்றனர்.

**ஐரோப்பிய நாடுகளில் தமிழர் பரம்பல்**

01. பிரித்தானியா

இங்கு ஏறக்குறைய 300,000 தமிழர் வாழ்கின்றனர். அவர்களில் ஏறக்குறைய 200,000 இலங்கைத் தமிழராவர். தொடக்கத்தில் தொழில், கல்வி வாய்ப்பைத் தேடியே தமிழர் சென்றனர். 1980களின் பின்னர் அரசியல் நிலைகாரணமாக புகலிடம் கோரிப் பலர் சென்றுள்ளனர்.

02. பிரான்ஸ்

இங்கு ஏறக்குறைய 60 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். இவர்கள் பொதுவாகப் புதுச்சேரியிலிந்தும் இலங்கையிலிருந்தும் அகதிகளாக வந்தவர்களாவர். தொடர்பாடல் நிலையிலும் அச்சு ஊடக நிலையிலும் தமிழர் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளனர். பல இந்துக் கோயில்களைக் கட்டி வழிபாட்டு மரபுகளையும் பண்பாட்டு நடைமுறைகளையும் பேணி வருகின்றனர்.

03. ஜேர்மனி

இங்கு ஏறக்குறைய 50 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். அதிகமானோர் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தவர்களாவர். தமிழ் மொழிப் பயிற்றலிலும் பண்பாட்டுப் பரம்பலிலும் முனைப்பாக உள்ளனர். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழ்மொழி பயிற்றப்படுகிறது. இலங்கைப் பாடநூல்கள் பயன்படுத்தப்படுகின்றன. சைவக்கோலத்துடன் தமிழ்ச்சிறார்கள் செல்வது குறிப்பிடத்தக்கது.

04. இத்தாலி

இங்கு ஏறக்குறைய 25 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். அனேகமானோர் அகதிகளாகவே வந்துள்ளனர்.

06. சுவிற்சர்லாந்து

இங்கு ஏறக்குறைய 40 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். பெரும்பாலானோர் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தவர்கள். சுதேசிகளுடன் நன்கு இயைபாக்கம் பெற்றுள்ளனர். சமய நடைமுறைகளையும் பண்பாட்டு நடைமுறைகளையும் நன்கு பேணி வருகின்றனர். கோயில்கள், கலைவிழாக்கள், சர்வதேசக் கருத்தரங்குகள் எனப் பல நிகழ்வுகள் தமிழர்கள் ஒன்று கூட வாய்ப்பளித்துள்ளன. தமிழ்மொழிக் கல்வி, ஆடல், பாடல் பயிற்றும் கல்வி எனப் பல கல்வி முயற்சிகள் நடைபெறுகின்றன.

06. நெதர்லாந்து

இங்கு ஏறக்குறைய 20 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். பெரும்பாலானோர் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தவர்களாவர்.

07. நோர்வே

இங்கு ஏறக்குறைய 10 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். பெரும்பான்மையோர் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தவர்கள். பேர்கன் நகரில் மட்டும் ஏறைக்குறைய 400 குடும்பத்தினர் வாழ்கின்றனர். இப்பகுதி தமிழரது ஒன்றுகூடல் நிகழ்வுகள் நடைபெறும் இடமாக உள்ளது. தமிழர் பிரதிநிதி ஒருவர் நகரசபையிலும் அங்கம் வகிக்கின்றார்.

08. சுவீடன்

இங்கு ஏறக்குறைய 2 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர்.

09. டென்மார்க்

இங்கு ஏறக்குறைய 7 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். பெரும்பான்மையானோர் அகதிகளாவர். விநாயகர், அபிராமி போன்ற தெய்வங்களுக்குக் கோயில் கட்டியுள்ளனர். சுதேசிகளுடன் தமிழர் டென்மார்க் சூழலுக்கேற்ப இயைபாக்கம் பெற்றுள்ளனர்.

**அமெரிக்காவிலும் கரீபியனிலும் தமிழர் பரம்பல்**

01. அமெரிக்கா

இங்கு இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த 300,000 தமிழர் வாழ்கின்றனர்.

02. கனடா

இங்கு பெருந்தொகையான இலங்கைத் தமிழர் வாழ்கின்றனர். 90 வீதமானோர் ஆக ஏறக்குறைய 300,000 தமிழர் உளர். தமிழ் தொடக்க நிலைமுதல் பல்கலைக்கழகப் புகுமுகம்வரை கற்பிக்கப்படுகிறது. ஊடகங்களாலும் நூற்பதிப்புகளாலும் தமிழ் மொழி வளர்க்கப்படுகிறது. பல அமைப்புகள் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் வளர்ப்பதில் மிகுந்த கவனத்துடன் இருக்கின்றன. பல இந்துக் கோயில்களும் தமிழர் வழிபாட்டு நடைமுறையைப் பேணிவருகின்றன.

**03. Guadelope, Maritinque**

இங்கு 15 ஆயிரம் தமிழர் வாழ்கின்றனர். 1853 -1883 க்கு இடைப்பட்ட காலத்தில் புதுச்சேரியிலிருந்தும் காரைக்காலிலிருந்தும் தமிழர் சென்றுள்ளனர். ஆனால் இப்போது தமிழ்மொழி பேசுபவர்கள் குறைவாகவே உள்ளனர். 60 - 70 இற்குமிடைப்பட்ட 17 பேர் பேசக்கூடியவராயுள்ளனர்.

04. கயானா (Guyana)

தென் அமெரிக்காவில் 1838 இருந்து தமிழர் குடியேற்றம் நடைபெற்றுள்ளது. 1860 இல் சென்னையிலிருந்து 2500 தமிழர் இங்கு வந்துள்ளனர். 60 நகரங்களில் தமிழர் வாழ்கின்றனர்.

**05. Trinidad**

1840 இருந்தே தமிழர் குடியேற்றம் நடைபெற்றுள்ளது. தோட்டப் பயிர்ச் செய்கைத் தொழிலுக்காகப் பலர் வந்துள்ளனர். கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. அதன் மூலம் பண்பாட்டுப் பேணல் நடைபெறுகிறது. மொழி பயிற்றல் நிலைக்குப் பெரிதும் வாய்ப்பில்லை.

**பன்னாட்டுத் தமிழர்**

உலகின் பலபாகங்களிலும் தமிழர் சென்று குடியேறியுள்ளமையால் அவர்களைச் சிறப்பாகப் பாகுபடுத்திப் பார்க்க வேண்டிய தேவையும் இன்று ஏற்பட்டுள்ளது. மேலை நாடுகளில் வாழும்தமிழர் பொதுநிலையில் மேலை நாட்டுத் தமிழர் எனப் பெயர் பெறலாம். இவ்வாறே கீழைநாடுகளிலே வாழும் தமிழரும் கீழை நாட்டுத் தமிழர் எனப் பொதுநிலையான பெயர் பெறலாம். இப்பாகுபாட்டை மேலும் விரிவுபடுத்தினால் அந்தந்த நாட்டின் பெயரோடு 'தமிழர்' என்ற அடைவுபெற்று அழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாகச் சிங்கப்பூர்த்தமிழர், மலேசியத் தமிழர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்று முன்னரும் வகைப்பாடுகள் தமிழர் பரம்பல் நிலையால் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் முன்னர் குறிப்பிட்ட நாடுகளுடன் இணைந்து அழைக்கும் நிலை ஏற்படலாம். பின்வருமாறு அவற்றைக் குறிப்பிடலாம்.

01. அந்தமான் நிக்கோபார் தமிழர்.
02. இந்தோனேசியத் தமிழர்.
03. மியன்மார் தமிழர்.
04. வியட்நாம் தமிழர்.
05. கம்போடியத் தமிழர்.
06. சீனத் தமிழர்.
07. தாய்லாந்துத்தமிழர்.
08. ஜப்பான் தமிழர்.
09. மொறிசியஸ் தமிழர்.
10. றியூனியன் தமிழர்.
11. சிசெல்ஸ் தமிழர்.
12. தென்னாபிரிக்கத் தமிழர்.
13. அவுஸ்திரேலியத் தமிழர்.
14. சிங்கப்பூர்த் தமிழர்.
15. மலேசியத் தமிழர்.
16. நியூசிலாந்துத் தமிழர்.
17. பிஜித் தமிழர்.
18. NEW Caledonia தமிழர்.
19. பாகரன் தமிழர்.
20. Qatar தமிழர்.
21. UAE தமிழர்.
22. சவூதி அரேபியத் தமிழர்.
23. பிரித்தானியத் தமிழர்.
24. பிரான்ஸ் தமிழர்.
25. ஜேர்மன் தமிழர்.
26. இத்தாலித் தமிழர்.
27. சுவிஸ் தமிழர்.
28. நெதர்லாந்துத் தமிழர்.
29. நோர்வேத் தமிழர்.
30. சுவீடன் தமிழர்.
31. டென்மார்க் தமிழர்.
32. கனடாத் தமிழர்.
33. கயானாத் தமிழர்.
34. அமெரிக்கத் தமிழர்.
35. Guadelop தமிழர்.
36. Trinidad தமிழர்.

இவ்வாறு ஏறக்குறைய 40 நாடுகளின் பெயரை இணைத்துக் கூறவேண்டியுள் ளது. தமிழரைப் பொறுத்தவரை யில் பெற்றதாயைவிட்டுச் செவிலியின் வளர்ப்பில் வளரும் குழந்தை போலவே ஏனைய நாடுகளில் வாழ்வதால் அந்தப் பெயரைச் சூட்டிக் கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது.

*(வளரும்)*



*கலாநிதி* மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பயிற்சி கருத்தரங்கு

இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் தொழிற்பயிற்சி தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரைநகர் உதவி அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இந்தக் கருத்தரங்கு 16-29 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் யுவதிகள் அனைவரையும் சமுகம் தருமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார். (ஓ-323)


வசீகரத் தோற்றத்திற்கு!

சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஒளடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம்

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.






## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் தினமும் காலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1 Broiler கோழிக்குஞ்சுகள் (விசேட விலையில்) 02.08.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்.
நல்லூர். தொ.பே: 021 222 6944

வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யவும்.
தொ.பே: 021 321 6290

குறிப்பு: தீவனம், மருந்து என்பனவும் பெற்றுக்கொள்ளலாம். எம்மிடம் குஞ்சு வாங்குபவரிடம் திருப்பி கோழி கொள்வனவு செய்யப்படும். (கிளிநொச்சி மாவட்டத்தில் கோழிக்குஞ்சுத் தீவனம் விநியோகிக்கப்படும்).

## வீடு விற்பனைக்கு

சித்தன்கேணிச் சந்திக்கு அருகில் காரைநகர் வீதியில் பெற்றோல் செற்றுக்கு சமீபமாக அண்ணளவாக 7 ½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0041613235594
Email itemforsale@ hotmail.co.uk



## பிறந்த தின வாழ்த்தும் பாராட்டு வாழ்த்துக்களும்



இலங்கை வங்கியில் 30 வருடங்கள் நற்சேவையாற்றி இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும்

**வீரசிங்கம் செல்வநாதன்**

அவர்கள் தமது ஓய்வுக் காலத்தில் சகல செளபாக்கியங்களும் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

BOC

முகாமையாளரும், சக ஊழியர்களும்,
இலங்கை வங்கி 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்.





# Peninsula Super Mall

### Super Market Services

சகல பொருள்களையும் ஒரு கூரையின் கீழ் ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- Baby Needs
- Pharmacies item
- Snack car
- Fruits
- Soft Drinks
- Gift Items
- Sweets
- School Items
- Grocery Items

Parking Facility Available

PSM

All Kind of Consumable items under one roof

இல.127, கண்டி வீதி, கச்சேரிக்கு அருகில், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2221848, psmjaffna@gmail.com.


FORUT SRI LANKA

# TENDER NOTICE

## Invitation to Bid for the supply of Fishing Gear

1. FORUT is a Norwegian / Swedish funded Development Agency based on the principles of IOGT International on Solidarity, Peace, Temperance and Democracy.

2 As part of its response to the present resettlement programme in the Jaffna District, FORUT intends to support 500 fishing families in the administrative divisions of Chankanai, Sandilipay and Maruthankerny and invites sealed bids from interested and qualified suppliers for the supply of fishing gear.

3. Bidders may obtain detailed bidding documents from FORUT offices situated in **Jaffna, Vavuniya & Colombo** at the addresses below;
FORUT Jaffna, 139, Temple Road, **Jaffna**
FORUT Vavuniya, Sinthamany Pillaiyar Kovilady, Katkuli, **Vavuniya**
FORUT Colombo, 98/4, Havelock Road, **Colombo 05**

4. Bidding documents may be purchased upon the payment of a non refundable cash deposit of Rupees One Thousand (Rs. 1000/- only), directly at any of the FORUT offices listed above, only on weekdays during office hours from 10:00 am to 03:00 pm from 26th July to 02nd August 2010.

5. The bidder should submit certified documentary evidence by proper authorities, on necessary registrations financial stability and past performance along with their company profile.

6. Sealed bids should **only** be placed in the tender box on 09th August, 2010 on or before 1:30 pm at the **FORUT** office located at **139, Temple Road, Jaffna.**

7. Late bids and bids not submitted in the specified formats of the bidding documents supplied by FORUT and other documents as stated in paragraph 5 above will be rejected.

8. Bids will be opened in the presence of the officials/ bidders' representatives present at the official opening of bids on **Monday 09th August, 2010** at **02:00 pm at the FORUT office, 139, Temple Road, Jaffna.**

***Director – Crisis Response & Recovery***

***FORUT Sri Lanka***

***Meeting the Needs of today with the Spirit of Tomorrow***




# பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன

aat SRI LANKA
ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS OF SRI LANKA

க.பொ.த சா/த பரீட்சையில் 6 பாடங்கள் சித்தி அல்லது க.பொ.த உ/த பயிலும் மாணவர்களுக்காக

அழையுங்கள்: 011-2559669

இல. 540, திம்பிரிகஸ்யாய வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு - 05

2010 டிசெம்பர் பரீட்சை பதிவுகளுக்கான இறுதி நாள் ஆகஸ்ட் 27ஆம் திகதி

www.aatsl.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1980 துகளின் ஆரம்பத்தில் இலங்கைத் தமிழ்ப் புனைகதைத் துறையில் தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்ட ஏ.எஸ்.உபைத்துல்லா, கிழக்கு மாகாணம் - மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவரது சிறுகதைகள் இந்தியச் சஞ்சிகைகளான தீபம், கலைமகள் போன்றவை உட்பட ஈழத்தின் முன்னணித் தமிழ்ப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.

இவரது சிறுகதைத் தொகுப்பு 'ஜல சமாதி' 2008 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகக் கல்வித்துறையில் ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி வருபவர்.

இவரது 'ஜல சமாதி' சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ''எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும்'' சிறுகதை இங்கு பிரசுரமாகின்றது.



**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 159**

# எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்



**சிறுகதை**

வங்காள விரிகுடாக் கடல் மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தது. பெரிய திரைகள் இல்லை. ஒரு காயலைப்போல் காட்சியளித்தது. கடலும் வானமும் அந்தத்தில் கட்டித்தழுவி நிற்பதைப் பார்க்க அவனுக்கு நெஞ்சு கனத்தது.

கடலின் அமைதியும், காற்றின் குளிர்ச்சியும் அதில் கலந்து வந்த மீன் வாடையை நுகர்ந்த போதெல்லாம் மனதின் அடித் தளத்தில் எத்தனையோ எதிர்பார்ப்புகள்! ஏமாற்றங்கள்! அவலங்கள்!

கடலை நம்பி ஜீவனோபாயம் நடத்தி வந்த முக்தாருக்கு கடலில் மீன்பாடு குறைந்ததினால் அவனது வாழ்க்கையின் பற்றுக்கோடு அறுந்துவிட்டது. இப்போது அவனுக்கு வாழ்வதா? சாவதா? என்ற போராட்டம்.

தமது பாரம்பரியச் சொத்தாகக் கடலை நம்பி இருந்தவர்களுக்குக் கடல் பாதுகாப்பு வலயமாக்கப்பட்ட பின்னர் அவர்களது வாழ்க்கை வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்குண்டது! ஒரு வேளைச் சோற்றுக்கே 'ததிங்கிணத்தோம்'.

கடற்கரை ஓரத்தில் வாடைக் காற்றினால் எறியப்பட்ட சில்லுக் காய்கள், கூந்தாளங் காய்கள், சிப்பிகள், இராவணன் மீசைகள் என்பன கரை முழுவதுமாக விரவிக்கிடந்தன.

சூரியக் கதிர்கள் பட்டுத் தெறிக்காத இளங்காலை வேளையில் பாய்போலச் சுருண்டு சுருண்டு வரும் கடலலை அவனது புறங்காலைத் தழுவிக் கொண்டிருக்கையில் அதனை அலட்சியம் செய்தவனாகக் கடற்கரையில் முக்தார் நடந்து கொண்டிருந்தான்.

அவனது மனதில் சிந்தனைகள் வலை பின்னின. இந்த வாடக்காத்துக் காலத்தில் கிழக்கு - கரையில பார, சூரை, கொடுவாய் புடிக்கும். வெண்டையன் கல்லில - கருங்கன்னிப் பாரையும், சோமுந்திரியப் பாரில - துள்வண்டும். ஆத்துவாப்பாரில - முள்ளுச்சூறாவும், பெரியங்க மலையில - அறுக்குளாவும். கெங்கை ஆத்துக்குள்ள - கொடுவாவும் புடிக்கும்.

இப்ப குடாவ உட்டு வெளியால போய் மீன் புடிக்கலாகாது. இந்தக் குடாவுக்குள்ள எத்தின நாளைக்குத்தான் மீன் புடிப்பது? குடாவுக்கு வெளியால மீன் புடிக்கப்போன ராத்தாவுடைய புருஷன் இன்னமும் ஊடு திரும்பல்ல....?

எத்தின நாளைக்குத்தான் இப்புடிக் கெடந்து சாகிறது....? வேடங்கந்து ஆத்திலேயும், கெங்கைக் கரையிலேயும் மீன் புடிச்சுக் கஷ்டப்பட்டது போதும். வெளியால போய் மீன் புடிக்காட்டி சீவியமே நடத்த முடியாது.

எங்கட வவுறு பத்தி எரியுது. மத்தவங்களுக்கு எங்க தெரியப் போவுது...? நாளைக்கு ஒரு கை பாக்கிறேன். சே!.... சே!..... என்ன வாழ்வு இது!.

வெள்ளாப்பில எழும்பி இராணுவத்திடம் பாஸ் எடுத்துக்கிட்டு இரைக்கு ஊதி ஓடையில இறாலை வீசிக்கொண்டு எப்படியும் கடலுக்குச் சென்றே ஆகுவேன். எதுக்கும் விடியட்டும்!

ஒரு வருஷத்துக்கு முன்னால நான் ஒரு தோணியில் நாலு பேருடன் வெளிக்கடலுக்கு மீன் புடிக்கப் போனேன். அது போல எனது மச்சானும் ரெண்டு பேருடன் சேர்த்துக்கிட்டு எங்களோட கடலுக்கு வந்தார்.

அப்போது கடலில திடீரென ராத்திரி நேரத்தில் வெடிச்சத்தம் கேட்டது. நாங்க எங்கட நங்கூரத்தை இழுத்துக்கிட்டுக் கௌம்பினோம். ஆர் சுட்டதோ தெரியாது. ஆனா இன்னும் மச்சான் கரைதிரும்பல்ல...?

மச்சான் இல்லாதினால ராத்தாவுடைய குடும்பத்தைக் காப்பாத்த வேண்டிய பொறுப்பு இப்போ என்னுடையதாகிட்டுது. என்னால என்ன செய்ய முடியும். நான் ஒருத்தன்...?

காலங்காலமாகக் கடலுக்குப்போய் ஒழைச்சி மீனை மொதலாளிக்குக் கடனுக்குக் கொடுத்திட்டு ஊட்டுக்கு வாறதுதான் இப்ப எண்ட வேலை. சொந்தத்தில குடியிருக்கக் கூட ஒரு துண்டுப் பூமி இல்லை. கரைச்சியில் ஒரு துண்டு நிலங்கிடைக்காட்டி எண்ட கெதி அதோ கெதிதான்.

குடியிருக்க ஒழுங்கான ஒரு ஊடு இல்ல. புள்ளைகளும் வளர்ந்துக்கிட்டு வருதுகள். இந்தக் குஞ்சுகளுக்கு ஒலகம் தெரியாது. மாடாக உழைச்சி ஓடாத் தேஞ்சதுதான் மிச்சம். நமக்கென்று ஒரு தோணியோ, வலையோ சொந்தமல்ல. எல்லாம் ஊரவண்ட.

மாயவலை கடலுக்கு வந்த பொறகு ஒரு மீன் குஞ்சுகூட புடிக்குதில்ல.

*(20 ஆம் பக்கம் பார்க்க....)*

# முதியோளே வாழுகின்றாள் என் நெஞ்சில் மூன்று போதும்

**இலக்கியக் காட்சி 50**

'சுப்புரத்தினம் கவி இயற்ற வல்லவன்' எனப் பாரதியாரால் பாராட்டப்பட்டவர் கவிஞர் பாரதி தாசன். பாரதியாரால் கவிஞர் எனப் பெயரிடப்பட்ட பெருமைக்குரியவர்.

பாரதிதாசன் கவிதைகளில் ஒரு நல்ல பகுதி 'குடும்ப விளக்கு' என்ற பகுதியெனப் பலராலும் கணிப்பிடப்படுகிறது. குடும்ப வாழ்வை அழகுறக் கூறுவதே பாடற் கருத்து. விருந்தோம்பல், திருமணம், மக்கட்பேறு, முதியோர் காதல் என்பன இதன் பிரிவுகள்.

பெரும்பாலான தமிழ் அகவிலக்கியங்களில் திருமணத்துக்கு முன் ஏற்படும் காதல் உணர்வுகள் பற்றியே பெரிதும் விவரிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் நடைமுறைக்கு மாறாகப் பாரதிதாசன் தன் கவிதைகளில் 'குடும்ப விளக்கு' பகுதியில் முதியோர் காதல் குறித்துக் கூறியுள்ள கருத்துக்கள் இலக்கியச் சுவை பயப்பன.

விருந்தோம்பல், மணம், மக்கள் பற்றியெல்லாம் விவரிக்கும் இலக்கியங்கள் தமிழில் எண்ணில. ஆனால் முதியோர் தமிழ் இலக்கியப் புதுமைக் கற்பனைகள் இனிமையும் புதுமையுமுடையன. பாரதிதாசன் மனவியலுணர்ந்து பாடுகிறார். இக் கவித்திறன் இவர் காவியங்கள் எங்கும் இலங்கி நிற்கின்றன. இளையோர் இருவருக்குரிய காதல், பெரிதும் மணத்திற்கு முன் காதல் பற்றியே தமிழ் அகவிலக்கியமெல்லாம் ஆராய்வன. ஆனால் முதியோர் இருவர் - காதல் மணத்தின் - பயன் விடுபட்டதாம். தமிழில் விடுபட்ட இடத்தை நிரப்பும் பெருந்திறன் இங்கு பிறங்குகின்றது.

வானப் பிரததமே இங்கு முதியோர் காதலாகலாம்! இலக்கியம் படித்து இன்ப அறிவுப் பொழுதுபோக்குகின்றார் முதியோர். கிழவர் 'மயிர் வெண்பட்டே, உணவெலாம் பாலின் கஞ்சி, உலவுதல் சிறிதே ஆகும்'. நரைக்கு வெண்பட்டுவமை நன்று.

'அன்புடல் அறத்தால் தேய்ந்த ஆயிரம் பிறைமூதாட்டி, மன்னுசீர் அன்னார் மெய்யோ வானவில் போற்கூனிற்றே'

இது கிழவியின் நிலை. 100 சரத்காலம் வாழ்வது பற்றி வேதங்கள் அடிக்கடி வேண்டுகின்றன. இங்கு கிழவி 80 வயதுக்குமேல் (1000 பிறை - மாதம்) இருந்துள்ளாள். இங்கு இவள் தேய்வு, அறஞ்செய்ததால். உவமை வானவில், அதுவும் மழைக்கொடையின் அடையாளந்தானே. இவள் கூன் அறத்தையும், வானவில்லின் கூன் மழையையும் குறிக்கின்றன.

மக்கள் சுற்றம் யாவர்க்கும் முடிந்தது செய்தோம். *'இந்தநாள் வரைக்கும் வாய்மை இம்மியும் மறந்ததில்லை'* என மகிழ்கின்றனர். நன்றி மறவாமல் பிறர்க்குத் தீமையை மறந்து நாட்டின் நலத்திற்காக வாழ்ந்தனராம்.

*'கதையாகிக் கனவாய்ப் போகும்*
*நிகழ்ந்தவை எனினும் அந்த*
*மூதியோளே வாழுகின்றாள்*
*என்நெஞ்சில் மூன்று போதும்'*

நரை வந்தபோதும் நங்கையிடம் அன்பு மறவாதே என்கிறது அகவிலக்கியம். இங்கு முதியோர் உள்ளம் முப்போதும் மறவாத இறைவனாக இருக்கிறாள் முதியோள் கிழவி. இங்கு தெய்வந் தொழா அன் தலைவித் தொழுவானாகிறான் தலைவன்.

*'மதியல்ல முகம் அவட்கு வறள்நிலம் குழிகள் கண்கள், எது எனக்கின்பம் நல்கும் இருக்கின்றாள் என்பதொன்றே'*

*'பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே'*

என்கிறாள் பண்டை இலக்கியத் தலைவி. இங்குக் காட்சியின்பம் 'காதலைக்' காக்கிறது. மொய்த்து வளர் பேரழகு இங்கு முகிழ்த்துக் காட்டுகிறது. அம்மூதாட்டி உயிர் வாழ்வாள்.

ஆதலாற்றான் உவப்பூட்டும் எனக்கிவ் வையம் என்கிறார் கிழவர். அன்பு அருளில் அழைத்தேகல்போல் இங்கு [illegible] கிறது.

*[illegible] அன்பால் தூக்கி, புறம்போன காலும் ஓயும், மறவனைச் சுமக்கும் என்றன் மனம்மட்டும் ஓய்த லில்லை'*

என்றாள் கிழவி. அவள் மணாளனா, மன - ஆளனா என இப்போது ஆராய வேண்டும். மனதிற்குரமூட்டுகிறான் காதலன். மனம், கை, கால், கண் முதலாம் உறுப்புகளில், அன்பு தங்குவது மனதில்; அது ஓயவில்லை எனில் அவ்வுறுதியைத் தருவது 'அன்பு' என்பது ஆகின்றது.

பேரன் நீட்டிய மலைவாழைப்பழத்தைத் தாத்தாவுக்குக் கொடு என்கிறாளாம். இது வாழ்ந்த பழங்களின் காதல். மற்றவர்களையும் மறைத்துத் தின்பண்டங்களைப் பரிமாறிக் கொள்கிறார் முதியோர். தங்கள் இளமைக் காதல் ஆடல்களை, நேரங்களை அடிக்கடி நினைத்தும் பேசியும் மகிழ்கின்றனர். மனவியலறிந்து எழுதப்பட்டன இவ்விடமெல்லாம். இவ்விடத்தேதான் மனைவியே ' குடும்ப விளக்கு' எனக் கவிஞர் கருத்து வெளிப்படுகிறது. களிற்றியானைநிறை, மணிமிடைப்பவளம் என்ற பெயர்கள் பாடலுள் பயிலும் தொடர்களாலேயே கொடுக்கப்பட்டன.

*'அவள் என் குடும்பவிளக்கு' வேறெது*
*கூறுவேன்! அன்பின் வழிய துயிர்நிலை -*
*அதுவே நிலைத்த இன்பமாம்'.*

கடைசிக் காலத்தில் கடவுளை நினைத்து முத்திக்கு முயலலே முடித்த இன்பம் என்பர் முன்னோர் பலர். அக்கருத்து இங்கே அசைக்கப்படுகிறது. இந்தக் கிழத்திலும் மருமகளுக்கு உடனிருப்பதற்குமுன் நாணுகின்றனர் மாமி, மாமன். இக்கிழவர் ஒரு பிசிராந்தையாக நூறாண்டு வாழ்ந்ததன் நுணுக்கம் இயம்புகிறார்.

''தந்தை தாயார் நல்
லொழுக்க முடையவர்; தான்
ஒரு கற்றவர்; கருத்திலும்
தன்னிடம் தீயொழுக்கம் இல்லை'

இம்மூன்றும் முதியோரை இளைமையாக்கின.


இரவில் - *''பெரியாளும் பெரியான் அண்டைத் தலையணைமீது சாய்ந்தாள். அருகருகிருவர் மிக்க அன்புண்டு செயலே இல்லை''*

இது நகைச்சுவையா, கவிக்குறும்பா நினைக்கவேண்டும்.

கிழவர்களைக் கவி கேலிசெய்யும் இடம் இது!


ஒளிக்கப்பால் இவர்கள் வாழ்வாராம், இருட்கப்பால் விளங்குகின்றாராம்! எப்படி எண்ணித்தான் துணியுங்களேன்! ஒளி, இருள், பகல், இரவாகிய காலங்கடந்த காதலா, ஆயுளா அறிக!.

**- நன்றி: பாரதிதாசன் கவித்திறன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 125




அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. கணவன் மீதான விசுவாசம்/ கணவனைத் தெய்வமாகக் காண்பவளின் பண்பு.
5. திறப்பு.
7. மேடு.
8. சமிக்ஞை.
10. எரிச்சல்/ கோபம்.
12. கூற்றுவன்.
13. ஈரெட்டு.
14. தெரிய/புரிய/ உணர.
15. செல்வம்/ திரவியம்/ பொக்கிஷம்.
17. சுற்றம்/ உற்ற தொடர்பு.
18. செய்திக்கு கவர்ச்சி ஏற்படுத்துவது.
20. அவதிப்படு/ அந்தரப்படு.
21. பதில்.
22. முன் அல்ல.
23. சிறைப்பறவை வேண்டுவது.
24. பலமான தன்மை.

### மேலிருந்து கீழ்

1. பத்துப்பாடல் கொண்டது.
2. ஏசு.
3. கற்று வந்த தெளிவு/புத்தி.
4. திக்கு.
6. ஒஸ்ரியாவின் தலைநகரம்.
9. சகலதையும் இழந்த நிலைமை.
11. பழைய அல்ல.
14. வசூலி.
16. திரிகடுகத்தில் ஒன்று.
17. ஒத்தாசை.
18. மறி/ தடுப்பது.
19. அற்பம்/ ஈனம்/ சிறுமை.
21. ஒருபொருளின் பெறுமதி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 121 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)துந்துபி. (4)கபோதி. (7)வாணவேடிக்கை. (8)மதுரம். (10)தகு. (11)திறம். (12)நம் (14)பாதி. (15)பரு. (16)உபகாரி. (18)குணம். (19)மணம். (20)விரும்பு. (21)தும்புத்தடி.

**மேலிருந்து கீழ்**

(1)துர்மதி. (2)துவாரம்.(3)பிணம். (4)கடிதம். (5)போக்கு. (6)திகை. (9)துறப்பணம். (12)நதி. (13)கரும்பு. (14)பாரி. (15)பணம். (16)உமது. (17) காம்பு. (18)குருடி. (20)வித.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 121 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **அ.மேரி லூசியா (தேவா),** 11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவு.

2 ஆம் பரிசு — **க.தையல்நாயகி,** இரும்பு மதவடி, வதிரி, கரவெட்டி.

3 ஆம் பரிசு — **தே.கோபிகன்,** தரம் - 7 'A', யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

4 ஆம் பரிசு — **திருமதி க.இராஜசுந்தரம்,** இல.34,குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில்.

5 ஆம் பரிசு — **செல்வி தனுஷா செல்வநாயகம்,** நல்லாயன் வீதி, சில்லாலை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **போ.ஆன்மேரி பெனிற்றா,** சென்.யோசப் லேன், சில்லாலை, பண்டத்தரிப்பு.

(2) **கோ.திருநிறைசெல்வி,** இணுவில் மேற்கு, இணுவில்.

(3) **வி.பிரசன்னா,** திகிரி லேன், கோள்வை வளவு, தும்பளை, பருத்தித்துறை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 125**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 04.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.123இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 08.08.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

கருவுலேயே எல்லாத்தையும் அழிச்சிடுறாங்க. நமக்கிட் டேயும் கொஞ்சம் வசதி வாய்ப்பிருந்தா போட், வலை வாங்கலாம். இப்ப ஒரு நேரச் சோத்துக்கே கஷ்டமாக இருக்குது.

வன்செயல் வந்ததுக்குப் பொறவு தூரந் தொலைக்குப் போய் ஒரு தொழிலும் செய்யலாது. சனியன் புடிச்ச இந்தக் கடல் தொழிலை உட்டுப் போட்டுச் சின்னதொரு கடையைப் போடுவோம் எண்டாலும் அதற்கும் வசதி இல்லை.

மீன் புடிக்கின்றவன்ட புள்ளை எல்லாம் மீன் புடிக்கிற நிலைக்கு ஆளாயிட்டாங்க. இந்தக் கிராமத்தில் உருப்படியாகக் கல்வி நிலம கூட இல்ல. எல்லாம் நமக்கு எட்டாத பொருளாத்தான் இருக்குது.

எப்பதான் நமக்கு நல்ல காலம் பொறக்கப் போவுதோ தெரியாது? மத்தவங்களோட ஒத்துப் பார்க்கக்குள்ள நாங்க இன்னும் முன்னேறல்ல. எங்கட வாழ்க்கை இன்னும் பொட்டலாத்தான் இருக்குது!

மழையில நனஞ்சி, வெயிலில காஞ்சி, பனியிலேயும் காத்திலேயேயும் கொடுவிப் போனது தான் எங்களுக்கு மிச்சம். ஆனால் வாழ்க்கையில ஒழுங்காக ஒண்டையும் சாதிச்சது கெடையாது.

ஆத்தில வல வீசி, கடலில் தூண்டல் போட்டு மீன் புடிச்சுக் களைச்சுப் போச்சுது. வாப்பா செஞ்ச தொழிலில நாங்களும் பரம்பரையாகச் செய்துக்கிட்டிருக்கிறோம். எங்கட புள்ள குட்டிக்கெண்டாலும் ஒரு விடிவு கெடைச்சாப் போதும்! என்று முக்தார் மனதுக்குள் கறுவிக்கொண்டபடி கரையோரமாக நடையாக நடந்து மூதூர்த் துறைமுகத்தை வந்தடைந்தபோது அங்கே கடல் வழிப் பயணத்திற்காக மக்கள் இயந்திரப் படகை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அங்கே மாரிகாலத் தாவரங்கள் போல துறை முகத்தில் முளைத்தெழுந்து நிற்கும் தேநீர்க் கடைகளுக்குள் மக்கள் போவதும் வருவதுமாக இருந்தனர்.

முக்தார் காது இடுக்கிலிருந்து குறைச்சுருட்டை எடுத்துத் தேநீர்க் கடை ஒன்றில் பற்றவைத்துக் கொண்டு திரும்பிய போது -

''என்ன முக்தார் நானா நல்லா அசந்து போயிட்டீங்க, சொகமில்லையா?'' என்று வாஞ்சையோடு கேட்டான் ஜமால்தீன்.

''மனது நல்லா இருந்தாத்தானே மனிசன் உருப்படியாக இருப்பான்.''

''தொழில் நிலைமை எல்லாம் எப்படி....?''

''புறங்கடலுக்குப் போவாம ஒழைக்கலாகாது''

''ஓமோம், இந்தக் குடாக் கடல நம்பி வாழேலாது. கொஞ்சம் தள்ளிப் போனாத்தான் நூறு இருநூறு ரூபா ஒழைக்கலாம்.''

''நாளைக்கு வாறியா நாம ரெண்டு பேரும் புறங்கடலுக்குப் போவோம்?''

''நானும் அதப்பத்தித்தான் ரெண்டு நாளா யோசிச்சிக்கிட்டிருக்கேன்''

''அப்படியா? நான் வெள்ளாப்புல வந்து உன்னக் கூப்புடுறேன். நீ ஆயத்தமாய் இரு. எண்ட தோணியில ரெண்டு பேரும் போவம்.''

''அது சரி இப்ப கொஞ்ச நாளா உன்ன இந்தப் பக்கம் காணல்ல. எங்க போனாய்?''

''அது ஏங்க கேக்கிறீங்க, வெள்ளாம வெட்டுவோம் எண்டு மட்டக்களப்புப் பக்கம் போனேன். நமக்குப் பழக்கமில்லாத தொழில். சரிப்பட்டு வரல்ல. வந்துட்டேன். கடலை மட்டும் நாம நம்பி வாழேலாது, வேறு தொழிலையும் செஞ்சி பழகத்தான் வேணும்''

* * *

முக்தார் துறைமுகத்தைவிட்டு அகன்று வீட்டை அடைந்த போது அங்கே குடிசையின் வாசலிலே குடையாகக் கவிந்திருந்த தென்னை மர அடியில் குந்தியவாறு அவனது மனைவி கதீஜா நிலத்தைக் குச்சியால் கீறிக் கொண்டிருந்தாள். பிள்ளைகள் குடிசையின் பின் புறமாக ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். கணவனைக் கண்டதும் கதீஜா எழுந்து நின்று -

''என்னங்க இவ்வளவு நேரமும் எங்க போனீங்க....?''

''எங்கயாவது போவாட்டி நாம எப்புடி வாழ்றது...?''

''அதுக்கு இப்ப என்ன செய்யப் போறீங்க....?''

''நாளைக்கு நான் ஜமால்தீனுடன் சேர்ந்துக்கிட்டு புறங்கடலுக்குப் போகப் போறன்''

''என்ன சொன்னீங்க?''

''இஞ்ச பார்! குடாக் கடலுக்குள்ள தொழில் செய்யலாது''

''வேணாங்க புறங்கடலுக்குப் போய் மீன் புடிக்க வேணாம் எண்டு தடுத்திருக்காங்க. நீங்க ஏன் அதை மீறிப் போவப் போறீங்க...?''

''போவாட்டி பட்டினியாக் கெடந்து சாகச் சொல்றாய்? நம்மோட சேந்து ராத்தாவுடைய குடும்பமும் கஷ்டப்படுது''

''அதுக்காக நீங்க பொறங்கடலுக்குப் போக வேணுமா...? ஆண்டவன் நமக்கொரு வழியைக் காட்டாமலா போவான்...?''

''நீ சும்மா கெட, நிவாரணச் சாமான்கள் கூட நமக்கு ஒழுங்காக் கெடைக்குதில்ல. ஊட்டுக்குள்ள எத்தின நாளைக்குத்தான் குந்திக் கொண்டு இருப்பது...?'' என்று பெருமூச்சு விட்டான் முக்தார்.

காலைப் பொழுது புலர்ந்தது முதல் மப்பும் மந்தாரமுமாக இருந்தது அன்றைய நாள்! மேகம் மூடிய ஆகாயத்திற்குள் எங்கோ கதிரவன்! கதிரவனைக் கண்டு கொள்ளாமலே அன்றைய பொழுது நகர்ந்து கொண்டிருந்தது.

''வெள்ளாப்புல நான் கடலுக்குப் போறேன்.'' என்ற எண்ணம் ஆட்கொள்ள முக்தாருக்கு மனதில் ஒரு பூரிப்பும், ஆறுதலும்.... சிலவேளை ஏதேனும் நடந்துவிட்டால் என்ற தயக்கம்....?''

மாலை வேளையில் மீண்டும் கடற்கரையை அடைந்த முக்தார் கடலை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். கடற்கரையை விட்டுப்போக அவனுக்கு மனம் இடங்கொடுக்கவில்லை. கடற்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருந்த தனது தோணியைக் குழந்தைபோல் தொட்டுத் தழுவிக்கொஞ்சினான்.

குளம்போல் அசைவின்றி மோனித்துக் கிடந்த கடல் மெல்ல மூச்சுவிட ஆரம்பித்தது. பம்மிப் போய் இருந்த காற்று மெதுவாக அசையத் தொடங்கியது. கடல் தனது நீண்ட நாக்கால் கரையை சுழற்றி நக்கி எடுக்க ஆரம்பித்தது.

நிர்மலமாக இருந்த வான் வெளிப்பரப்பு வரவர கறுக்க ஆரம்பித்தது. முகிற்கூட்டம் காற்றில் பம்பரமாகச் சுழன்றது. கொட்டியாபுரக் குடாக் கடலின் அசாதாரண அமைதி குலைந்துவிடும்போல் இருந்தது.

சூழ்நிலையை அவதானித்தபோது - தனக்கு எதிராக இவைகள் சூழ்ச்சி செய்வதாக முக்தார் நினைக்கையில் மேற்கு வானத்தின் கூன் விழுந்த முதுகு வழியாகச் சூரியன் அடிவானச் சுரிக்குள் சென்று மறைய இருள் கவியத்தொடங்கியது.

முக்தார் தனது குடிசையை நோக்கிச் சோர்வோடு நடந்தான். அங்கே அவனது மனைவி கதீஜா உக்கிப்போன குடிசையின் கூரையைச் சரி செய்துகொண்டிருந்தாள்.

இரவுச் சாப்பாட்டிற்கு ஆலாய்ப் பறந்த குழந்தைகள் அடங்க நித்திராதேவி அவர்களை அரவணைத்துக் கொண்டாள்.

மின்னற் கொடி அடிவானில் தோன்றி மறைந்தது. இடிஇடித்தது. 'சோ' வென மழைபெய்தது. கடற்கரை ஓரத்தே செழித்து வளர்ந்திருந்த மரங்கள் எல்லாம் காற்றில் பேயாட்டம் ஆடின.

கடல் ஆக்ரோஷம் அடைந்து ஆர்ப்பரித்தது. அலைகள் மோகரித்து எழுந்தது. கடலும், மழையும், காற்றும் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டுத் தமது பலத்தைக் காட்டத் தொடங்கின.

விழிப்பிற்கும் நித்திரைக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்த முக்தாரின் கனவெல்லாம் ஜமால்தீனுடன் வெளிக்கடலுக்குப் போவதும், மீன்பிடிப்பதுமாக இருந்தது. கனவிலிருந்து விடுபட்ட முக்தார் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தான். வீட்டுக் கூரையால் ஒழுகும் மழை நீருக்குப் பாத்திரங்களை வைத்துவிட்டுக் குடிசையின் மூலையில் குந்திக் கொண்டிருந்தாள் கதீஜா.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரி ஆகாயம் நோக்கித் தீர்க்கும் துப்பாக்கி வேட்டின் ஒலியே படகுகள் முத்துக் குளிப்புக்குச் செல்லும் அனுமதிக்கான சமிக்ஞை

யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்துகொள்ளுங்கள்

ஆவணப் பெட்டகம் 03

**ஆபரண வரி**

பொதுமக்கள் அணிந்திருந்த தங்க, வெள்ளி ஆபரணங்கள் மீது, 25 வீதம் வரி விதிக்கப்பட்டது இந்த வரி Joy tax என அழைக்கப்பட்டது.

**ஊழியம்**

தலைவரி செலுத்த முடியாதவர்கள் (குறைந்த சாதிக்காரர்) வருடத்தில் பன்னிரண்டு நாள்கள் சம்பளமின்றி அரச சேவையில் (Public works) ஈடுபட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இது ஊழியம் என அழைக்கப்பட்டது.

**சங்கு பிடித்தல்**

ஒல்லாந்தர் காலத்திலும் பின்னர் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலும் மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் பெருமளவு சங்கு பிடிக்கப்பட்டது. சங்குகள் சுழியோடியே பிடிக்கப்பட்டன. ஒல்லாந்தர் சங்கின்மூலம் கிடைத்த வருமானத்தின் அரைவாசியைச் சுழியோடிகளுக்கு வழங்கினர். பிரிட்டிஷார் இதனை 1/3 ஆகக் குறைத்தனர். சங்குக்கு ஏற்றுமதி வரியாக 5 வீதம் அறவிடப்பட்டது. சங்கின் மூலம் கிடைத்த வரி வருமானம் வருமாறு:

1795 - 99 வரை சராசரி 21, 450 றிக்ஸ் டொலர்.
1800 - 1804 வரை 37, 841 றிக்ஸ் டொலர்.
1805 - 1812 வரை 48, 404 றிக்ஸ் டொலர்.

ஏற்றுமதி செய்யப்பட்ட சங்கின் பெறுமதி வருமாறு:

1806 - 10 வரை சராசரியாக ஆண்டொன்றுக்கு 54, 903 றிக்ஸ் டொலர் சங்கிலிருந்து வருமானம் கிடைத்தது.

1811 - 13 வரை 126, 729 றிக்ஸ் டொலர் கிடைத்தது.

1814 ஆம் ஆண்டு சங்கு குத்தகைக்கு எடுப்பவர்கள் மிகவும் குறைந்த கேள்வித் தொகையை முன் வைத்ததுடன் தம்மிடம் கையிருப்பிலிருந்த சங்கை ஏற்றுமதி செய்தனர். இதனால் 1814 ஆம் ஆண்டு சங்கின் மூலம் ஆக 467 றிக்ஸ் டொலர் மட்டுமே வருமானமாகக் கிடைத்தது. இதனையடுத்து சங்கு வரி திருத்தியமைக்கப்பட்டது. 1825 ஆம் ஆண்டு 5000 ஸ்ரேர்லிங் பவுணுக்குக் கூடுதலான பணம் சங்கு ஏற்றுமதி மூலம் கிடைத்தது. 1827 ஆம் ஆண்டிலிருந்து சங்கு ஏற்றுமதி படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியது.

1831 - 33 காலப்பகுதியில் கோல்புறூக் ஆணைக்குழு (Colebrooke Commission) சங்கு உற்பத்தியில் பிரித்தானிய அரசுக்கு இருந்த ஏகபோக உரிமையை நீக்குமாறு சிபார்சு செய்தது.

**உப்பு**

யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, புத்தளம் பகுதிகளில் பெருமளவு உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. கற்பிட்டி, புத்தளம் பிரதேசங்களிலேயே கூடுதலான அளவு உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இங்கிருந்து கொல்கத்தாவுக்கு உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. உப்புக்குப் பதிலாகக் கொல்கத்தாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. உப்புக்கு 8 வீதம் வரி அறவிடப்பட்டது.

**முத்துக்குளிப்பு**

மன்னாரில் முத்துக் குளிப்பு 3000 வருடங்களுக்கு முன்னரே தொடங்கி விட்டதாகவும் மன்னாரிலுள்ள முத்துப் படுகைகளுக்கு நிகரான முத்துப் படுகைகள் (Pearl banks) உலகில் வேறெங்கும் கிடையாது என வும் James Hornell என்பவர் Twentieth centuary impressions of Ceylon என்ற நூலில் குறிப்பிட்டுள் ளார் (பக்.227).



முத்துக்குளிப்பதற்குச் செல்லத் தயாராகும் படகு.

தமிழரசர் காலத்தில் மன்னாரில் முத்துக் குளிப்பு இடம்பெற்றதாகத் தமிழிலக்கியங்கள் கூறுகின்றன. போர்த்துக்கீசரின் காலத்திலும் மன்னாரில் முத்துக் குளிப்பு நடைபெற்றது. போர்த்துக்கீசர் காலத்தில் இடம்பெற்ற முத்துக்குளிப்புப் பற்றி போர்த்துக்கீசர் எழுதி வைத்திருந்த குறிப்புகளை ஒல்லாந்தர் அழித்துவிட்டனர். ஒல்லாந்தர் காலத்திலும், பிரித்தானியர் காலத்திலும், இடம்பெற்ற முத்துக்குளிப்புப் பற்றிய விவரங்களே தற்போது உள்ளன.

ஆங்கிலேயர் காலத்திலும் மன்னாரில் அரிப்புப் பகுதியில் இருபது முத்துப்படுகைகள் காணப்பட்டன. இதைவிடக் கற்பிட்டியில் எட்டு முத்துப்படுகைகளும், சிலாபம், நீர்கொழும்புப் பகுதிகளில் முறையே நான்கு முத்துப் படுகைகளும் காணப்பட்டன. மார்ச், ஏப்ரல் மாதங்களிலேயே முத்துக் குளிப்பு மேற்கொள்ளப்பட்டது. பாரசீக வளைகுடாவிலிருந்துவரும் (பெரும்பாலும் நீக்ரோக்கள்) அரேபியச் சுழியோடிகளும், தூத்துக்குடியிலிருந்து வரும் மலையாளிகளும், நாகபட்டினத்திலிருந்து வரும் தமிழ், முஸ்லிம் சுழியோடிகளும் முத்துக் குளிப்பில் ஈடுபட்டனர்.

ஒரு படகில் பத்துச் சுழியோடிகள் முத்துக் குளிக்கச் செல்வர்.

முத்துக் குளிப்பைக் குத்தகைக்கு வழங்கும் அதிகாரம் யாழ்ப்பாணக் கலெக்டரிடம் விடப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் முத்துக் குளிப்பைக் குத்தகைக்கு வழங்கிய பிரிட்டிஷார் பின்னாளில் பிடிபட்ட முத்துகளை ஏலத்தில் விற்பனை செய்தனர். மன்னார் உதவிக் கலெக்டரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் முத்துக் குளிப்பு நடைபெற்றது. முத்துக்குளிப்பு நடைபெறும் காலத்தில் மன்னார் கலெக்டர் அமர்வு பொலிஸ் நீதிவானாகவும் (Sitting Police Magistrate) கடமையாற்றினார்.

மன்னார் கலெக்டரின் கீழ் கொட்டு சுப்பிரிண்டன் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார். பெரும்பாலும் கடற்படைத் தளபதிகளையே பிரிட்டிஷ் அரசு கொட்டு சுப்பிரிண்டன்களாக நியமித்தது. கொட்டு சுப்பிரிண்டன் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தவுடன் படகுகள் யாவும் முத்துக்குளிக்கப் புறப்படும். நண்பகலுடன் முத்துக் குளிப்பு நிறுத்தப்படும். சுழியோடிகள் 40 - 50 செக்கன் வரையில் தண்ணீருக்குள் இருந்து சிப்பிகளை எடுப்பர். மலையாளச் சுழியோடிகளுக்கு ஒருமுறை தண்ணீருக்குள் சென்று வருவதற்கு 7பதம் (Fatham) கூலியாக வழங்கப்பட்டது.

ஆனால் தமிழ், முஸ்லிம் சுழியோடிகள் இதற்குச் சம்மதிக்கவில்லை. தமிழ், முஸ்லிம் சுழியோடி களுக்கு ஒருமுறை தண்ணீருக்குள் சென்று வருவதற்கு 8- 9 பதம் கூலியாக வழங்கப்பட்டது.

1905 ஆம் ஆண்டு பாரசீக வளைகுடாவிலிருந்து வந்த 4090 அரேபியச் சுழியோடிகளும் நாகபட்டினத்திலிருந்து வந்த 4573 சுழியோடிகளும் 473 படகுகளில் முத்துக்குளிப்பிலீடுபட்டதாக யாழ்ப்பாணக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய Leonardwoolf என்பவர் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். சராசரியாக ஒரு நாளைக்கு 20 மில்லியன் சிப்பிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டதாகவும் இவர் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளா.

1797, 98 ஆம் ஆண்டுகளில் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலைக் கட்டுவித்த வைத்திலிங்க கந்தப்பச்செட்டியார் முத்துக்குளிப்பைக் குத்தகைக்கு எடுத்திருந்தார். 1797 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசுக்கு நிகரலாபமாக 107,000 ஸ்ரோலிங் பவுண் கிடைத்தது. 1891 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முத்துக்குளிப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் வெற்றிகரமான முத்துக்குளிப்பாகக் கருதப்பட்டது.


**தாண்டவன்**

*(வளரும்)*

# கொன்றை மரத்தின் சகல பகுதிகளும் ஆயுள்வேத வைத்தியத்தில் பெரிதும் பயனுள்ளவை

**சரக்கொன்றை**

கொன்றையில் சரக்கொன்றை, சிறுகொன்றை, மாம்பழக்கொன்றை, செங்கொன்றை, கருங்கொன்றை, நரிக்கொன்றை, புலிநகக் கொன்றை, மந்தாரக் கொன்றை, முட்கொன்றை, மயிர்க்கொன்றை என்று பலவகை இருந்தாலும் மருத்துவத்தில் அதிகம் பயன்படுவது சரக்கொன்றையாகும்.



**வேறு பெயர்கள்:** கொன்னை, கொண்ணெ, கொண்டல், கொன்றை, இதழி, கடுக்கை, பெருங்கொன்றை.
**தாவரவியற்பெயர்:** Cassia fistula (காசியா பிஸ்ரியுலா)
**குடும்பம்:** Caesalpinioidiae
**சிங்களப் பெயர்:** அஹல
**சமஸ்கிருதப்பெயர்:** ஆரக்வத
**ஆங்கிலப்பெயர்:** Golden Shower

இது நடுத்தர மரவகுப்புக்குரியது. இளமரங்களின் பட்டை பழுப்பு நிறமாகவும், முதிர்ந்த மரங்களின் பட்டை கருநிறமாகவும் காணப்படும். இலைகள் கூட்டிலை. முட்டை வடிவாக அல்லது முக்கோண வடிவாகக் காணப்படும்.

மாசிமாதத்தில் இலையுதிர்த்து பங்குனி, சித்திரையில் பூக்கும். பூக்கள் மஞ்சள் நிறம்: கொத்துக் கொத்தாகத் தலைகீழாகத் தொங்கும். பூச் சரங்கட்டித் தொங்க விட்டிருப்பது போலத் தோற்றமளிப்பதாலேயே சரக்கொன்றை என்ற பெயர். பொன்னிறமாகப் பூத்துச் சொரிவதாலேயே ஆங்கிலத்திலும் Golden Shower என்று அழைக்கிறார்கள். கொன்றைப் பூ சிவனுக்கு மிகவும் பிரியமானது. கொன்றை சூடி, கொன்றை வேந்தன் என்பன சிவனைக்குறிக்கும் பெயர்களாகும். வைரவர், பிள்ளையார் போன்ற கடவுளரும் கொன்றை மரத்தடியை வாசஸ்தலமாகக் கொண்டு கொண்டலடி வைரவர், கொண்டலடிப் பிள்ளையார் என்று பிரசித்தி பெற்று விளங்குகின்றனர்.

வைகாசி மாதத்தில் கழிபோன்ற பச்சை நிறக் காய்கள் உருவாகும். அவை சுமார் 1 - 1 1/2 அடி நீளம். முதிரும்போது கருமை நிறமாகும். வித்துக்களுக்கிடையில் [illegible] சதைபோன்ற பகுதி கருநிறமாயும் பிசுபிசுப்பாயும், சற்று இனிப்புச் சுவையாகவும் இருக்கும். இது சரக்கொன் றைப் புளி எனப்படும்.

துளிர், இலை, பூ, புளி, விதை, பட்டை முதலிய பாகங்கள் அனைத்தும் மருத்துவத்தில் பயன்படுகின்றன.

கொண்டல் இலை அல்லது இலைத்துளிரை வறுத்துத் தேங்காய் சேர்த்துச் சம்பல் அல்லது அரையல் செய்து சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டால் மலங்கழியும். மலச்சிக்கல் உள்ளவர்களுக்கும் மலம் கிரமமாக வெளியேறாமல் சிரமப்படும் வாதநோயுள்ளவர்களுக்கும் இது மிகவும் நல்லது.

ஆனால் வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவைதான் இவ்விதம் உண்ணுதல் வேண்டும்.


இலைத்துளிரை இடியப்பத்தட்டில் வைத்து அவித்து எடுத்து, சாறுபிழிந்து அதில் 2 - 3 மேசைக் கரண்டியளவில் எடுத்துச் சிறிது சீனி சேர்த்துப் பருகினால் குடற்கிருமிகள் மலத்துடன் வெளியாகும்.

இலையை அரைத்து அல்லது சாறு பிழிந்து சொறி, சிரங்கு, படர்தாமரைக்குப் பூசலாம். பூவைக் குடிநீர் செய்து குடித்தால் வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், வயிற்றில் ஏற்படும் அசௌகரியங்கள் நீங்கும்.

சரக்கொன்றைப்புளியை உலர்த்திச் சூறணமாக்கி வைத்துக் கொண்டு, தேவைப்படும்போது தண்ணீர் விட்டரைத்து, கொதிக்க வைத்து மூட்டுகளில் ஏற்படும் பிடிப்புகளுக்கு (கீல் பிடிப்பு) பூசிவரக் குணம் ஏற்படும்.

சரக்கொன்றை வேர்ப்பட்டையுடன் ஆமணக்கு வேர்ப் பட்டை, சிறுநெருஞ்சில், சாறணை, தேவதாரு, சித்தரத்தை என்பவற்றைச் சேர்த்துக் குடிநீர் செய்து குடித்துவர மூட்டுவாத நோய்கள் தணிவடையும்.

*(வளரும்)*



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மிருசுவில் படித்த மகளிர் திட்டம் - துர்க்காபுரம்
## ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம் - 2010

9ஆம் நாள் இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை தேர் உற்சவத்துடன் விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறிநின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

அனைவரும் பங்கு கொண்டு எல்லாம் வல்ல ஞான துர்க்கை அம்மனின் பாதார விந்தத்தினைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

'இறைபணியே இன்பப்பணி'

ஆலய தர்மகர்த்தா,
**சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா.**

(சி/569124)

## EDWARD MAKES

GEM GEM

**நோ வாத எண்ணெய்**

சகல விதமான நோவு, வீக்கம், கண்டல், சுளுக்கு, நாரி, கழுத்து, கை கால் பிடிப்பு, தீச்சுட்டபுண், பித்தவெடிப்பு, நெஞ்சுத்து நீங்கும். மாடுகளுக்குண்டாகும் சகல் வீக்கங்களும் குணமாகும். Releives all pain aches and rheumatic inflamation

**பல்வலித் தைலம்:** பல்வலி, பல்லுக்கொதி, பல்லுநோ, வாய் மணம், பல்பூச்சி போன்றவற்றிற்கு உடனடி நிவாரணி. சிறிதளவு பஞ்சில் தைலத்தினை நனைத்து நோ உள்ள இடத்திலிட்டு சிறிது நேரம் கடித்து வைத்திருக்க நோ நீங்கும். சிறிதளவு தைலத்தினை ஆறிய வெந்நீரில் விட்டு வாய் கொப்பளிக்க வாய்மணம், பல்லழற்சி நீங்கும்.

**கோரோசனைக் குளிசை:** குழந்தைகளிற்குண்டாகும் மலபந்தம், முறுக்கு, சளி, சளிக்கட்டு, மேல் கொதி, மண்டைக்கொதி, உடல்சூடு, மலக்கட்டு, சலக்கட்டு ஆகியவையும் வேறு குழந்தை நோயும் தீரும்.

**றெட் ஒயின்மென்ற்:** அவியல், நீர்ச்சிரங்கு, புண், புரை, பருக்கள், பித்தவெடிப்பு, கட்டு, படுவன், அக்கி,கிரந்தி, தலை அவியல், சிரங்கு, சொறி, படுக்கைப்புண், தீச்சுட்டபுண், வெட்டுக்காயம், உரேஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி, சகலதையும் குணமாக்க வல்லது.

**எட்வேட் தயாரிப்புக்கள் எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்**

வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட் (L.A.M.P, R.I.M.P)
ஆலோசகர்: வைத்திய கலாநிதி திருமதி யஸ்ரின் யூட் (B.S.M.S)
63, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
0212228171/0772300510, edwardmakes@yahoo.com

## மரண அறிவித்தல்



### திருமதி மங்களேஸ்வரி நடராஜா

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாவும், மிசிசாகா, கனடாவில் வசித்து வந்தவரும், இளைப்பாறிய பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சிபெற்ற, யாழ்.இந்து மகளிர் கல்லூரி (Hindu Ladies College,Jaffna) முன்னை நாள் ஆசிரியையும் காலஞ்சென்ற க.சி. பொன்னம்பலம்-ருக்மணி தம்பதியரின் புதல்வியும் யாழ்ப்பாணக் கச்சேரியில் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி (AFC) யாகவும் ஊர்காவற்றுறை (Kayts)யில் DRO வாகவும் பணிபுரிந்த காலஞ்சென்ற பொன்னையா நடராஜாவின் துணைவியுமான திருமதி மங்களேஸ்வரி நடராஜா 20.07.2010 இல் மிசிசாகாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மிசிசாகாவில் வசிக்கும் திருமதி துஷ்யந்தி தர்மபாலன், லண்டனில் (U.K) வாழும் திருமதி மச்சயந்தி மனோகரன், துகிந்தன் நடராஜா, கொழும்பில் வசிக்கும் மகிந்தன் நடராஜா ஆகியோரின் அன்புத் தாயும் சுரெஷ் தர்மபாலன், கனகசபாபதி மனோகரன், இளங்கதிர் துகிந்தன் ஆகியோரின் மாமியாரும் கொழும்பில் வசித்த காலஞ்சென்ற பொன் கமலேந்திரன், மிசிசாகா- கனடாவில் வாழும் பொன் குலேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லண்டனில் வாழும் மயூரன், மதுரன், பிரகஸ்தன் மிசிசாகா, கனடாவில் வாழும் மேகலா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் 7 மணிவரை 3164 Ninth Line Dundas, Mississauga/Oakville (HW 403& Dundas), L6H 7A8, (Tel:905257 1100) உள்ள Glen Oaks Memorial Gardens இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, நாளை 26.07.2010 திங்கட்கிழமை அதே விலாசத்தில் 12 மணி முதல் கிரியைகள் நடத்தப்பட்டு அவ் விலாசத்தில் உள்ள மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி பிள்ளைகள், சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள் கேட்டுக்கொள்கின்றனர்.

தொடர்புகளுக்கு:
துஷ்யந்தி 9058120835
பொன் குலேந்திரன் 6472801527

(சி/569404)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரோஜினிதேவி சவுந்தரராஜா



அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வன்கூர், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி சவுந்தரராஜா 18/07/2010 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சோமசுந்தரம் (இளைப்பாறிய OA, கச்சேரி) தம்பதியினரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஆறுமுகம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) தம்பதியினரின் மருமகளும், சவுந்தரராஜாவின் (இளைப்பாறிய உதவி உற்பத்தி முகாமையாளர், காகித ஆலை, வாழைச்சேனை) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சச்சிதானந்ததாஸ் (Farm Manager, Seeds Proccssing) மற்றும் கலாநிதி கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிகலா (கனடா), அனுஷலா (Accounts Administration London), காலஞ்சென்ற கோணேஸ்குமார் ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், தயாபரன் (Certified General, Accountant, Canada), உத்தரா (Technical Consultant, London) ஆகியோரின் அன்பு மாமியும், ஆர்த்தி, ஷாகரி, ஆரணன், அபிணன் ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25/07/2010) ஞாயிற்றுக்கிழமை Forest Lawn Funeral home 3789 Royal Oak Avenue, Burnaby, Bc Canada USG 3 M1 இல் உள்ள மயானத்தில் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சசிகலா தயாபரன் T.P - 001 604 876 4293
E.mail - moothacga @ shaw.ca
அனுஷலா உத்தரா E.mail - anushala @ g mail.com

(100831)

### சின்னத்துரை பரமேஸ்வரன்



காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவைப் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை (குமாரி) பரமேஸ்வரன் 21.07.2010 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சறோசினிதேவியின் அன்புக் கணவரும் சுகந்தி, பிரதீபா, ராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்கோடை,
காரைநகர். (100950)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# IELTS இன்றி Spot Admissions மூலம் UK இல் உயர் கல்வி



## West End College London

| | | |
|---|---|---|
| இடம் | : | 4, IBC Road, Wellawatte, Colombo 6. |
| திகதி | : | 14th August 2010 |
| நேரம் | : | காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை |

Spot Admission by the College Representatives
**Ms. Melanie Green & Ms. Hannah Bilcliffe**
at Our Office Premises

***VISA** பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.*

**எமது சேவை முற்றிலும் இலவசம்**

**O/L உடன் குறைந்த கட்டணத்தில்!**

தேவையான ஆவணங்கள்
> சுயவிபரக் கோவை (CV)
> கடவுச்சீட்டின் பிரதி (Passport Copy)
> கல்விச் சான்றிதழ்கள் (O/L, A/L உள்ளடங்கலாக)

FLEX Graphic

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)

For appointment please contact :
**0777 761346**


**4, IBC Road, Colombo 6.**
E-mail: flexinstitute@sltnet.lk
**Web: www.flexinstitute.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னை மடியில்:
07.12.1920

ஆண்டவன் அடியில்:
26.06.2010



அமரர்
**சின்னையா சோமசுந்தரம்**
(ஓய்வு பெற்ற R.M.P)


கடந்த 26.06.2010 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் கலந்துகொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் தொலைபேசி, மின்னஞ்சல், கடித மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

30 ஆம் நாள் நினைவாக இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் பஜனை நிகழ்வு நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தனை செய்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தயவுசெய்து இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

138/3, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# 49 ஆவது பிறந்த நாள் நினைவலைகள்



## அமரர் சின்னத்துரை பக்தகுணசீலன்
(உரிமையாளர், பூங்கனிச்சோலை)

அன்பான அப்பாவே!
அன்னையவள் மனம் மகிழ
அன்புச் செல்வங்கள் நாம் குளிர
அன்பாய் வாழ்ந்து
அர்ப்பணமாகியவரே
அகவை நாற்பத்தொன்பதில்
வாழ்ந்திட நீங்களில்லையே
வஞ்சகர் உனை அநியாயமாய்
வஞ்சித்த சேதி இன்று போல்.....

பூங்கனிச்சோலை
திருநெல்வேலி.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



## நடேசன் ஆனந்தராசா (கண்ணன்)
(தவில் வித்துவான்)

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த காலஞ் சென்ற பெரியசாமி நடேசன் - சிவபாக்கியம் தம்பதியரின் புத்திரர் நடேசன் ஆனந்தராசா (கண்ணன்) 23.07.2010 வெள்ளிக் கிழமைஇறைபதமடைந்து விட்டார்.

அன்னார் நடேசன் ஆனந்தமூர்த்தி, நடேசன் ஆனந்தசிவம், நடேசன் ஆனந்தராணி, ஆனந்த ஈஸ்வரி கணேசமூர்த்தி, சந்திரிகா குரூஸ் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இணுவில் மஞ்சத்தடி இல்லத்தில் இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

4ஆம் கட்டை ஒழுங்கை,
மஞ்சத்தடி, இணுவில்.

தகவல்:
மாமன் செல்வம் (நாதஸ்வரம்).

(206554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹோட்டல் முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு பின்வரும் ஊழியர்கள் தேவை.

1) ஹோட்டல் முகாமையாளர் 2) வரவேற்பாளர்
3) ஹோட்டல் சிப்பந்தி 4) கணக்குப் பதிவாளர்
5) சமையலாளர்

நேரில் சமுகம் தரவும்.

**பூளூஹெவன்**

70, றக்கா றோட், யாழ்ப்பாணம்
0212229958

(100948)

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

**மீண்டும் யாழில்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாத நோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற் படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=

**காசல் ரூறிஸ்ற் இன்**

392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 071 9315664, 0777 569205

(கி/568671)

## வீடும் காணியும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் ஐந்து(5) பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. இக்காணி புகையிரத நிலையத்திற்கும் கச்சேரிக்கும் மத்தியில் அமைந்துள்ளது.
தொடர்புகளுக்கு : தொ.பே. இல. 2229432
(பி.ப. 3 மணிக்குப் பின்னர்)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது. 1KG 450/-.வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்.

விஜயகுமார்,
குளப்பிட்டிவீதி,
ஆனைக்கோட்டை.

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் - கைதடி வீதி, உரும்பிராய் மேற்கில் அமெரிக்கன் பாமிற்கு அருகில் தண்ணீர் வசதியுடன் கூடிய 4 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. விரும்புபவர்கள் கீழ்கண்ட தொலைபேசிக்கு தொடர்புகொள்ளவும்.
0713140553


## அல்வாயில் இன்று ஆயத்தப் பரீட்சை

அல்வாய், சாமணந்துறை ஆலடிப் பிள்ளையார் கோயில் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த(உ/த) பரீட்சைக்கான ஆயத்தப் பரீட்சையும் வழிகாட்டலும் தேவரையாளி இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

பாடவாரியாக உயர் புள்ளிபெறுபவர்களுக்கு அதி உயர் பரிசில்களும் வழங்கப்படும். மாணவர்கள் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1)


## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
**(Centre for International Language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்

குறிப்பு: ஒக்ரோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.

GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

**19** வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
**July.2010 to Dec..2010**
தமிழ் மொழி மூலம்
- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010**

## இன்று முதல் ஆடித் தள்ளுபடி

21.07.2010
10.08.2010 வரை

ஆடி என்றால்
சரவணா தான்

10.08.2010 வரை
7 நாள்களும் கடை திறந்திருக்கும்

(20 நாள்கள் மட்டும்)



| | | |
|---|---|---|
| ★இந்தியன் சீக்குன்ஸ் சாறி (Full Work Saree) | ~~2600/-~~ | 1850/- |
| ★இந்தியன் சில்க் சாறி (Office Wear Saree) | ~~1350/-~~ | 950/- |
| ★கில்ரவேக் சாறி | ~~1450/-~~ | 1150/- |
| ★இந்தியன் கொட்டன் சாறி (Office Wear Saree) | ~~1200/-~~ | 850/- |
| ★இந்தியன் கொட்டன் சாறி (விஜயலக்சுமி கொட்டன் சாறி 6:20m) | ~~2000/-~~ | 1250/- |
| ★இந்தியன் பன்சி கொட்டன் சாறி | ~~2250/-~~ | 1650/- |
| ★இந்தியன் சில்க் பஞ்சாபித் துணி (Guru krupa, Special Quality) | ~~1450/-~~ | 1000/- |
| ★இந்தியன் கொட்டன் பஞ்சாபி துணி (First Quality) | 1000/- ,1250/-,1350/- ,1500/-,1650/- | |
| ★பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபித் துணி (லைனிங் தேவையில்லை) | | 750/- |
| ★இந்தியன் சில்க் சாறி (Office Wear Saree) | ~~700/-~~ | 500/- |

(சி-569368)

**Saravana Tex**

நல்லூர்
**சரவணா ரெக்ஸ்**

இல. 526, 529,பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி)
சிவன்கோயிலுக்கு அருகில்,யாழ்ப்பாணம்.


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயவன் கையில்
28
11
1980



காலனவன் கையில்
25
07
2005

**அமரர் சிவசுப்பிரமணியம் மயூரன்**
**(யாழ். இந்துக் கல்லூரி, உயிரியற் பிரிவு 1999)**

ஆளப்பிறந்த எம் குலமைந்தா - மயூரா!
ஆண்டுகள் ஐந்து கடந்துவிட்டோம் - ஆனாலும்
நீ தான் எம்மை இன்றும் ஆள்கின்றாய்.

149, 3/1, காலி வீதி,
தெகிவளை
0112718813

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## ஆண்டு ஒன்றில்...

தாயின் மடியில்:
08.03.1921

இறைவன் அடியில்:
05.08.2009



**கணபதிப்பிள்ளை தம்பையா**

திதி: பூரணை

உதிரத்தால் எழுதினாலும்- உங்கள்
பாசத்திற்கு உயிர் கொடுக்க முடியாது- ஐயா
வேதனை என்ற சொல்லுக்கு
வரைவிலக்கணம் சொல்லித் தந்த
உங்கள் பிரிவிற்கு - இன்று
ஆனதோ ஓராண்டு.....
காலத்தின் கட்டளைக்காக
கடவுள் அடி சேர்ந்தீரோ - ஐயா
காலமெல்லாம் உங்கள்
ஆசீர்வாதம் வேண்டி நிற்கும்

உங்கள் மனைவி, மகள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்

[illegible], பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைத்தேர்தல்: தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி

தமிழகம் முழுவதும் காலியாக இருந்த 258 உள்ளாட்சி இடங்களுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களைக் கைப்பற்றி உள்ளது.

கடந்த வியாழனன்று நடைபெற்ற தேர்தலில் வாக்கு எண்ணும் பணிகள் நேற்று நடைபெற்றன. திருச்சி மாநகராட்சி 28ஆவது வட்டாரத்திற்கு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.

பல்வேறு நகராட்சிகளில் 11 கவுன்சிலர்களை தேர்ந்தெடுக்க நடைபெற்ற தேர்தலில், தி.மு.க. வேட்பாளர்கள் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

ஆத்தூர் நகராட்சி உட்பட 28 ஆவது வட்டாரத்தில் தி.மு.க. வேட்பாளர் அகிலா வெற்றி பெற்றுள்ளார். சேலம் மாவட்டம் நரசிங்கபுரம் 3ஆம் நிலை நகராட்சியில் உள்ள 11ஆவது வட்டாரத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அழகிரி வெற்றி பெற்றுள்ளார். இதேபோல் பெரும்பாலான இடங்களில் தி.மு.க வெற்றி பெற்றுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடந்த பஞ்சாயத்து இடைத்தேர்தலில் உரப்பாக்கம், ஒரத்தூரில் அ.தி.மு.க. ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

காட்டான்குளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட உரப்பாக்கம் பஞ்சாயத்துத் தலைவராக அ.தி. மு.க. ஆதரவு பெற்ற பெருமாள், தி.மு.க. வேட்பாளரை விட 72 கூடுதல் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். ஒரத்தூர் பஞ்சாயத்துத் தலைவராக சீனிவாசனும் (அ.தி.மு.க. ஆதரவு பெற்ற வேட்பாளர்) வெற்றி பெற்றுள்ளார். (ஓ-1)

# தமிழகத்தில் பன்றிக் காய்ச்சலால் 50 பேர் பாதிப்பு

சென்னை, ஜூலை25

தமிழ்நாட்டில் பன்றிக் காய்ச்சலால் இதுவரை 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் இறந்துவிட்டனர் என்று பொதுச் சுகாதார சபை தெரிவித்துள்ளது.

சென்னை, நாகர்கோயில், கோயம்புத்தூர் நகரங்களில் பன்றிக் காய்ச்சல் அறிகுறி பலருக்கு இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. இதுவரை இந்நோய் அறிகுறி 50 பேருக்கு உள்ளதாக பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் கொற்கைபாண்டியன் தெரிவித்தார்.

இதுபற்றி கொற்கை பாண்டியன் மேலும் கூறியதாவது:

பன்றிக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. நேற்று வரை 50 பேருக்கு இந்நோய் பாதிப்பு உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக 20 ஆயிரம் தடுப்பூசிகள் மத்திய சுகாதாரத்துறையிடம் இருந்து பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மேலும் 30 ஆயிரம் தடுப்பூசி மருந்துகள் வந்துள்ளன. அரசு மருத்துவமனை, மருத்துவ கல்லூரி, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு இந்தத் தடுப்பூசி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. பன்றிக் காய்ச்சல் அரசு மருத்துவமனை ஊழியர்களுக்கு தொற்றாமல் இருப்பதற்காக முன் எச்சரிக்கையாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று கூறினார். (ஓ-1)

### நெய்யாறு அணையைத் திறந்துவிடக் கோரி

# திருவனந்தபுரத்தில் பேரணியாகச் சென்ற இளைஞர் காங்கிரஸ் கட்சியினர் கைது

திருவனந்தபுரம், ஜூலை25

நெய்யாறு அணையில் தண்ணீரைத் திறந்து விடக் கோரி பேரணி நடத்திய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராமசுப்பு, சட்டமன்ற உறுப்பினர் விடியல் சேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

நெய்யாறு அணையில் இருந்து கேரள அரசு தண்ணீர் திறந்து விட வலியுறுத்தி காங்கிரஸ் கட்சியினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். திருவனந்தபுரம், கன்னியாகுமரி சாலையில் ஊர்வலமாகச் சென்ற இளைஞர் காங்கிரஸ் கட்சியினர், கேரள அரசைக் கண்டித்து கோஷங்களை எழுப்பினர், கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் நெய்யாறு அணை, இடது கால்வாயில் தண்ணீர் திறந்து விட மறுத்து வருவதால், விளவங்கோடு தாலுக்காவில் உள்ள விளை நிலங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாக மாறி வருவதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

பேரணியில் கலந்து கொண்டு பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ராமசுப்பு, நெய்யாறு அணையில் இருந்து கேரள அரசு தண்ணீர் திறந்து விட, தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக கேரள அரசுடன் தமிழக அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றார்.

பேரணியில் பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ராமசுப்பு, விடியல் சேகர் மற்றும் 300இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தப் பேரணியால் திருவனந்தபுரம், கன்னியாகுமரி சாலையில் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டது. (ஓ-1)

# 'செல்போன்' தொழிற்சாலை பணியாளர்கள் விஷவாயு கசிவால் மயங்கி வீழ்ந்தனர்

### ஸ்ரீ பெரும்புத்தூரில் வெள்ளியிரவு சம்பவம்

சென்னை, ஜூலை 25

ஸ்ரீபெரும்புத்தூரை அடுத்த பாக்ஸ்கோன் என்ற செல்போன் உதிரிபாகங்கள் தயாரிக்கும் கம்பெனி உள்ளது. இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். வெள்ளிக்கிழமை இரவுப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை திடீரென சில தொழிலாளர்கள் மயங்கி விழுந்தனர். உடனே உதிரிபாகங்கள் தயாரிக்கும் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்டன.

மயங்கி கிடந்த தொழிலாளர்கள் அவசர அவசரமாக அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 200 தொழிலாளர்கள் விஷவாயு தாக்குதலில் பாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இது குறித்து சங்குவார் சத்திரம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தொழிலாளர்களுக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் கூறுகையில்;

விஷவாயு தாக்கியதில்தான் இவர்களுக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது. சிலருக்கு நுரையீரல் பாதிக்கப்பட்டு விட்டது. தீவிர சிகிச்சை அளித்து வருகிறோம் என்றனர்.

இது தொடர்பாக செல்போன் பாகங்கள் தயாரிக்கும் கம்பெனி நிர்வாகிகள் கூறும் போது;

இந்த சம்பவம் விஷவாயு தாக்குதல் அல்ல. அங்கு பழைய அறையில் இரும்பு பொருள்களை வைத்திருந்தோம். பல வருடங்களாக மூடி வைத்திருந்தோம். அறையை திறந்து பூச்சி மருந்து அடித்தோம். அந்த வாயுதான் எல்லா பிரிவுகளுக்கும் சென்றுள்ளது. அது ஏ.சி. அறை என்பதால் வாயு வெளியே போகவில்லை. அதனால்தான் இந்தளவுக்கு பாதிப்பு ஏற்பட்டு விட்டது. என்றனர். (ஓ-1)

# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு தேவராசலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு தேவராசலிங்கம் நேற்று (24.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு-சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் அன்னம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் மயூரன் (லண்டன்), கோகிலா, சங்கர் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அகல்யா (லண்டன்), சுரேஸ்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம், துணுக்காய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுப்பிரமணியம், குமாரசாமி, தங்கம்மா, வள்ளிநாயகி, கந்தசாமி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலேஸ்வரி பாலசுப்பிரமணியம் (இலங்கை மத்தியவங்கி), பேராசிரியர் க.தேவராஜா (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனரும் கருணேஷ், அக்ஷயன், அனுஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பேராசிரியர் க.தேவராஜா.
(மைத்துனர்)

தாவடி வடக்கு,
கொக்குவில்.

(ரி/569159)

## இரத்தினம் (தாடி) திருச்செல்வம்



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் திருச்செல்வம் நேற்று (24.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், செல்வரத்தினம் - புஸ்பராணி தம்பதியரின் மருமகனும், ஜெயந்தியின் (ரோகிணி) அன்புக் கணவரும் கோபிராஜ், கல்பனா, பவித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற லோகநாதன் (பெரியதம்பி) மற்றும் லோகநாயகி (ரதி), மகாதேவி (மதி), குசலகுமாரி (வவி), ரவிச்சந்திரன் (ஐயர்), வசந்தகுமாரி (வசந்தி), லிங்கேஸ்வரி (கனடா), சந்திரகுமார் (சந்திரன் -பிரான்ஸ்), சண்முகநாதன் (சண்முகம் - பிரான்ஸ்), கமலாம்பிகை (கமலா–பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நந்தகுமார் (நந்தன் - கனடா), ராகினி (சுகந்தி), ராஜ்குமார், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் புவனேஸ்வரி (சந்திரா - வவுனியா), யோகானந்தன் (கிருபா -வண்ணார்பண்ணை), கண்மணிராஜா (சின்ராசா), சசிகலா (சசி), நாகேஸ்வரன் (குஞ்சன் - லிபியா), கருணைபாஸ்கரன் (கனடா), பாமினி (பிரான்ஸ்), பிரதிபரஞ்சினி, அருள்முகி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணிக்கு பெரியவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ.ரவிச்சந்திரன் (ஐயர்)
சகோதரன்.

பெரியவிளான்,
இளவாலை.

(100880)

# வாக்காளர் பதிவு காலத்தின் கட்டாய தேவை சந்தர்ப்பத்தை எவரும் தவற விட்டுவிடாதீர்கள்

### அரச சார்பற்ற இணையம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை25

தற்போதைய சூழலில் தமிழ் மக்கள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யவது காலத்தின் கட்டாய தேவை என்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் இணையம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இணையத்தின் தலைவர் வி.கேசவன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வாக்காளர் இடாப்புப் பதிவு நடவடிக்கைகள் எமது சமூகத்தில் அரசியல் பிரதிநிதித்துவம், பொருளாதார மேம்பாடு, உயர்கல்வித் தகைமை, வதிவிட உறுதிப்படுத்தல் என்பவற்றிற்கு அடிப்படையான ஒன்றாக அமையப் போகின்றது.

இந்தப் பதிவு நடவடிக்கைகளில் எமது மக்கள் அதிக அக்கறை எடுத்துச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதுடன் 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதை அவரவர் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

சமூகநலன் சார்ந்த அமைப்புகள் குறிப்பாக சனசமூக நிலையங்கள் போன்றவை கூடிய கவனம் எடுத்து அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களுடன் இணைந்து உரிய பதிவுகளை மேற்கொள்ள உதவ வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

தற்காலிகமாக வெளிநாடுகளில் உள்ளவர்களும், இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இருப்பவர்களையும் தவறாது பதிவு செய்ய சகலரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ஓ-1)

# கோப்பாய் கலாசாலை நிர்வாகச் செயற்செயற்பாடுகள் மிக விரைவில் சீரடையும் சாதக நிலைமை

### மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிர்வாகத்தைச் சீராக்க நடவடிக்கை எடுக்கும்படியும், முன்னாள் அதிபர் வசம் உள்ள கலாசாலையின் நிர்வாக அறைத் திறப்பைப் புதிய அதிபரிடம் கையளிக்க ஏற்பாடு செய்யும் படியும் மத்திய கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

மத்திய கல்வி அமைச்சுச் செயலாளர் ஆசிரியர் கலாசாலை களின் ஆணையாளருக்கு மேற்கண்ட பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் செல்விமலர் சின்னையா பதவியில் இருந்து வெளியேறும்போது அலுவலகத் திறப்பைப் புதிய அதிபரிடம் கையளிக்காமை தொடர்பாகக் கடந்த மூன்று மாதங்களாக கலாசாலையின் நிர்வாகச் செயற்பாடுகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருந்தன.

இந்நிலையில் நிர்வாகச் செயற்பாடுகள் திறம்பட இயங்குவதற்கு கல்வித்துறைசார் தரப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கலாசாலையின் விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் இணைந்து வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியின் 19 ஆவது ஆண்டு விளையாட்டுவிழா இன்று ஞாயிறு பிற்பகல் ஒரு மணிக்கு கல்வியங்காடு இ.த.க. பாடசாலை முன்றிலில் ஆசிரியர் சியாமளாதேவி சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். சிறுவர் பாதுகாப்பு நிதியதிட்ட அலுவலர் எஸ்.சுரேந்திரன் கலந்துகொள்வார். (ஓ-204)

### டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன்

# மாணவர்களுடன் இணைந்து பொலிஸார் நேற்று யாழ்.நகரில் பேரணி, சிரமதானம்

யாழ்.மாவட்டத்தில் பரவிவரும் உயிர் கொல்லி நோயான டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ். நகரில் சிரமதானப் பணிகளை மாணவர்கள் மற்றும் சுகாதாரத்தொண்டர்களுடன் இணைந்து பொலிஸார் நேற்று ஆரம்பித்தனர்.

யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவ தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானப் பணிகளில் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து பொலிஸார் 500 பேர் இப்பணிகளில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியூடாக டெங்கு நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் ஊர்வலமாகச்சென்றனர். ஒலிபெருக்கி மூலமும் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் வீதியோரங்களிலும் டெங்கு விழிப்புணர்வுக் கட்அவுட்டுகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் மானிப்பாய், சுன்னாகம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, கொடிகாமம், கோப்பாய் ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-16)


## ஆள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் லொச் ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யும் பணியாளர்கள் தேவை.

தொடர்பு: 072 9454231


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

ஞானவைரவர் கோயிலடி, உரும்பிராய் தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வரத்தினக்குருக்கள் வைரவநாதக்குருக்கள் என்பவரது தேசிய அடையாள அட்டை (581133898V) லைசன்ஸ், இலங்கை வங்கி புத்தகம், தீறப்புக் கோர்வை என்பன அடங்கிய பை 19.07.2010 அன்று சுன்னாகத்திற்கும் அளவெட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

T.P.: 0778175914

## கடை வாடகைக்கு

No. 186, கஸ்தூரியார் வீதியில் 3 கடை வாடகைக் குண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு: 0776156051, 0774927036

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பிறந்து வளர்ந்து சட்டம் படித்து பிரபல தொழிலதிபராக லண்டனில் வசிக்கும் 30 வயதுடைய மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் மணப்பெண் தேவைப்படுகின்றது.

இவர் அவிட்ட நட்சத்திரம், 7 இல் செவ்வாய், 120 பாவமும் ஆறு (6) அடி உயரமும், நல்ல தோற்றமும் உடையவர். மணப்பெண் அழகாகவும் படித்தவராகவும் ஆங்கிலம் நன்கு பேசக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

விளம்பர இல. 4048,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

பெ.எ.கென்றி என்பவருடைய மோட்டார் சைக்கிள் லைசென்ஸ், விசேட அடையாள அட்டை, பெற்றோலியக் கூட்டுத்தாபன அடையாள அட்டை என்பன 23.07.2010 நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கும் நீர்வேலி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0775144700, 021 222 9989 தொடர்புகொள்ளவும்.

## வீடு விற்பனைக்கு

509, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் 2¼ பரப்பு வீட்டுடன் காணி விற்பனைக்கு உள்ளது. தட்டா தெரு சந்தியிலிருந்து 50 m உள்ளே.

தொடர்பு: 0772058105, 024 2223005, 0771554641

## தவறிவிட்டது

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் குகதாசன் விக்னராஜா என்பரது மோட்டார் சைக்கிளின் வாகன இலக்க பின் தகடு இல. NPHL 1159 (மஞ்சள் நிறம்) 23.07.2010 அன்று கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் உரியவரிடம் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
வீடு: குகதாசன் விக்னராஜா,
மணியாரம்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே. 0718562031, 021 222 2278

அலுவலகம்: குகதாசன் விக்னராஜா
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் அலுவலகம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## ஐயாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி



எரிக்கணேஷ் ஐயா அவர்களின் மறைவுகுறித்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மூர்த்தி விளம்பர சேவை,
114/19, நாவலர் வீதி
(தேவி அச்சக ஒழுங்கை), யாழ்ப்பாணம்.




## WANTED WATERFRONT / BEACH LAND in areas like MANNAR or JAFFNA

(under developed areas) ANY SIZE, up to 100 acres
Please E-MAIL details to: SamSriLanka@Gmail.com or FAX to: (011) 273-11-77 or POST to: Mr. Sam, 65a Hotel Road, Mount Lavinia or TELEPHONE: 0773-629-111

**also SEA VIEW FLAT FOR SALE**

3 bedrooms, 2 bathrooms, no tax for foreigners, on 4th (top) floor of very nice building with lift, 24 hour security, roof top party area, excellent views of the beach and sea, modern design, only 15 minutes to either Colombo city centre or Mount Lavinia Beach, very clean title. Unfurnished 8 Mill. Furnished 8.8 Mill. View on internet at http://www.SuperSriLanka.com/flat or contact Mr. Sam at the contact details shown above.

FLEX Graphic

## விற்பனைக்கு

சுன்னாகம் ஜெட் மோட்டோஸ்க்கு அருகாமையில் கே.கே.எஸ் வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 011-2365822

## கற்பக விநாயகர் வர்த்தக நிலையம்

புதிய பழைய உரப்பை வகைகள், சாக்குப் படங்கு வகைகள், பித்தளை, அலுமினியம், இரும்பு மற்றும் சகல போத்தல் வகைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையும், கொள்முதலும் செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட கழிவும் உண்டு.

தொடர்பு: 3/6, கண்டி வீதி,
கரடிப் போக்குச் சந்தி, கிளிநொச்சி.
T.P. 0773877075

## உடனடி வேலை வாய்ப்பு

நெல்லியடிப் பகுதியில் கட்டட நிர்மாணத்துறைக்கு பின்வருவோர் தேவை.

1. தொழில்நுட்ப அலுவலர் (Building Supervisor)
2. Labour Contractor.

Tel: 0777876805

## தேவை

பாவித்த ROBIN 20 வாட்டர்ப்பம் தேவை.

தொடர்பு: 0712962798

## வாகனம் வாடகைக்கு

TATA dimo பட்டா நாள் அல்லது மாத வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 021 222 6496

## நியு விசன் ஒப்பிரிக்கல்

மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர் ஆடித்தள்ளுபடி ரூபா 6000 பெறுமதியான கண்ணாடி ரூபா 2500, 4000 பெறுமதியான கண்ணாடி ரூபா 2000 அனைவருக்கும் வழங்கப்படும்.

இல. 17, பலாலி வீதி, அப்பலோ வைத்தியசாலை முன்பாக, யாழ்ப்பாணம்.
T.P. 0772395775, 021 222 9987

## அறிவித்தல்

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மயிலிட்டித்துறை முருகன் மற்றும் அம்மன் ஆலயத்துக்கு நாளை (26.07.2010) திங்கட்கிழமை மக்கள் செல்வதற்கு பாதுகாப்புத் தரப்பினர் வழங்கிய அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மீள அங்கு செல்லும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இரு ஆலய பரிபாலன சபையினர்.

## தேவை

சேவிஸ் சென்ரருக்கு மெக்கானிக் உடன் தேவை.
அணுகவேண்டிய இடம்
கீறோ சேவிஸ் சென்ரர், சுன்னாகம்.
T.P. 0776313655

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

குருநகர், ஜூலை 25

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (1-51)

## செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயத்தில் விசேட கல்வி அலகினால் நடத்தப்படும் விசேட கல்விச் செயலமர்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு மருதனார் மடம் விசேட கல்வி அலகில் நடைபெறவுள்ளது. இதில் குறித்த பாடசாலைகளில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-38)

## காணி விற்பனைக்கு

தாவடி பத்திரகாளி அம்மன் கோயில் அருகில் நல்ல சூழலில் சகல வசதிகளும் கொண்ட 3½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777652012

## காணி விற்பனைக்கு

பலாலி றோட், கோண்டாவில் சந்தியில் மேல் வீடு விற்பனைக்குண்டு. 3½ பரப்புக் காணி வாகனத்தரிப்பிடம் உட்பட சகல வசதியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

T.P. 0776039578, 0770278923

## விற்பனைக்கு

WPHA 9xxx இலக்கத்தைக் கொண்ட மிக நல்ல நிலையிலுள்ள Toyota டீசல் (KR 41, NOAH) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0774955756, 0778689666

## தேவை

UK பல்கலைக்கழகங்களில்/ கல்லூரிகளின் உயர்கல்வியை தொடர வாய்ப்பளிக்கும் பொறியியல் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு யாழ்நகரில் Student Counsellor தேவை. சுயவிபரக் கோவையை மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும்.

Studtuk@hotmail.com,
T.P: 0774909824

## தேவை

24 Hr மருத்துவ தாதியர் சேவையுடன், Col-06 வயோதிபர், நோயாளர் பராமரிப்பு நிலையத்தில் சேவை பெற விரும்பின் தொடர்பு கொள்க.

0718434550
0112513562

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 10 ★ 08 ★ 1928



உதிர்வு 21 ★ 07 ★ 2005

### திருமதி முருகேசு மீனாட்சி
(கரம்பன் மேற்கு)

ஐயிரண்டு திங்கள் அங்கமெல்லாம் நொந்து
கண்ணிரெண்டும் மூடாமல் பத்திரமாய் காத்து
அந்திபகல் அருகிருந்து அருமக்களாய் வளர்த்த தாயே!
பாசத்தின் பனித்துளிகள் காயுமுன்னே ஆல்ஒன்று சரிந்ததே,
அமைதியாய் ஒளிபரப்பி அணைந்துவிட்ட அகல்விளக்கே
மீளாத் துயில்கொண்டு வருடம் ஐந்தானாலும்
உங்கள் வண்ணமுகம் மறையுமா?
காலம் நீண்டு கொண்டு சென்றிடினும்
உலகமெனும் மாயையிலே உங்களை மறப்போமா
கன்னங்களில் உவர் நீர் வழிய
உதடுகள் உச்சரிக்க மறுக்கின்றதே
நிலையில்லா வாழ்வினிலே நீங்கா நினைவுகளைத் தந்து
நிலையான வாழ்வு தேடிச் சென்றாயம்மா
நீங்கள் எங்கு சென்றாலும் எங்களுக்கு அணையாத தீபமாக
இருந்து வழிகாட்டுவாய் - மறுபிறப்பெடுத்தாலும்
மீண்டும் எங்களிடம் வாரும் அம்மா.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
பற்குணராஜா அம்பிகாதேவி (மகள்).
இல. 134, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

(100855)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசதுரை சரஸ்வதி



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை சரஸ்வதி 20.07.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்துப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் ஆறுமுகம் இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பூமணி (பட்டம்மா), முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடராசா, பவளம் ஆகியோரின் மைத்துனியும் சீராளராசா, செல்வரத்தினம் (கமலா), ஆனந்தராசா, இந்திராணி, இராசவேலு, செல்வராணி, புஸ்பராணி, யோகராணி (விஜயா), செல்வக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜினிதேவி, மோகனதாஸ், சாந்தகுமாரி, மகேந்திரராசா, குமுதினி, பாலேந்திரன், வேலழகன், நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிக்குமார், ஜெயக்குமார், மாலினி, யதுசன், யதுசியா, உசாந்தினி, உமாலினி, உசாந்தன், வினித், விதுஷா, தர்சன், கேசன், ஈழவேந்தினி, தமிழாயினி, குயிலினி, சந்தியா, சாரங்கன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (100944) தகவல்:
தொ.பே. 0779223173 இ.ஆனந்தராசா (மகன்).

### சிவத்திரு கணபதிப்பிள்ளை திருஞானசுந்தரம்
(ஓய்வுபெற்ற பிரதம தொழில்நுட்பவியலாளர், இலங்கை மின்சார சபை)

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் அமரர் சிவத்திரு கணபதிப்பிள்ளை உபாத்தியார் (யா/சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை) அவர்களின் சிரேஷ்ட புதல்வன் சிவத்திரு திருஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற பிரதம தொழில்நுட்பவியலாளர், இலங்கை மின்சார சபை) கடந்த (21.07.2010) புதன்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவத்திரு கணபதிப்பிள்ளை உபாத்தியார் - பாக்கியம்மா தம்பதியினரின் மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிவனேஸ்வரி, புவனேஸ்வரி, சிவனேஸ்வரன் (ராசு), சிறீஸ்வரன், ரங்கேஸ்வரன் ஆகியோரின் தந்தையாரும் மகேந்திரராஜா, சிறீதரன், விஜயலட்சுமி, யசோதா, வடிவாம்பிகை ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் சகோதரரும் கமலாம்பிகையின் மைத்துனரும் சண்முகநாதனின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2010) திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவத்திரு அழகு ஜெகதீஸ்வரதேசிகர்
அல்வாய். (சி/569155) (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உள்ளதைச் சொன்னால் துள்ளிக் குதிக்கலாமா.......?

இலங்கை அபிவிருத்தி அடைய வேண்டுமெனில், முதலில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் தேவை. நல்லிணக்கத்தின் மூலமே சமாதானத்தை உருவாக்கலாம். சமாதானம் முழு அளவில், செயலளவில் மலர்ந்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியமாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமையும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் உலகவங்கியின் தெற்காசியாவுக்கான உபதலைவர் இசபெல் குரேரோ அம்மையார். நிலையான சமாதானத்தைக் கொண்டுவர அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எடுத்துச் சொன்னேன் என்றும் அவர் கூறினார்.

இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்புமுன்னர் இசபெல் அம்மையார் இவ்விதம் கருத்து வெளிப்படுத்தினார்.

மூன்று தசாப்தகால யுத்தம் முடிவடைந்த சூழலில், இலங்கை நடுத்தர வருமானம் உள்ள நாடாக மாறும் நிலை தோன்றி உள்ளதாகவும் அதனைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும் என்றும் இசபெல் சுட்டிக்காட்டி உள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து தலைநகர் கொழும்பு வந்துபோகும் வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், ராஜதந்திரிகள், புத்திஜீவிகள், உயர் அதிகாரிகள் என்று பலதரப்பினரும் நல்லிணக்கம் - சமாதானம் - அபிவிருத்தி என்ற சமன்பாட்டையே மறைமுகமாகப் புத்திமதியாகத் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் அரசின் தலைமைக்கும் அதனைச் சார்ந்தவர்களுக்கும் அந்தச் சமன்பாடு உடன்பாடாக இருப்பதாகப் புலப்படவில்லை.

அபிவிருத்தி அதனூடு சமாதானம் என்ற சித்தாந்தத்தில் இருந்து அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள விரும்புவதாகவும் இல்லை.

முதலில் அபிவிருத்தியை உண்டாக்கினால் அதிலிருந்து சமாதானம் தானாக உருவாகும் என்ற வக்கிர சிந்தனையிலேயே அரசு, அரசின் நிர்வாகம், அரசியல்வாதிகள், அவர்களை அடிவருடி நிற்கும் அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து மிகப்பலமாக ஒத்தூதுகிறார்கள்.

ஒரு வழியில் அபிவிருத்தி என்ற பெயரில் உலக நாடுகளிடம் இருந்து உதவிகளையும் கடன்களையும் பெற்று, இந்நாட்டின் மக்களைத் தொடர்ந்து கடன்காரர்களாக வைத்திருக்க முயல்கிறார்கள்.

இதற்கு மேலதிகமாக, வடக்கைக் காட்டி, அதன் மீள்கட்டுமாணம் மற்றும் நவீனமயமாக்கல், போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சொந்தக் காலில் நிற்கவைத்தல் என்ற மணமூட்டிய திட்டங்களையும் அவற்றுக்கான கருத்துக்களையும் முன்வைத்துச் செயற்படுகிறார்கள்.

அவர்கள் எதிர்வு கூறுவது போன்று வன்னியில் எதுவும் திருப்திகரமாகவும் பூரணமாகவும் இன்னும் மேலெழும்புவதாக இல்லை. இதனைக் கண்டறிந்தும் உய்த்துணர்ந்தும் வெளிநாட்டு ராஜதந்திரிகள், நிபுணர்கள், உயர் அதிகாரிகள், நல்லிணக்கம் - சமாதானம் - அபிவிருத்தி என்று வலியுறுத்துகின்றனர், அதனால் ஆளுந்தரப்புக்கு இது ஒவ்வாமை ஆகிவிடுவதால் வெகுண்டு எழுகின்றார்கள்.

மேலைநாட்டு ராஜதந்திரிகளும், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் முக்கிய விடயங்கள் தொடர் பாக - நாட்டின் பிரச்சினைகள் தொடர்பாக - கருத்து வெளியிட்டு உள்நாட்டு விடயங்களில் தலையிடுகிறார்கள் என்று கண்டிக்கிறார்கள்.

தமக்குச் சார்பற்றதாக, எதிரானதாகத் தெரிவிக்கப்படும் கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்து, நல்லது - கெட்டதைப் பகுத்துணர்ந்து பார்க்க விருப்பம் இல்லாதவர்களாக, தனக்கு எட்டாத முந்திரிகைப் பழத்தைப் பார்த்து சீச்சீ இந்தப்பழம் புளிக்கும் என்று நரி கூறியதாகப் பாலர் பாடப்புத்தகங்களில் உள்ள கதைகள் போன்று கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

அந்த வகையில், உலக வங்கியின் தெற்காசியாவுக்கான உபதலைவர் இசபெல் குரேரோ அம்மையாரின் கருத்தும் இந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு, தெற்குத் தலைவர்களுக்கு கசக்கவே செய்யும்.

இங்கு நான்கு வருடங்கள் அமெரிக்காவின் தூதராகப் பணியாற்றி, இப்போது தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவி அமைச்சராகப் பணிபுரியும் றொபேர்ட் ஓ பிளேக் கடந்தவாரம் இலங்கை வந்திருந்த வேளை தெரிவித்த கருத்தை -

அரசாங்கத்தினர் பக்கம் சார்ந்து நிற்கும் பிரபல இடதுசாரித் தலைவர் வாசுதேவ நாணயக்காரா கடும் தொனியில் சாடியிருக்கிறார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை, ஜனநாயகம், ஊடக சுதந்திரம் உட்பட்ட முக்கிய விடயங்கள் குறித்துக் கருத்துக் கூறும் அதிகாரம் பிளேக்குக்கு இல்லை என்று - வாசுதேவ கண்டித்துள்ளார்.

வெளிநாடு ஒன்றின் முக்கியமான பதவியில் உள்ள ஒருவர் எங்கள் நாடுகுறித்துக் கருத்துக் கூறமுடியாது என்பது ஏற்புடையதல்ல. அவ்வாறு சொல்வது ஜனநாயகத்தின் பிரதான அடிப்படை அம்சங்களில் ஒன்றான கருத்துச் சுதந்திரத்தை மறுப்பதாகும். அவர் சொல்வது தவறு என்றால் அதனைச் சுட்டிக்காட்டலாமே தவிர, எங்கள் நாடு குறித்துக் கருத்துக் கூறமுடியாது என்று நிலைநாட்ட முயல்வது முற்றிலும் பொருத்த மற்றது.

மொத்தத்தில் அதிகாரத்தில் உள்ள எல்லோருமே, தாம் சொல்வதும், செய்வதும் சரியானவையே, அவற்றில் எவரும் குறை குற்றம் கண்டுபிடிக்கக் கூடாது என்று அடம்பிடிப்பது ஒரு வகையான சர்வாதிகாரப் போக்குடைத்தே!

# யோகராஜன், நிசாம் காரியப்பர் வெளியிட்ட அனைத்துக்கட்சி அறிக்கையை ஏற்க முடியாது

## அமைச்சர் திஸ்ஸ விதாரண இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 25

கடந்த 20 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையைத் தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என அதன் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இந்த அறிக்கையை யோகராஜன் எம்.பி. நாடாளுமன்றில் சமர்ப்பித்த வேளை வாய்மூடி மௌனம் காத்த அமைச்சர் திஸ்ஸ விதாரண தற்போது ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன், முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச்செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் இருவராலும் முன்வைக்கப்பட்ட இந்த அறிக்கையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஒப்பமிட வில்லையென குறிப்பிட்ட அமைச்சர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் அபிப்பிராயங்களையும் உள் வாங்கி இதில் உள்ளடக்கும் பொருட்டு அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த அறிக்கை அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஆவணமாகக் கருதப்பட வேண்டுமாயின் இதில் ஜனாதிபதியின் அபிப்பிராயங்களையும் உள்வாங்கப்பட்டிருத்தல் அவசியமாகும். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜனால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இது இடம்பெறவில்லை. ஆகவே இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அமைச்சர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார்.

இந்த அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் அமைக்கப்பட்டதுடன் சென்ற ஆண்டுவரை கூடி ஆலோசனைகளைப் பெற்றது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் பங்குகொள்ளாமை கவனிக்கத்தக்கது. (ஒ-க)

## தென்மராட்சியில் நாளை வேல் பவனி

யாழ்ப்பாணம், ஜூலை25

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய பழனி வேல் பவனி நாளை திங்கட்கிழமை பகல் ஒரு மணிக்கு இடம்பெறும்.

வேல் பவனியில் ஆனைக்கோட்டை ரூபன் குழுவினரின் சீனடி, சிலம்படி, தீப்பந்தம் சுற்றுதல் நிகழ்வும் வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து அபிவிருத்தி குழுவினரின் கிராமிய நடனங்கள், தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள ஆலயங்களின் பஜனைக் குழுக்களின் பஜனைகள் ஆகியவை இடம்பெறும்.

ஆலயத்திலிருந்து புறப்பட்டு டச்சு வீதி, இராமலிங்கம் வீதி,கண்டி வீதி, தபாற்கந்தோர் வீதி, செருக்கல் பிள்ளையார் கோயில் வீதி, கண்டுவில் ஒழுங்கை காளி கோவில் ஒழுங்கை ஆகியவற்றின் ஊடாக பவனி செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## நல்லூர் சிவன் கோயிலில் இன்று திருமுறை விழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

அகில இலங்கைத் திருமுறை மன்றம் முன்னெடுக்கும் திருமுறைப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் பக்திபூர்வமாக ஆரம்பமாக உள்ளது.

காலை 7 மணியளவில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், நாயன்மார் நால்வர் பன்னிரு திருமுறைச் சுவடிகளுக்கு விசேட சோடசோபசார பூசை ஆகியவை நடைபெற்று மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பம்நாயகம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுன்கலைத்துறை இசைத்துறைத் தலைவர் நயினை நா.வி.மு.நவரெத்தினம் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி திருமுறை இசை வல்லாளர்கள் வைத்திய நிபுணர் பேராணந்தராஜாவின் புதல்வன் செல்வன் டினேஷன்மற்றும் சங்கீதபூஷணம், பண்ணிசைமணி விஷ்வநாதன் சிவஞானசேகர் ஆகியோரை பொன்னாடை போர்த்தி கௌரவிப்பார்.

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம், யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆகியவற்றில் தேவாரப்பண்ணிசை வகுப்பில் பங்குபற்றிப் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கும் சான்றிதழ், பரிசில்கள் வழங்கப்படும்.

மன்றப் பண்ணிசை வகுப்பு மாணவர்கள், திருமுறை இசைவல்லாளர் செல்வன் டினேஷன், பண்ணிசை மணி விஷ்வநாதன் சிவஞானசேகர் ஆகியோரின் பண்ணிசைக் கச்சேரி நடைபெற்று நிறைவில் நிகேதர பூசை அன்ன தானம் வழங்கப்படுமென மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவிக்கின்றார். (1)

## மருந்துக்கலவையாளர், பொதுச்சுகாதார பரிசோதகர் பயிற்சிநெறி ஓக.2 இல்

யாழ்ப்பாணம், ஜூலை25

வடமாகாண சுகாதார அமைச்சினால் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மருந்து கலவையாளர் பயிற்சி நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பயிற்சி நிலையத்தில் தங்களது பெயர் விவரங்களை பதிவு செய்தவர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் ஆரம்ப மாகவுள்ளது. பதிவுசெய்த அனைத்து மாணவர்களும் அன்றைய நாளில் சமுகமளிக்குமாறு சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிவராணி அறிவித்துள்ளார். (ஒ)

## ஊனமுற்றோர் புனர்வாழ்வு குறித்து கலேவெலவில் இன்றுமுதல் வதிவிடப்பயிற்சி

நாவற்குழி, ஜூலை 25

வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த சமூகசேவை உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு ஊனமுற்றோர் புனர்வாழ்வு தொடர்பான வதிவிடப் பயிற்சிநெறி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கலேவெல மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரியில் எதிர்வரும் 29ஆம் திகதி வரை இப்பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

முதலாம் கட்டப்பயிற்சி நெறி இவ்வருடம் மே மாதத்தில் வவுனியா எல்லப்பர் மருதங்குளத்திலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் 6 நாள்கள் நடைபெற்றது. இரண்டாம் கட்டப் பயிற்சியே தற்போது ஆரம்பமாகின்றது.

இயல்பு நிலை மீளத்திரும்பியதைத் தொடர்ந்து பல்வேறு காரணங்களால் ஊனமுற்றோரின் புனர்வாழ்வு தொடர்பான நடவடிக்கைகளைச் சமூகசேவைகள் அமைச்சு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. (ஒ-1-121)

## திறந்த பல்கலைக்கழக மாணவருக்கு நூல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விஞ்ஞானமாணிக் கற்கை நெறிக்காகத் தம்மைப்பதிவு செய்த மாணவர்களுக்கான பாடநெறிக்குரிய நூல்கள் இன்று ஞாயிறு காலை 9 மணியிலிருந்து வழங்கப்படவுள்ளமையால் அனைத்து மாணவர்களையும் சமுகந்தருமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (1)

## நயினாதீவில் புதனன்று 'பல் கலாசார நிகழ்வு'

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையில் 'பல் கலாசார நிகழ்வு' நயினாதீவு மேகலை அரங்கில் எதிர் வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு செயலாளர் திருமதி எம்.எஸ். விக்கிரமசிங்கவும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் கலந்து கொள்வர்.

இந்தக் கலாசார நிகழ்வில் நயினாதீவு மகாவித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனம், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினரின் கலாசார நடனம், வவுனியா தெற்கு பிரதேசத்தின் (சிங்கள நிகழ்வுகள்) கிராமிய நடனம் மற்றும் சாஸ்திரிய நடனம், நயினாதீவு மலையின் ஐயனார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, ஹிமாலயா நடனக்குழு வினரின் ஓம் சிவாய தாண்டவ நடனம், நயினாதீவு இஸ்லாமிய சனசமூக நிலையத்தினரின் இஸ்லாமியக் கலாசார நடனம், புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய இளைஞர் கழகத்தின் 'மனிதம் காப்போம்' நாடகம், யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கலைஞர்களின் இசை நிகழ்வு ஆகியவை இடம்பெறும். (ஒ-323-111)

## ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையால் கிராமப்புறப் பாடசாலைகள் பெரும் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 25

இலங்கையின் நகரப்பாடசாலைகளில் மேலதிகமாக ஆங்கில ஆசிரியர்கள் உள்ள போதிலும் கிராமப்புற பாடசாலைகளில் இவர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரியவருகின்றது.

கிராமப்புற பாடசாலைகளில் 3,468 ஆங்கில ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதோடு 866 பாடசாலை களில் ஒரு ஆங்கில ஆசிரியர் கூட இல்லாதநிலை காணப் படுகின்றது. ஆனால் நகரப்பாட சாலைகளில் 1,196 ஆங்கில ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா, வடமத்தி ஆகிய மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலைகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நாட்டில் தற்போது 9,866 அரசாங்கப் பாடசாலைகளில் 21,453 ஆங்கில ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். கிராமப்புறப் பாடசாலைகளுக்கு நியமனம் பெறும் ஆங்கில ஆசிரியர்கள் அரசியல் செல்வாக்கு, சொந்தச் செல்வாக்கு ஆகியவற்றின் உதவியுடன் நகரப்பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர். இதனால் பாதிக்கப்படுவது கிராமப்புற பாடசாலைகளே.

ஒரு முறையான ஆசிரிய இடமாற்றத் திட்டத்தை அமுல்படுத்துவதன் [illegible] இக்குறைபாடுகளை களையலாம் என்பதே கல்விமான்களின் கருத்தாகும். (க)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 10 | 26.07.2010 திங்கட்கிழமை |
| திதி | : பூரணை மு.ப. 07.25 வரை |
| நட்சத்திரம் | : உத்தராடம் மு.ப. 10.01 வரை |
| [illegible] | : 12.02 - 01.32 |
| ராகுகாலம் | : 07.32 - 09.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவ தாவது:-

நேற்றுமுன்தினம் இரவு ஒரே சிறைக் கூடத்துக்குள் தமிழ்க் கைதிகளுடன் ஏனைய கைதிகளும் ஒன்றாக இருக்க அனுமதிக்கப் பட்டனர். இது தொடர்பாக தமிழ்க் கைதிகள் நேற்று சிறைச்சாலை அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தனர்.

இவ்வாறு முறைப்பாடு செய்தததால் ஆத்திரம்கொண்ட சக கைதிகளும் சிறைச்சாலை காவலர்களும் சேர்ந்து நேற்றுக்காலை கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்த மூன்று தமிழ்க் கைதிகளையும் தாக்கினராம்.

இந்தச் சம்பவம் குறித்து கைதிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். பிரதம சிறைச்சாலை அதிகாரியுடன் தொடர்பு கொண்ட விநாயகமூர்த்தி தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை இது தொடர்பாக விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்படும்என்று உறுதியளிக்கப் பட்டுள்ளது. (ஒ-1)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபை அமைச்சுக்களின் செய லாளர்களில் பெரும்பாலானவர்கள் அலு வலக இடமாற்றத்துக்கு ஆட்சேபம் தெரிவித்த காரணத்தால் இந்தச் செயற்பாடு பிற்போடப்பட்டுள்ளதாக மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்குக்கான மாகாண சபை அலுவலகங்கள் வடக்கிலேயே - கிளிநொச்சியில் இயங்குவதன் மூலம் மக்களுக்கு முழுமையான சேவையை வழங்கமுடியும் என பலதரப்பினரும் வலியுறுத்தி வந்ததை அடுத்தே கிளிநொச்சியில் மாகாண அமைச்சு அலுவலகங்களைச் செயற்படுத்த மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நடவடிக்கை எடுத்திருந்தார். அதற்கான ஆரம்ப பணிகளையும் அவர் முன்னெடுத்திருந்தார். இந்நிலையில்; பெரும்பாலான அமைச்சுக்களின் செயலாளர்கள் உடனடியாக கிளிநொச்சிக்கு தமது அமைச்சுக்களை மாற்றுவதில் உள்ள சிக்கல்கள், சிரமங்கள் குறித்து ஆளுநருக்கு எடுத்துக் கூறி யதை அடுத்து இடமாற்றம் செய்யும் செயற்பாடுகளை அடுத்த ஜன வரிக்குப் பிற்போட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சில அமைச்சுக்களின் செயலாளர்கள் தமது அமைச்சின் உப -அலுவலகங்களை கிளிநொச்சியில் திறந்து செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஒ-1)


**வாகனம் வாடகைக்கு உண்டு**

கன்டர் வாகனம் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0772106155
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**அட்சயா**
**அழகுக்கலைப் பயிற்சியகம்**

★ பேசியல் - 10 விதமானவை ★ சாறிவேக் - 5
★ மேக்கப் - 7 விதமானவை ★ ஏளவுஸ் கட்டிங் - 6
★ கொண்டைல் - 30 விதமானவை ★ தலைமுடி அயன் பண்ணுதல்
★ ஐசிங் - 30 விதமானவை ★ தலை முடி சுருட்டுதல்

மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. உடன் பதிவினை மேற்கொள்ளவும்.
றிச் கேக்: 30/= மட்டுமே
461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி. (அரவிந் ஸ்ருடியோவுக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

**Rotaract Club of Jaffna**

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகத்தினரால் நடத்தப்படும் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்க்கை பரீட்சை வழிகாட்டலுடன்

**மாபெரும் இலவசக் கருத்தரங்கு**

A/L 2010
இடம்: புதிய உயர் கல்லூரி மண்டபம் (ஆரியகுளம்)

**வர்த்தகப்பிரிவு**

| பொருளியல்: | கணக்கீடு: |
|---|---|
| திரு.S.S.சிறி (DMI) | திரு.D.Sam (DMI) |
| 27.07.2010, 28.07.2010 | 29.07.2010, 30.07.2010 |
| காலை 9 மணி | காலை 9மணி |

எஸ்.எஸ். ஆனந்தன் (தமிழ்), செல்வரட்ணம் (அரசியல் விஞ்ஞானம்) ஆகியோரின் கருத்தரங்கு கையேடுகள் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான அனுசரணையாளர்கள்:
கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தின் ஓர் கல்விச் சாம்ராஜ்யம் IIS CITY CAMPUS
NSB National Savings Bank Hospital Road, Jaffna.


## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திர மான விசாரணையை ஐ.நா. மேற்கொள்ள வேண்டும் என்று கோரியே நள்ளிரவுக் கண்காணிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

மெழுகுதிரிகள், பதாகைகள் தாங்கியவாறு நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

சமாதானத்துக்கான யாத்திரை நிகழ் வின் ஓர் அங்கமாக இடம்பெற்ற "நள்ளிரவுக் கண்காணிப்பு" நிகழ்வு அடுத்த மாதம் 6ஆம் திகதி ஜெனிவாவில் ஐ.நா. அலுவல கத்தின் முன்பாக நடைபெறும்.

கடந்த வருடம் வன்னியில் இடம் பெற்ற போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றப் பணிகளைப் பார்வையிட சுதந்திரமான கண்காணிப் பாளர்களை இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வலி யுறுத்தியே இந்த நிகழ்வு ஏற் பாடாகியுள் ளது என்று தமிழர் அமைப்புத் தெரிவித் துள்ளது. (அ-1)

## கறுப்பு ஜூலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகங்களிலும் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன.

இந்தச் சுவரொட்டிகளைப் பார்வையிட்ட பலரும் குறிப்பிட்ட பெயர் பிரபாகரனின் மனைவி எனத்தவறாகப் புரிந்து கொண்டனராம். ஏனென்றால் துவாரகா என்பது பிரபாகரனின் மகளின் பெயராகும்.

ஆனால் இது இன்னுமொரு துவாரகா என்பது பின்னர் தெரியவந்தது. பேராதனைப் பல்கலைக்கழக மாணவியான இவர் புலிகளின் அனுதாபி எனத்தெரிவிக்கப்பட்டு, கைது செய்து காவலில் வைக்கப் பட்டுள்ளார். புலிகளால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியொன்றில் பங்குபற்றியதோடு வெற்றிபெற்றமைக்கான சான்றிதழும் வைத்திருந்ததன் காரணமாகவே இவர் கைது செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ஒ-க)

## மீள்குடியமர்வுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் இந்தியன் வங்கி இரு கிளை களைத் திறக்கவிருக்கிறது.

இந்தியா வழங்கவிருக்கும் நிதி உதவி மக்களுக்குக் கிடைக்க வசதியாக யாழ்ப் பாணத்தில் கிளையைத் திறக்க முடிவு செய்துள்ளோம். கண்டி நல்ல வர்த்தக மையமாக இருப்பதால் அங்கும் எமது வங்கியின் கிளை யைத் திறக்கவுள்ளோம் - என்று அவர் கூறினார்.

தற்சமயம் இந்தியன் வங்கியின் கிளை கொழும்பில் மட்டும் இயங்கிவருவது குறிப் பிடத்தக்கது. (அ-1)


**வேலை ஆள்கள் தேவை**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இருக்கும் பிரபல வியாபார நிலையத்துக்கு கீழ்வரும் பணிகளுக்கு ஆள்கள் தேவை.

1. கணக்குப் பதிவாளர் (ஆண்/பெண்).
2. சிட்டை எழுதுநர் (பில்க்கிளார்க் ஆண்/பெண்).
3. விற்பனையாளர்.

3 வருட அனுபவம் தேவை
தொடர்பு: T.P. 0777768835

**இறைச்சிக் கோழி விற்பனை**

நிறை கூடிய புறொயிலர், கல்போட் என்பன மிக மலிவான விலையில் சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனைசெய்யப்படும்.
தொடர்பு: மலிரி பாம் செவிறரி,
61, சேர்பொன் இராமநாதன் வீதி, கலட்டி. தொ.பே.: 0217912783

**e.com** Computer Learning Center
One Week Training........
ஒரு வார பயிற்சி......
ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்...
Diploma in PC Technician
Free! Software DVD & Tool Kit
Certificate Courses
Internet & E-Mail
e-Typing
O/L மாணவர்களுக்கான ICT மீட்டல் வகுப்புக்கள்
Call: 0217429005
No.95A Temple Road, Nallur, Jaffna
No.95 Thavady South Kokuvil Jaffna

**விற்பனையாகிறது**

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு
ந.சந்திரகுமார் அவர்களின்
(மட்டக்களப்பு)
பொது அறிவும் நுண் அறிவும்
(தரம் 4,5) 01.07.2010 அன்று
அச்சிட்டப்பட்ட புத்தம் புதிய
வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது.
**அன்னை புத்தகசாலை**
யாழ்ப்பாணம் 021 222 9881
சாவகச்சேரி 021 227 0003

**இலவசக் கருத்தரங்கு 2010**

**கணக்கீடு**
A.P. பகீரதன் B.B.A. (Fm spl)
திங்கள் முதல் வெள்ளி 7.00 - 10.00 a.m.
பரீட்சை எதிர்பார்ப்பு வினாக்கள்
பல் தேர்வு வினாக்கள் கலந்துரையாடப்படும்
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட பரிசீலனை அதிகாரியான சமந்தாபவர் அண்மையில் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளின் போது வெளிப்பட்ட தகவல்களும், விடுதலைப் புலி ஆதரவாளர்களால் முன்வைக்கப் பட்ட முறைப்பாடுகளின் பரிசீலனை மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களும் மேற்படி அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிகிறது.

யுத்தத்தின் பின்னர் அது குறித்து கண்டறிவதற்காக இலங்கை அரசால் நியமனம் செய்யப்பட்ட சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அனுபவங்களை ஆராயும் ஆணைக்குழுவின் செயற் பாடுகள் சம்பந்தமான அமெரிக்காவின் கருத்தும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்றும் தெரியவந்துள்ளது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர், அது ஐ.நா. பொதுச் செயலாளர் பான் - கீ மூனினால் நியமனம் செய்யப்பட்டுள்ள போர்க் குற்றவிசாரணை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-22)

## அரசு சார்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் இலங்கை சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை மக்கள் கட்சி, ஜனநாயக வாத இடது சாரி முன்னணி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகிய ஐந்து இடதுசாரிக் கட்சிகளினதும் கூட்டிணைப்பான சோஷலிஸ மக்கள் முன்னணியே அரசு எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

✱ அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படவேண்டும் மற்றும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்ட 2500 ரூபா சம்பள அதிகரிப்பு விரைந்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டமும் பொதுக் கூட்டமும் நடத்தப்படவுள்ளதாக சோஷலிஸ மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

சோஷலிஸ முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளோடு அவற்றின் தொழிற் சங்கள், வெகுசன அமைப்புகள், கட்சிக் கிளைகள், மகளிர் சங்கங்கள் மற்றும் பல சங்கங்கள், அமைப்புக்கள் இப்போராட்டத்தில் பங்கேற்க உள்ளதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகரான எம்.ஏ. ஸ்ரீவன் தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 12ஆம் திகதியை ஹர்த்தால் தினமாக அனுஷ்டிப்பதுடன் அன்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படவுள்ளதாகவும், பின்னர் இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைமையகத்தில், கட்சி களின் தலைவர்கள் பங்குபற்றும் பொதுக் கூட்டமும் நடத்தப்படவுள்ளதாகவும் எஸ்.ர.ஸ்ரீவன் தெரிவித்தார். (அ-22)


**அரசியல் பாட கருத்தரங்கு**

2010 K.S. இளங்கோ
திங்கள் காலை 9 - 12 a.m.
செவ்வாய் மாலை 2 - 5 p.m
DMI ஸ்ரான்லி வீதி, யாழ்.

யாழ்.பல்கலைக்கழக
25வது பொதுப்பட்டமளிப்பு விழாவின்
வீடியோ DVD பிரதிகளை ஒவ்வொரு
SESSION ஆக பெற்றுக்கொள்ளலாம்.
CONVOCATION DVD
விபரங்களுக்கு:
லது டிஜிற்றல் வீடியோ&போட்டோ
கே.கே.எஸ் வீதி, இணுவில் தொ.இல: 021 2227643

**கற்சுமி வெளியீடு**

தரம் 1,2,3,4,5 மாணவர்களுக்குரிய
யூலை - ஓகஸ்ட் மாத இதழ்கள்
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்

**வெளிவந்துவிட்டன**

"உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்"
குறிப்பு: ★ இரண்டாம் தவணைப் பரீட்சைக்கு ஏற்ற வகையிலும் வெளிவருகிறது.
★ இன்று யாழ். நகரப் பகுதியிலும் திங்கள் முதல் சகல இடங்களிலும் பெறலாம்.
**கற்சுமி**
நாவலர் வீதி, யாழ். 0718474325

A/L 3 பாடங்களில் சித்தி உள்ளதா???
உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான
அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியலாளர் ஆகுங்கள்.
**2014 ல் நீங்களும் ஓர் பொறியியலாளர்**
உடனடி அனுமதி
மிக குறைந்த கல்விக்கட்டணம்.
தவணை முறையில் செலுத்தல் வாய்ப்பு
மிகக் குறைந்த அனுமதிகளே உள்ளன.
அனுமதிக்கு முந்துங்கள்.
No donation & no admission fees
SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED
V4 Educational Consultancy(Pvt)Ltd
"Catalyst for your higher studies"
T.P- 0773867257
0775936343
0217200999
Head Office- #7-1/1, W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06,
Branch- #10, Palaly Road, Jaffna.
Web: http://www.v4edu.com
Email: mail@v4edu.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால் நட்சத்திரத் தோற்றத்தில் புதிய கிரகம்



வால் நட்சத்திரத் தோற்றத்துடன் புதிய கிரகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தற்போது சூரியன் அருகே ஒரு புதிய கிரகம் இருப்பது தெரிய வந்துள்ளது. இது வால் நட்சத்திரம் போன்ற தோற்றத்துடன் காணப்படுகிறது.

இதை நாசா விஞ்ஞானிகள் ஹப்பள் ஸ்பேஸ் டெலஸ்கோப் மூலம் கண்டு பிடித்தனர். அதற்கு 'ஒசிரிஸ்' என்ற புனைப்பெயர் சூட்டியுள்ளனர். இது பூமியில் இருந்து 153 ஒளி ஆண்டு தூரத்தில் உள்ளது. ஜுபடர் கிரகத்தைவிட சிறியது. முதன் முதலாகக் கடந்த 1999 ஆம் ஆண்டு இதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். ஆய்வு மேற்கொண்டபோது விண்வெளியில் வீசிய பலத்த காற்றின் போது இந்த கிரகம் சூரியனை சுற்றி வருவது தெரிய வந்தது. இது கடுமையான வெப்பத்தை வெளிப்படுத்த கூடியது. இந்த கிரகத்துக்கு எச்டி 209458 பி என அதிகார பூர்வமாகப் பெயரிடப்பட்டுள்ளது. ★

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்லப்பா குமாரசாமி**
இளைப்பாறிய நிர்வாக சேவை
உத்தியோகத்தர், சாவகச்சேரி.

**திருமதி செல்லமுத்து குமாரசாமி**
(இரத்னா)
இளைப்பாறிய ஆசிரியை
டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

திருமணபந்தத்தில் அறுபது வருடங்கள் நிறைவை 23.05.2010 கொண்டாடிய தம்பதியினரை சகல நலன்பெற்று நலமுடன் வாழ்க என பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

வினாசித்தம்பி வீதி, சாவகச்சேரி. தகவல்: பிள்ளைகள்

# பறவைகள் நீண்ட தூரம் பறக்கும் ரகசியம்



உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள பறவைகள் இனப்பெருக்கத்திற்காகவும் சீதோஷ்ண நிலை காரணமாகவும், ஒவ்வொரு ஆண்டும் இடம் பெயர்கின்றன. இந்த இடப் பெயர்ச்சியின் போது அவை பல ஆயிரம் கி.மீ. தூரத்தைக் கடக்கின்றன. சில பறவைகள் தொடர்ந்து பல மணி நேரம் பறந்து இலக்கை அடைகின்றன.

பல ஆயிரம் கி.மீ., தூரம் தொடர்ந்து பறப்பதற்கான உடல் திறன், இப்பறவைகளுக்கு எப்படி கிடைக்கிறது என்பது, பறவைகள் குறித்த ஆய்வாளர்களின் நீண்டநாள் கேள்வியாக இருந்தது. இந்நிலையில், நீண்டதூரப் பயணம் மேற்கொள்ளும் பறவைகள் சக்திபெற, பெர்ரி பழங்களை அதிகமாக உண்ணுகின்றன என்ற புதிய தகவல் சான்பரான்சிஸ்கோ நகரில் உள்ள அமெரிக்க ரசாயன கழகம் நடத்திய தேசிய கூட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மனிதர்களின் உடல் நலத்திற்கு சத்துக்கள் தரும் பழங்கள், காய்கறிகள் குறித்து நாங்கள் ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ளோம். இடப்பெயர்ச்சி செய்யும் பறவைகளும், அதிக சத்துக் கள் நிறைந்த உணவையே விரும்புகின்றன என்று ரோட்தீவு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வு தலைவர் நவீன்டிராசீரம் கூறியுள்ளார்.

பெர்ரி பழங்களை உண்ணும் 12 பறவைகளை ரோட் தீவு, டின்னி பளாக் தீவுகளில் நவீன்டிராசீரம் மற்றும் அவருடன் பணியாற்றுபவர்கள் சேகரித்தனர். இப்பறவைகள் அட்லாண்டிக் கடல் வழியாக பறக்கும் போது இடையே உள்ள தீவுகளில் இறங்கின. அப்போது பறவைகளின் ஆன்டி ஆக்சிடன்ட்ஸ் அளவு மற்றும் நன்கு பழுத்த நிலையில் உள்ள ஆரோவுட், வின்டர் பெர்ரி, பேபெர்ரி, சோக் பெர்ரி, எல் டர்பெர்ரி ஆகிய பழங்களின் பக் மென்ட்களை ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர்.

பறவைகள் நீண்ட தூரம் பறக்கும் திறன் குறித்து நவீன்டிராசீரம் கூறியதாவது:

மற்ற பெர்ரி பழங்களின் சராசரியை விட ஆரோவுட் பழத்தில் 650 சதவீதத்திற் கும் அதிகமான பக்மென்ட் டும் ஆன்டி ஆக்சிடன்ட்ஸ் 150 சதவீதத்திற்கும் அதிக மாகவும் உள்ளன. இதனால் தான் பறவைகள் ஆரோவுட் பழங்களை அதிகமாக உண் கின்றன. இலையுதிர் காலத் தில் இடப்பெயர்ச்சி செய்யும் சில பறவைகள், தங்கள் எடையைப் போல மூன்று மடங்கு பெர்ரி பழங்களை உண்ணுகின்றன. ஒரு மனிதன் தினசரி 136 கிலோ சாப்பிட்டால் எந்த அளவு சக்தி கிடைக்குமோ அதைவிட இது அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இடப்பெயர்ச்சி செய்யும் சில பறவைகள் கறுப்பு நிறத்திலும், ஆழ்ந்த பக்மென்ட் மற்றும் உயர்வான ஆன்டி ஆக்சிடன்ட் கொண்ட பழங்களை விரும்பு வதை, முன்னதாக விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர். ஆன்டி ஆக்சிடன்ட், நோய் எதிர்ப்பு சக்தியை தருவதுடன், பறவைகள் நீண்ட தூரம் பறப்பதற்கான சக்தியையும், உடல் வெப்பம் அதிகரிக்கும் சக்தியையும் தருகின்றன. இவ்வாறு நவீன்டிராசீரம் கூறியுள்ளார்.

பழங்களை தின்று கொட்டைகளை எச்சங்களாக வெளி யேற்றுவதன் மூலம் பழம் தரும் தாவரங்கள் பல இடங் களில் பரவுகின்றன. இதன் மூலம் சக்தியளிக்கும் பழங் களைத் தரும் பெர்ரி இன மர வகைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் உலகின் பல இடங்களில் அவை பரவ, இடப்பெயர்ச்சி செய்யும் பறவைகள் உதவுகின்றன.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## மனிதனுக்கு என்ன விலை!

தூக்கி யெறிந்த பாத்திரமும்
துருவேறிய உதிரிகளும்
வருமானத்திற் குதவியாகும்.
உருமாறிப் பின்னு மொரு
பொருளாகி விலையாகும்.
வெறும் வளவில் வீசிவிடும்
பொருள் போல நம் வாழ்வும்
புவிதனிலே அற்பமாகும்.
கல்வியொடு செல்வமுற்ற
கனம் பெற்ற மனிதராயினும்,
நல்வாழ்வு சிதைந்த காலை
நயம் பெறுதற்கொன்றுமின்றி
செல்வாக்கும் சொல்வாக்குமிழந்து
செல்லாக்காசாகி எச்சங்கள்கூட
இழிவாகிப் போதல் காண்பீர்!

வே.ஐ.வரதராஜன்.









என்றும் மாறாத இளமையின் இரகசியம்

- பயோட்டின்,
- விட்டமின் E,
- கல்சியம் பென்ரொதினேட் அடங்கும்

Biotin Gold
HAIR, SKIN, NAILS







- பலம் வாய்ந்த ஆரோக்கியமான நகங்களுக்கும்
- கவர்ச்சி மிக்க சருமத்திற்கும் பிரகாசமான பற்களுக்கும்
- ஆரோக்கியமான கேசத்தின் வளர்ச்சிக்கும்
- எலும்புகளை வலிமைப் படுத்தவும்

Aucus pvt. Ltd
81/1, Station Road, Kelaniya, Sri Lanka.
Tel: 0094-11-4627475, 4851814, 4948779
Fax: 4616004 e-mail: axil@wow.lk
வட பிராந்திய ஏக விநியோகஸ்தர்கள்
ABILA Marketing Services
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ மனையின் தோற்ற வரலாறு



'ஹொஸ்பெஸ்' என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்து 'ஹொஸ்பிடல்' என்ற வார்த்தை பிறந்தது. ஹொஸ்பெஸ் என்றால் இலத்தீனில் விருந்தினர் என்று பொருள்.

பண்டைக் காலத்தில் பாபிலோனியா, எகிப்து, இந்தியா, கிரேக்கம் முதலிய நாடுகளில் கோயில்களில் மருத்துவ வசதியும் மருத்துவம் பற்றிய பள்ளிக்கூடங்களும் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. ரோமானியர்கள் சில பொது மருத்துவமனைகளையும், நான்காம் நூற்றாண்டில் சில கிறிஸ்தவத் தேவாலயங்கள் மருத்துவ மனைகளையும் நடத்தியதாகத் தெரியவருகிறது.

ஏழைகளுக்கும் வயதான நோயாளிகளுக்கும் மதத்தை வளர்ப்பதற்காகவும் பல மதத்தினர் ஆங்காங்கே மருத்துவ மனைகளை 11 ஆம், 12 ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கினார்கள். இப்படித் தொடங்கப்பட்ட உலகின் முதல் மருத்துவமனை கி.பி. 1123 ஆம் ஆண்டு லண்டனில் அமைக்கப்பட்டது.

1536 இல் இங்கிலாந்தில் மருத்துவமனைகளை விரிவுபடுத்த அரசு ஏற்பாடு செய்து. அதன் விளைவாக ஆயாக்கள் வசதியுடன் பொதுமக்களுக்கான மருத்துவமனைகள் 18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து முழுவதும் பரவின. அதற்குப் பின்னரே பொதுமக்களுக்கான மருத்துவமனைகள் அமைக்கும் முறையைப் பிற நாடுகள் பின்பற்றின.

ஆரம்ப காலத்தில் மருத்துவமனை என்பது பயணம் செய்வோருக்கும் வியாபாரிகள் போன்றவர்கள் தங்குவதற்கும் சிறிய தகரக் கூடாரம்போல் அமைக்கப்பட்டு ஒரு விடுதிபோல் இயங்கியது. அங்கே தங்கியவர்களுக்கு உடல் நலம் சிறிது குன்றிய போது சில மருந்துகளைக் கொடுத்து, அவர்களைக் குணப்படுத்தி மேலும் சில நாள்கள் தங்கச் செய்தார்கள். போகப்போக இத்தகைய விடுதிகளில் இடம் கிடைக்கவில்லை. அப்படி இடம் இருந்தாலும் நோயாளிகளுடன் பயணிகளாக வந்தவர்கள் தங்க விரும்பவில்லை. எனவே அவர்களுக்குத் தனியே ஒரு தகரக்கொட்டகையைப் போட்டார்கள். நோயில்லாதவர்கள் தங்குவதற்காக உருவான இடத்தை 'ஹோட்டல்' என்று அழைக்க ஆரம்பித்தார்கள். இப்படித்தான் உலகில் மருத்துவமனையும் ஹோட்டலும் ஒரே நேரத்தில் தோன்ற ஆரம்பித்தன.

உலகின் முதல் மனநல மருத்துவமனை வர்ஜீனியாவில் உள்ள வில்லியம்ஸ் பார்க்கில் 1773 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டுவரை மருத்துவமனைகள் சாதாரணமான நோய்களுக்குத்தான் சிகிச்சையளித்தன. லூயிஸ் பாஸ்ரர், ராபர்ட் கோச் ஆகியோரின் புதிய மருத்துவக் கண்டுபிடிப்புகளால் மருத்துவ உலகில் புதிய மாற்றங்கள் தோன்றின. இன்றைய மருத்துவமனை அமைப்பு, நிர்வாக முறைக்குப் ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் ஒரு மூலகாரணம் என்று சொல்லலாம். நர்சுகளை அறிமுகப்படுத்தி அவர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளையும் இவரே கொண்டுவந்தார்.

முதல் உலகப் போரின்போது தான் மருத்துவமனைகளுக்குப் பிரபல்யம் ஏற்பட்டது. மருத்துவமனைகள் பெருமளவில் அமைக்கும் பணி தொடர்ந்தது. அறுவைச் சிகிச்சை முறை 1946 இற்குப் பின்தான் பெரிதும் பின்பற்றப்பட்டது. இன்று காணுமிடங்கள் எல்லாம் மருத்துவமனைகள். அரசின் நிர்வாகத்தில் செயற்படும் இலவச மருத்துவமனைகளுக்குப் போட்டியாகக் கட்டணம் அறவிடும் தனியார் மருத்துவமனைகளும் இன்று பெருமளவில் பெருகியுள்ளன. - எஸ்.ஜெயாசசி, யாழ்ப்பாணம்.




# தாவரம் வளர...

எல்லாத் தாவரங்களும் வளர்வதற்குப் பத்து அம்சங்கள் தேவைப்படுகின்றன. அவற்றில் ஏழு அம்சங்கள் மண்ணில்தான் உள்ளன. அவையாவன - நைற்ரோஜின், பொஸ்பரஸ், பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம், இரும்பு, சல்பர். மற்ற மூன்றும் காற்றிலிருந்து அல்லது நீரிலிருந்து பெறப்படுகின்றன. அவை பிராணவாயு, ஹைரோஜின், காபன். மண்ணில் காணப்படும் பல கனிமங்கள் தாவரங்கள் வளர்வதற்கு உதவுகின்றன. முக்கியமாக 'கியூமஸ்' மண்ணில் காணப்படுகின்றது. மண்ணில் காணப்படும் பற்றீரியாவிற்கு இது உணவாகின்றது. மண்ணில் வாழும் மிருகங்களின் எச்சங்கள் தாவரம் வளர்வதற்கு உதவுகின்றது. மண்ணில் காணப்படும் புழுக்கள் மிகவும் முக்கியமானவை. மண் வளத்திற்கு இவை உதவுகின்றன.★

# மயக்கமா? குழப்பமா?

*'மனம் சொல்கிறபடியெல்லாம் கேட்டால் மனிதன் மகிழ்ச்சியோடு வாழலாம்!'*

*இது ஒரு மனிதனின் நம்பிக்கை. மனம் சொல்லியது... 'அழகான வீடு ஒன்றைக் கட்டிக் கொள்!'*

*அந்த மனிதன் அழகான வீட்டைக் கட்டிக் கொண்டான். இயற்கை எழில் கொஞ்சும் மலையடி வாரம். அதை ஒட்டினாற்போல மிகப் பெரிய ஏரி. சுற்றிலும் பசுமையான மரங்கள். திரும்பிய இடமெல்லாம் வண்ண வண்ணப் பூக்கள். இவற்றின் நடுவே அந்த வீட்டை உருவாக்கினான்.*

*ஒரு நல்ல நாளில் அந்த வீட்டில் குடியேறினான். தினமும் வேளாவேளைக்குச் சாப்பிட வேண்டியது. வெளியே வரவேண்டியது. இயற்கைக் காட்சிகளை ரசிக்க வேண்டியது. இதுதான் அவன் வேலை!*

*இப்போது மனம் சொன்னது... 'இனி இந்த வீடு வேண்டாம்... இதை விற்று விடு!'*

*அந்த மனிதன் உடனே செயலில் இறங்கினான். ஒரு தரகரைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்துவந்தான்.*

*''தரகரே! இந்த வீட்டை விற்க வேண்டும்!''*

*தரகர் வீட்டைப் பார்த்தார். அவருக்கு வியப்பு! ''இவ்வளவு அழகான வீட்டை எதற்காக விற்க நினைக்கிறீர்கள்?''*

*''எனக்கு இந்தச் சூழல் சலித்துப் போய்விட்டது. அவ்வளவுதான்!''*

*நன்றாக யோசித்துச் சொல்லுங்கள்.*

*''யோசித்துப் பார்த்துவிட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். எனவே, நான் சொன்னதைச் செய்யுங்கள்!''*

*''சரி... உங்கள் விருப்பம்.'' தரகர் போய்விட்டார்.*

*இந்த மனிதன் தனக்கென்று வேறு ஒரு வீடு தேடினான்.*

*இதுவும் அழகான சூழ்நிலையில் அமைய வேண்டும் என்று விரும்பினான். எனவே, தினந்தோறும் செய்தித்தாள்களில் விளம்பரப் பக்கங்களைப் புரட்டினான்.*

*''வீடு விற்பனைக்கு' என்கிற பகுதியைத் தேடினான். ஒரு விளம்பரம் கண்ணில் பட்டது.*

*'அழகான பளிங்கு மாளிகை... விற்பனைக்குத் தயார்... ஏரி சூழ்ந்த எழில் மனை... மனங்கவரும் மலைச்சாரல்.... இதயத்தைக் குளிரவைக்கும் இயற்கைச் சூழல்... தேவைக்கு அணுகுங்கள்!' என்று சொல்லி தொடர்புக்குத் தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்திருந்தார்கள்.*

*மனம் சொல்லியது.*

*'விடாதே... இதுதான் நீ தேடிய வீடு... உடனே வாங்கு!'*

*உடனே தொலைபேசியை எடுத்தான். தொடர்பு கொண்டான்.*

*''வீடு விற்பனைக்கு... விளம்பரம் பார்த்தேன்...''*

*''சரி...!''*

*''அதை நான் வாங்க விரும்புகிறேன்... விலை எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை!''*

*''மன்னிக்கவேண்டும்! அதை நீங்கள் வாங்க முடியாது.....!''*

*''ஏன்?''*

*''அது உங்கள் வீடுதான்.... உங்களிடம் வந்த தரகர் நான்தான்... நான்தான் அந்த விளம்பரத்தைப் பத்திரிகைகளில் கொடுத்திருக்கிறேன்!''*

*மனிதனுக்கு மயக்கம் வந்தது.*

*மனம் இப்படித்தான்... அது சொல்கிறபடியெல்லாம் கேட்காதீர்கள். நீங்க செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். மனம் சொல்வதைக் கவனியுங்கள். அறிவால் அலசுங்கள். அப்புறம் செயலில் இறங்குங்கள். இப்படிச் செய்தால் குழம்பவேண்டிய அவசியம் இருக்காது. நீக்ரோ ஞானி ஒருவர் சொன்னது இது...*

*''கடவுளின் ஆட்சியிலும் தேர்தல் உண்டு. அங்கு மூன்று வாக்குகளே செல்லுபடியாகும். கடவுள் உங்களுக்கு ஆதரவாக வாக்களிப்பார். சாத்தான் எதிர்த்து வாக்களிப்பார். இரண்டும் சமமாகிவிடும். கடைசியில் உங்கள் வாக்குத்தான் உங்கள் தலைவிதியை முடிவு செய்யும்!''★*



*அறிவுள்ள விலங்குகளில் குரங்கும் ஒன்று. இதனாற்றான் போலும் 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' எனக் கூறப்படுகிறது. இதன் உடலமைப்பும் ஏறக்குறைய மனிதனின் உடலமைப்பை ஒத்ததே.*

*குரங்குகள் பெரும்பாலும் மரங்களிலேயே வாழும் இயல்புடையவை. இவற்றில் சில பிரிவுகளின் வால் நீளமாகவும் சிலவற்றின் வால் குட்டையாகவும் இருக்கும். ஒரு சிலவற்றுக்கு வால் கிடையாது. அமெரிக்காவில் காணப்படும் ஒரு வகைக் குரங்கு தனது வாலையும் கையைப்போன்று பயன்படுத்தும்.*

*குரங்குகள் பெரும்பாலும் கூட்டமாகவே வாழும். வெப்பமண்டலக் காடுகளிலேயே இவை பெரும்பாலும் வாழ்கின்றன. இலை, பூ, காய், பழம், பழத்தின் விதை என்பவை இவற்றின் உணவு. சில குரங்குகள் ஓணான், பல்லி, தவளை என்பவற்றையும் பிடித்து உண்கின்றன.*

*தாம் உண்ணும் உணவைச் சேமித்து வைக்கப் பல குரங்குகளுக்குக் கன்னத்தின் உட்பகுதியில் பை ஒன்றுண்டு. குறும்பு செய்யும் வழக்கமுள்ள குரங்குக் கூட்டம் பெரும்பாலும் ஏனைய விலங்குகளுக்குத் தீங்கு விளைவிப்பதில்லை. தமது குட்டிகளை அன்போடு பேணிக் காப்பதில் தாய்க் குரங்குகள் தனிக் கவனம் செலுத்துவது வழக்கம். மனிதரைப் போன்று குரங்குகளும் தமது உணர்ச்சிகளை முகபாவத்தால் வெளிப்படுத்துகின்றன.*

*குரங்களில் பலவகை உள்ளன. கொரில்லா, சிம்ப்பன்சி, ஊராங் ஊட்டான், கிபள் என்பவை வாலில்லாக் குரங்குகள். அவை மனித உருவத்தைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. கொரில்லா வகைக் குரங்கு உருவத்தில் பெரியது. வலிமை மிக்கது. சராசரி ஒரு மனிதனளவு உயரம் கொண்டது. ஆயினும் மனிதனை விட நிறை கூடியது. சிம்ப்பன்சி குரங்குகள் ஏனைய இனக் குரங்குகளைவிட அறிவு கொண்டது. இவை தவிர குல்லாக் குரங்கு, அனுமான் குரங்கு, கருங்குரங்கு என வேறுவகைக் குரங்குகளும் உள்ளன. தலைமயிர் குல்லாய் போன்று அமைந்துள்ள குல்லாய்க் குரங்குகளை வேடிக்கை விளையாட்டுக்களைக் காட்டத் தக்க வகையில் மனிதர்கள் பழக்கி வைத்திருப்பதுண்டு. உருவத்தில் அணில் அளவுள்ள மிகச் சிறிய குரங்கினம் பிரேசில் நாட்டில் காணப்படுகின்றது.*

*தேவாங்குகளும் குரங்கு இனத்தைச் சேர்ந்தவையே. இவை பயந்த சுபாவம் கொண்டவை. இரவில் மட்டும் இரை தேடும் வழக்கம் கொண்டவை. அனுமான் வகைக் குரங்குகளுக்குக் கன்னப்பை கிடையாது. ஆனால் இரைப்பையிலுள்ள சிறு அறைகளில் அவை உணவைச் சேர்த்து வைத்துக் கொள்கின்றன. குரங்குகளைப் பயன்படுத்தி மருத்துவ ஆய்வுகளும் உளவியல் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.* ★

- ஜே.நிரோஜினி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org